Registered as a Newspaper

விலை 12/=

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு

பக்கம் - 20

வார வெளியீடு

நாதம்-01 | செப்டெம்பர் 26 - ஒக்டோபர் 02, 2004 ஞாயிற்றுக்கிழமை | ஞாயிறு - 22



## புலிகள்-படையினர் புரிந்துணர்வு

## 17வது ஆண்டு நினைவு கூரப்படும் தியாகி திலீபன்

## முற்றத்தில் பிணம் வீட்டுக்குள் விருந்து

## போர் எச்சங்கள் சுமந்து நிற்கும் வக்கியெல்ல

## சிந்தனைக்கு



திலீபனின் தியாகம் இந்திய மாயையைக் கலைத்தது தமிழீழத் தேசிய உணர்வைத் தட்டியெழுப்பியது. இந்தத் தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் அமைந்தது.

மேதகு. வே.பிரபாகரன்.
தமிழீழத் தேசியத் தலைவர்

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி :- 065-2226110,
065-2226303,
batti@eezhanatham.com
26-09-2004

## நினைவு கூரப்படும் இரு துருவங்கள்

தமிழீழ விடுதலை வரலாற்றில் தியாகி திலீபன் ஒரு வைரமான பெரும் சுவர். தமிழினம் விடுதலையை வென்றெடுப்பதற்காகத் தன்னுயிரை ஈகை செய்த திருநாள் இன்று.

செப்டெம்பர் 26ம் திகதி தமிழ்த்தேசிய விடுதலை வரலாற்றில் மிகப் பெரும் பதிவை 1987ம் ஆண்டிலிருந்து சுமந்து கொண்டது.

ஈழ மண்ணை அமைதிப்படை எனக் கூறி ஆக்கிரமித்த இந்திய வல்லாதிக்கப்படை தமிழினத்தின் உரிமைகளை வழங்க மறுதலித்தது. இந்திய இலங்கை ஒப்பந்தம் ஈழத் தமிழினத்தற்கான ஒப்பந்தம் எனக் கூறி தமது வல்லாதிக்கத்தை சிறிலங்காவில் காலூன்ற நினைத்த இந்தியா ஈழத்தமிழினத்திற்கு நயவஞ்சகத்தனமான துரோகமிழைத்தது. கொதித்தெழுந்தான் திலீபன். ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநோன்பிருக்கத் திடம் கொண்டான்.

தடுப்புக்காவல் கைதிகள் விடுதலை, அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படுவது, இடைக்கால அரசு நிறுவும்வரை போலிப்புனர்வாழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்படுவது, சிங்களப் பொலிஸ் நிலையங்கள் தமிழர் தாயகத்தில் திறக்கப்படுவது தவிர்க்கப்படல், ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படுதல், அரச பொதுக் கட்டிடங்களை ஆக்கிரமித்திருக்கும் படையினர் வெளியேறவேண்டும் இதுதான் திலீபனின் கோரிக்கைகள்.

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் முருகன் ஆலய முன்றலில் 15-09-1987 தியாகி திலீபன் தனது உண்ணாநோன்பினைத் தொடங்கினான்.

நீராகாரமின்றி பன்னிரு நாட்கள் இருந்து தமிழ்த் தேசிய விடுதலைக்காக தனது உயிரை ஈகைசெய்த விடுதலையின் மிகப் பெறுமதிமிக்க அந்தப் பொக்கிசம் தியாகி திலீபன் தான். அவனது ஆத்மா பூவுலகைவிட்டு அகன்றாலும் அவனது இலட்சியம் தமிழினத்தின் உணர்வுகள் இன்று வெளிக்கொணரப்படுத்கின்றது.

தமிழீழ விடுதலை வரலாற்றில் ஆயுதப்போராட்டம் மட்டுமல்ல அகிம்சை வழியிலும் மிகப் புனிதமான போராட்டத்தை தமிழினம் நடாத்தியுள்ளது என்ற வரலாற்றைப் பொன் எழுத்துக்களால் பொறிக்க வைத்து தியாகி திலீபன் வீரகாவியமாகிச் சென்றுள்ளான்.

அவனது 17வது அகவை நாளை தமிழினம் உவகை கொண்டு உணர்வு பூர்வமாக இன்று அனுஷ்டிக்கும் அதே சமயம் கடந்த 2001ம் ஆண்டு செப்டெம்பர் 27ம் திகதி மற்றும் ஒரு பதிவையும் தமிழினம் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் பயணத்தில் மிகப் பெறுமதி வாய்ந்த கேணல் சங்கர் சிங்களப் பேரினவாத சக்திகளின் திட்டமிட்ட தாக்குதல் ஒன்றில் வீரகாவியமானார்.

சிறிலங்காப் படையின் ஆளஊடுருவும் படையினர் புதுக்குடியிருப்புப் பகுதியில் ஊடுருவி மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் வீரச்சாவடைந்தார். அவரது வீரகாவியமும் திலீபனின் வரலாற்றுடன் இணைந்து கொண்டது. இன்று இந்த இருபெரும் துருவங்களுக்காக தமிழர் தாயகம் நினைவு கூருகின்றது. தமிழினம் தமது விடிவைப் பெறுவதற்கு இவர்களின் இலட்சியங்கள் நனவாக நாம் விடுதலைப் பயணத்திற்குக் கைகொடுப்போம்.

# வேறு வழியில்லை மக்களுக்கு!

**வரும் வாரம் சிறிலங்காவின் மக்களுக்கு பெரும் அதிர்ச்சி வைத்தியம் வழங்குவதாக அமையப்போகிறது. சிறிலங்காவின் அரசாங்கத் தரப்பு வெளியிடும் தகவல்கள் அதனைக்காத்திரமாக முன்னுணர்த்துகின்றன. பத்திரிகைகளில் வெளிவரும் தகவல்களை ஒழுங்காகப் பார்த்துவருகின்ற சாதாரண குடிமகன் ஒருவருக்கு இதயத் துடிப்புவீதம் கட்டுப்பாட்டைமீறி அதிகரிப்பது இயல்பாகி விட்டது.**

பொருண்மிய உதவிகள் அதிகரிக்கப்படும் என்று வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நம்பி வாக்களிப்பது சிங்கள மக்களின் பொதுவான இயல்பாக விளங்குகிறது. இந்தப் பண்பை அல்லது பலவீனத்தையே சிறிலங்காவின் இருபெரும் கட்சிகளும் தமது தேர்தற்காலத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி வருகின்றன. தற்போது ஜே.வி.பியும் இதில் இணைந்து கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு வாக்குறுதிகளின் தொகுதியையே கடந்த ஏப்ரல் 2ஆம் திகதிப் பொதுத்தேர்தலுக்கு முன்பாக ஐ.ம.சு. முன்னணி மக்கள் முன் வைத்தது.

இரண்டு கொத்து அரிசியையும், எட்டுறாத்தல் தானியத்தையும், சந்திர மண்டலத்திலிருந்தாவது கொண்டு வரப்படவிருந்த அரிசியையும் நம்பி வாக்களித்திருந்த சிங்கள மக்கள் இந்தமுறையும் தம்மீது எறியப்பட்ட கவர்ச்சிகரமான வாக்குறுதிகளின் வலைக்குள் வீழ்ந்திருந்தனர்.

ஆனால், அதன் விளைவோ நேர் எதிரானதாக அமைந்துவிட்டதுதான் பரிதாபமானது. இன்று அரிசி 'சந்திர மண்டலத்திலிருந்து வருகின்ற பொருளோ' எனச் சந்தேகிக்கக் கூடிய வகையில் 47ரூபாவைத் தாண்டி விலை போகிறது. இது 60 ரூபாவை தொடக்கூடுமெனவும் எச்சரிக்கப்படுகிறது. 'பட்டு வேட்டி பற்றிய கனவிலிருந்தவனின் கட்டியிருந்த கோவணமும் பறிபோனகதை' எனத்தமிழிலே இதனைக் குறிப்பிடலாம்.

சிறிலங்காவின் மக்களின் துன்பியல் இத்துடன் முடிந்துவிடப்போவ தில்லை. பாணின்விலை மூன்றுரூபாவால் அதிகரித்துவிட்டது. 1994ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வரும்போது 3/50 இற்கு பாண் வழங்குவதாகக் கூறியிருந்ததும், ஆட்சியைப் பிடித்ததும், அதை நடைமுறைப்படுத்தியதும், ஆட்சி நிறைவில் பாணின்விலை 11ரூபாவைத் தொட்டிருந்ததும் உங்களுக்கு நினைவுக்கு வரக்கூடும்.

போக்குவரத்துக் கட்டணங்கள் 16 வீதத்துக்கும் மேலாக அதிகரித்துவிட்டன. இப்போது மின்சாரம், தண்ணீருக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படப்போகின்றன. சமையல் எரிவாயுவின் விலை மேலும் அதிகரிக்கப்பட வேண்டுமென எரிவாயு நிறுவனங்கள் அழுத்தம்கொடுக்கின்றன.

தென்பகுதி நகரப்புற மக்கள் எரிவாயு விலையேற்றத்தால் இப்போதே தவியாகத்தவிக்கிறார்கள்.

ஆனால், இவை எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடக் கூடிய ஒரு பாரிய அதிர்ச்சி இனித்தான் வரப்போகிறது. மானியங்கள் வழங்குவதை அரசு நிறுத்திவிடப்போகிறது என நிதியமைச்சர் சரத்அமுனுகம வெளியிட்டிருந்த எச்சரிக்கை அமுலாக்கப்படப் போவதான பலமான அறிவிப்பொன்று வெளியாகியுள்ளது. டீசலுக்கான மானியம் விலக்கப்படப்போகிறது என்பதே இவ் அறிவித்தல்.

இதன் தாக்கம் எப்படி அமையப்போகிறது? டீசலுக்கு எவ்வளவு மானியம்

**-பு.சத்தியமூர்த்தி-**

வழங்கப்படுகிறது? இந்தத் தகவலைக் கவனியுங்கள். சிறிலங்காவின் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட உத்தியோக பூர்வமான தகவலின் படி ஒருலீற்றர் பெற்றோலை விற்றால் 50 சதமும்' ஒருலீற்றர் மண்ணெண்ணையை விற்றால் 2.50 சதமும், ஒரு லீற்றர் டீசலை விற்றால் 10ரூபாவும் நட்டம் ஏற்படுகிறது! அதாவது ஒரு லீற்றர் டீசலுக்கு குறைந்தது 10ரூபா மானியமாக அரசினால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்படுகிறது. இதனால் தான் சிறிலங்காவின் பொருளாதாரத்தை உறிஞ்சிக் குடிக்கும் பஞ்சபூதங்களில் ஒன்று எனப்பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை நிதியமைச்சர் சரத்அமுனுகம வர்ணித்திருந்தார்.

அப்படியாயின் டீசலுக்கான மானியம் விலக்கப்படுமாயின் அதன் விலை எத்தனை ரூபாவால் அதிகரிக்கப்போகிறது? ஒரு லீற்றரை விற்கும்போது 10 ரூபா நட்டம் ஏற்படுகிறதெனில் குறைந் தது 10ரூபாவைவிட அதிகமான ஒரு தொகையால் டீசலின்விலை அதிகரிக்கப்படக்கூடுமென எதிர்பார்க்க முடியும்!

டீசல் எதற்கெல்லாம் பயன்படுகிறது? போக்குவரத்து சாதனங்கள் பெரும் பாலானவற்றுக்கான எரிபொருள் டீசல் தான். அதுமட்டுமன்றிக் கைத் தொழிற்சாலைகளின் சக்திமூலமும் பெரும்பாலும் டீசல்தான். விவசாயிகளின் உழவு இயந்திரங்கள் லேண்ட் மாஸ்ரர்கள் அனைத்துக்குமே டீசல்தான் எரிபொருள். இவைஅனைத்துமே ஏற்றியிறக்கல், உற்பத்தி என ஒவ்வொரு பொருளுடனும், அதன் இடத்துக்கிடம் நகர்த்துவதிலும் நேரடியாகத் தொடர்பு பட்டிருக்கின்றது.

ஆகவே டீசலின் விலை அதிகரிக்குமாயின் மறுகணமே அனைத்துப் பொருட்களினதும் விலைகள் மேலும் மேலும் அதிகரிக்கும். போக்குவரத்துக் கட்டணங்கள் மீளவும் உயரும். இதை மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர்? விலைவாசி அதிகரிப்புக்கு எதிரிடையாக மக்களின் வருமானம் எவ்வாறிருக்கிறது? அதைக்கேட்டு எங்களின் வயிற்றெரிச்சலை ஏனப்பாகிள்ளுகிறாய் என்றா கேட்கிறீர்கள்? தெரிகிறது. தொழிலாளர்களின் கூலிகளோ, உத்தியோகத்தர்களின் சம்பளங்களோ சிறிதளவும் அதிகரிக்கவில்லை. அதிகரிப்பதாகவும் தெரியவில்லை. தொழிற்சங்கங்கள் தலை கீழாக நின்றும் எந்தப்பலனும் இதுவரை கிடைக்கவில்லை. வீதியில் இறங்கப் போகிறோம் என்ற எச்சரிக்கை மெல்ல மெல்ல மேலெழுகிறது. இதனிடையே தொழிற்சங்கங்கள் கோரிய சம்பள உயர்வினை வரவு-செலவுத்திட்டத்திலேயே வழங்கமுடியும் என்று அரசாங்கம் உடனடியாகவே அறிவித்துவிட்டது. அப்படியாயின் 3000ரூபா இடைக்காலக்கொடுப்பனவையாவது வழங்குங்கள் எனக்கோரி வந்த தொழிற்சங்கங்கள் தமது கோரிக்கையை இப்போது உயர்த்தியுள்ளன. இன்றையவிலை அதிகரிப்பு வேகத்துக்கு 3000ரூபா போதாது. 5000ரூபா இடைக் காலக் கொடுப்பனவை

தொடர்ச்சி 19ம் பக்கம்

**இதன் மறுபக்கமாக அரச தரப்பிலிருந்து குறிப்பாக நிதியமைச்சிலிருந்து வந்திருக்கும் தகவலோ வயிற்றில் புளியைக் கரைப்பதாக அமைகிறது. நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக வரவு-செலவுத் திட்டத்தைப் பூரணப்படுத்த முடியாத நிலையில் நிதி யமைச்சு உள்ளதாம்.**

# தியாகி திலீபனின் 17வது நினைவு நிகழ்வுகள்

## தமிழர் தாயகத்தில் அனுஷ்டிப்பு



இந்திய வல்லாதிக்க சக்திகளுக்கு எதிராக உண்ணா விரத நோன்பு இருந்து உயிர் நீத்த தியாகி திலீபனின் பதினேழாவது நினைவு தினம் இன்று தமிழர் தாயகம் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

கடந்த 1987ம் ஆண்டு 9ம் மாதம் 15 ம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையினை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து பன்னிரண்டாவது தினத்தில் உயிர் நீத்த தியாகி திலீபனின் உணர்வு பூர்வமான எழுச்சி நிகழ்வுகள் இன்று நடைபெறுகின்றன.

தமிழர் தாயகம் எங்கும் விழாக்கோலம் பூண்டு காணப்படுகின்றது. அடையாள உண்ணாவிரதங்கள், நினைவுக்கருத்தரங்குகள், சிரமதானப்பணிகள் என்பன நடைபெற்றுள்ளதுடன் பிரதான நிகழ்வுகள் இன்று இடம்பெறுகின்றன.

# போர் நிறுத்தத்தைப் பலப்படுத்த புலிகள் படையினர் சந்திப்பு

போர்நிறுத்த உடன்படிக்கைக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாமல் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் செயற்பட விடுதலைப் புலிகளும் படையினரும் இணக்கம் கண்டுள்ளனர்.

கடந்த 22ம் திகதி புதன் கிழமை மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தவர் மேஜர் ஜெனரல் ஜோன்புறுவ் ஹொவ்டே தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான சந்திப்பின் போது இவ்வுடன் பாடு காணப்பட்டுள்ளது.

மேலும் எதிர் காலத்தில் இரு தரப்பினரிடையேயும் நல்லுறவை வளர்க்கவும் பரஸ்பரம் புரிந்துணர்வைக் கட்டியெழுப்பி சமாதான நடவடிக்கையை மேலோங்கச் செய்வதாகவும் இணக்கம் காணப்பட்டதுடன் இருதரப்பினரும் மாதம் இரு முறை சந்திப்புக்களை மேற்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

சுமார் மூன்று மணி நேரம் நடைபெற்ற இச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் மட் அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், தலைமைச் செயலகப் பொறுப்பாளர் மார்ஷல் மட்டு அம்பாறை நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பா.தயா மோகன் அம்பாறை மாவட்ட அரசி யல் துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன், மட்டு அம்பாறை ஊடகத் துறையைச் சேர்ந்த மனோஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறிலங்காப் படைத்தரப்பில் பிரிக் கேடியர் விஜயகுணவர்த்தன, கேணல் லக்சிறி அமரதுங்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜமால்டீன் விசேட அதிரடிப்படை பொலிஸ் அத்தியட்சகர் ரத்நாயக்க மற்றும் டி.சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தரப்பில் மேஜர் ஜெனரல் றொண்ட் புறுவ்ஹொவ்டே பதில் கடமைத் தலைவர் ஸ்ரீன் ஜேகன்சன் மற்றும் ஜென்ஸ்வஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பச்சை மரங்கள் வெட்டுவதற்குத் தடை

விறகு தவிர்ந்த ஏனைய நோக்கத்திற்காக பச்சை மரங்களை வெட்டுவதும், கொண்டு செல்வதும் கடந்த 19ம் திகதி ஞாயிற்றுக் கிழமையிலிருந்து தடைசெய்யப் பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தின் மட் அம்பாறை கிளை அறிவித்தல் விடுத்துள்ளது.

அவ்வறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது விறகுக்குப் பயன்படுத்தப்படும் மரங்கள் கூட பச்சை மரங்களாகவோ வேறு பாவனைக்குப் பயன்படுத்தப்படும் தகமையுள்ள மரங்களாகவோ இருப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும். மீறும் எவரும் உச்சபட்ச நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் அவ்வறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தியாகி திலீபனின் நினைவாக மாபெரும் சிரமதானப் பணி

தியாகி திலீபனின் 17 வது ஆண்டு நினைவு விழாவை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல் துறையினரால் பல்வேறு பட்ட சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

பட்டிருப்புக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வாவின் ஏற்பாட்டில் களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் மணல் வீதிகள் சில களிமண் இடப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டன. மற்றும் கொக்கட்டிச்சோலை பிரதேசப் பொறுப்பாளர் நேதாஸ் ஏற்பாட்டில் கொக்கட்டிச் சோலை பொதுச் சந்தை கட்டடத் தொகுதி மற்றும் மகிழடித்தீவு பொது வைத்திய சாலை, பிரதான பாதை என்பன துப்பரவு செய்யப்பட்டன.

இதே வேளை விடுதலைப் புலிகளின் மாவடிமுன்மாரி அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் கயல் விழி தலைமையில் தும்பங்கேணி சுர வணையடியூற்று பாடசாலை, மற்றும் பொது மயானம், பிரதான வீதிகள் என்பன சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டன.

இச்சிரமதானப் பணிகளில் விடுதலைப் புலி உறுப்பினர்கள், சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள், பாடசாலை மாணவர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# யாழ் நகரில் விடுதலைப் புலிகள் படையினர் சந்திப்பு

போர்நிறுத்தக் கண்காணிப்புத் தலைவர் அனித்தா தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் போர்நிறுத்தக் கடல் கண்காணிப்பாளரும் கலந்துகொண்டிருந்தார்.

வியாழனன்று நடைபெற்ற சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலின்பம் ஆகியோ ரும். ஸ்ரீலங்காப் படைத்துறைத் தரப்பில் யாழ்மாவட்டத் தளபதி சுனி ல் தென்னக்கோன், மாவட்ட ஸ்ரீலங்காப் படைத்துறையின் உதவிக் கட்டளை அதிகாரி ரணவீர, ஸ்ரீலங்கா காவல் துறை அதிகாரி தயாசென விரத்தின, மாவட்ட ஸ்ரீலங்காக் கடற்படைக் கட்டளைத் தளபதி ரணசிங்க, காரைநகர்க்கட்டளை அதிகாரி பிறேம்ரட்ண ஆகியோர்ரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி இன்றைய சந்திப்பு சுமூகமாக இடம்பெற்றிருந்ததாகவும், இது வழமையாக இடம் பெறும் மாதாந்தச் சந்திப்பு என்றும் தெரிவித்தார்.

# செய்தி குவியல்

## தியாக தீபம்

சிங்களப் படைகளால் சிதறின கொடுமைகள்  
எங்குமே மக்களின் அழுகுரல் ஒலித்தன  
பொங்கி எழுந்திட்டான் திலீபன் வேங்கையும்  
தங்கித் தவம் செய்தான் நல்லூர் முற்றத்தில்.

உணவு இன்றியே தாங்கினான் விரதத்தை  
கனவு நினைவெல்லாம் தமிழ் மண்ணுக்காய் மலர்ந்தது.  
தினம் தினம் அவனுயிர் ஈழத்தை நினைத்தது  
மனமும் இறுதியில் சரித்திரம் படைத்தது.

திறந்த கண்களும் திசைமாறி நின்றன  
பயனற்ற கதைகளும் பரவலாய்க் குறைந்தன  
சிறந்த தவத்தினை எய்திய உத்தமன்  
இறந்த மூச்சும் ஈழம் என்றது.

ஊன் உடல் ஆவியை மண்ணுக்காய் ஈந்தவன்  
உயிரைக் கொடுத்துமே ஈழத்தைக் காத்தவன்  
தமிழரைக் காக்கவே தன்னை அழித்தவன்  
தமிழ் மகன் பெருமகன் தியாகி திலீபனே.

மக்கள் வெள்ளமாய் நல்லூர் வீதியில்  
பக்கம் பக்கமாய் வந்து குவிந்தார்கள்  
விக்கி விக்கியே விம்மிஅழுதார்கள்  
மானம் காத்திட்ட மறவனின் தியாகத்தால்.

மண் மானம் காத்துமே மாய்ந்திட்டான் மாவீரன்.  
தன்மானம் உள்ளவர் தமிழர்கள் அல்லவா?  
பொன்னாக ஒளி தந்த திலீபன் அண்ணா நீ  
உன் செயல் புரிய இனி யாருண்டு பாரினிலே.

அணையாத தீபமாய் அகிலத்தில் நீ வாழ்ந்தாய்  
நிலையாக உன் நாமம் நிலைத்திங்கு புகழ் பாடும்  
அணையாத தீபமே எமைவிட்டு அகன்றாயோ  
உரிமை காக்க உயிர் தந்த உத்தமனும் நீயன்றோ.

பி.கமல்  
அரசடித்தீவு.

# கருணாவின் சகோதரன் ரெஜி உட்பட மூவர் சுட்டுக் கொலை

கருணாவின் சகோதரன் ரெஜி உட்பட தேசவிரோத கும்பலைச் சேர்ந்த மூவர் ஜெயந்தன் படையணிக் குழுவால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.




ரெஜி

கருணாவின் சகோதரனான ரெஜி என அழைக்கப்படும் வினாயகமூர்த்தி , சிவனேசதுரை மற்றும் துமிலன் , எழிலன் ஆகிய மூவருமே இவ்வாறுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பொலநறுவை மாவட்டத்தின் எல்லையிலுள்ள மாதுரு ஓயாவை அண்மித்த காட்டுப் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் அமைப் பிலிருந்து கருணா நீக்கப்பட்டதையடுத்து கருணாவின் சகோதரனான ரெஜி கருணாவுடன் இணைந்து கொண்டார்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் இடம் பெற்ற சில தேசவிரோத செயல்களுக்கும் இக்கும்பல்களுக்கும் தொடர்பு இருந்துள்ள்தாகவும் இக் கும்பலை சிறிலங்கா படைப் புலனாய்வுப் பிரிவு பயன்படுத்தி தேசவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததனர்.



துமிலன்

# மீண்டும் ஒரு போருக்கு இந்தியா தூண்டுகிறதா?

## தமிழ் மாணவர் ஒன்றியம்

போர்நிறுத்தம் ஏற்பட்டு சமாதானத்துக்கான ஒரு சூழல் ஏற்பட்டிருக்கும் இந்தத் தருணத்தில் மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்க உதவுவது போன்று இந்தியாவின் செயற்பாடுகள் அமைவதாக திருகோணமலை தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக தியாகி திலீபனின் நினைவுக் காலப்பகுதியில் இந்தியா ஆயுதரீதியாக ஒத்துழைப்பினை வழங்க முன்வந்ததிருப்பது போரைத் தூண்டுவதாக அமைந்துள்ளதாக மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

விமானந் தாங்கிக் கப்பல் ஒன்றை இந்திய அரசாங்கம் சிறிலங்காவுக்கு வழங்க முன்வந்துள்ளமையின் மூலம் அதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# தயா சந்தகிரிக்கு புதிய பொறுப்பு

சிறிலங்காவின் கடற்படைத் தளபதி தயாசந்தகிரி முப்படைகளின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒரு கடற்படைத் தளபதி இந்தப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டிருப்பது சிறிலங்கா படைத்துறை வரலாற்றில் குறிப்பாக ஈழப்போர் தொடங்கியபின் இதுவே முதற் தடவை. இந்த நியமனத்தை இரண்டு விதமாக வியாக்கியானம் செய்யலாம். முதலாவது, இது ஒருவிசுவாச நியமனம். இரண்டாவது, இது இலங்கை அரசாங்கத்தின் போரியல் மூலோபாய மாற்றம் ஒன்றைக் குறி



க்கும் நியமனமாக இருக்கலாம் என்பது.

முதலாவதின்படி, சந்திரிகா தனக்கு மிகவும் விசுவாசமான ஒரு தளபதிக்கு மேற்படி பொறுப்பைத் தந்ததன் மூலம் முப்படைகள் மீதிலுமான தனது பிடியை இறுக்கியிருக்கிறார் என்பது. அல்லது அவர் தயா சந்தகிரியின் விசுவாசத்திற்குப் பரிசளித்திருக்கிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம். அல்லது யுத்தகாலங்களில் தரைப்படைத் தளபதிகளுக்கே வழங்கப்பட்டுவந்த இந்தப் பொறுப்பை, யுத்தநிறுத்தகாலம் இது என்பதால் அதாவது சண்டை செய்யத் தேவையில்லாத ஒரு காலகட்டத்திற்குரிய நியமனமாக அவர் அதை கடற்படைத்தளபதிக்குத் தந்திருக்கிறார் என்றும் எடுத்துக்கொள்ளலாம்.



ஆனால் இதெல்லாம் ஒரு பெரிய பிரச்சினை இல்லை. பிரச்சினை எதுவெனில், இரண்டாவது வியாக்கியானம்தான். அதைக்குறித்தே தமிழர்கள் அதிகம் உசாராகவும் அசாதாரண முன்னெச்சரிக்கையுணர்வோடும் இருக்கவேண்டியிருக்கும். எனவே அந்த இரண்டாவது வியாக்கியானத்தைப் பார்ப்போம். அதாவது சிறிலங்கா படைத்துறை தனது போரியல் மூலோபாயத்தை மாற்றுவதற்கு யுத்தநிறுத்தத்தை ஒரு கால அவகாசமாகப் பயன்படுத்துகிறதா? என்பது, இதை சிறிது விரிவாகப் பார்ப்போம்.


சில ஆண்டுகளுக்கு முன்பு (ஆண்டு சரியாக ஞாபகத்தில் இல்லை - அநேகமாக றிவிறச இடப்பெயர்விற்கு சிறிது முன் பின்னாக இருக்கலாம்) சிறிலங்காப் படைத்துறையின் ஓய்வுபெற்ற இரண்டாம் நிலை அல்லது மூன்றாம் நிலைத் தளபதி ஒருவர், ஐலன்ட் பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அவருடைய பெயரை முழு அளவில் ஞாபகப்படுத்த முடியவில்லை. ஆனால் அது ஏதோ ஒரு பெரேரா என்று முடிந்ததாக ஒரு சின்ன ஞாபகம். அந்தக் கட்டுரை அதிகம் பெரியதல்ல. ஆனால் மிகவும் ஆழமானது. அது அப்போதிருந்த (இப்பொழுது வரையிலும் உள்ள) சிறிலங்காவின் யுத்த மூலோபாயத்தை நிராகரித்து தனது தரப்பு நியாயத்தை ஒரு கணிதச்சமன்பாட்டை நிறுவுவதுபோல நிறுவியிருந்தது. அந்தக் கட்டுரையின் சாரம்சம் வருமாறு

இலங்கை ஒரு தீவாயிருப்பதால் அதன் பாதுகாப்பு மூலோபாயம் எனப்படுவது அதிக பட்சம் கடல்மைய மூலோபாயமாகவே இருக்க வேண்டும். இதன்படி கடற் படையைத்தான் பெருப்பிக்கவும் பலப்படுத்தவும் வேண்டும். ஆனால் சிறிலங்காவின் எல்லா அரசாங்கங்களும் தரைப்படையைதான் அளவிற்கு மிஞ்சி வீங்க வைத்துள்ளன.

புலிகளின் பலம் எனப்படுவது (என்று அந்தக்கட்டுரை கருதுவது) அவர்களுடைய விநியோக வழிகள்தான். இந்தக் கடல் வழி விநியோகவழிகளை அடைத்து விட்டால் புலிகளிற்கு விநியோகம் இல்லாது போய்விடும்.எனவே ஒரு கட்டத்துக்கும் மேல் புலிகளின் போர்த் திறன் வளரமுடியாது.

இப்படி புலிகளின் கடல் விநியோகவழிகளைத் தடுக்கவல்ல ஒரு கடற்பாதுகாப்பு மதிலைப் போடுவதற்கு பலமான ஒரு கடற்படை வேண்டும். அதோடு அந்தக்கடற்படையிடம் ஒரு வான்படை அலகும் இருக்கவேண்டும். இதன்மூலம் புலிகளின் விநியோகவழிகளை மூடிவிட்டால் குறிப்பிட்ட ஒரு கால கட்டத்துக்குப்பின் தொடர்ச்சியான விநியோகமற்ற ஒரு நிலையில் முடக்கப்பட்டிருக்கும் புலிகளை தரைப் படையின் படை நடவடிக்கைகளால் நசுக்கிவிடலாம்.

இதை இப்படிச்செய்வதென்றால் முதலில் கடற்படையின் பருமனை இப்பொழுதிருப்பதைவிட பல மடங்கு அதிகரிக்வேண்டும். அப்படி கடற்படையை பெருப்பிக்கும் வேலைகளைச் செய்துகொண்டிருக்கும்போதே தரைப்படையின் பருமனையும் குறிப்பிட்ட ஒரு விகிதத்திற்கு குறைத்துக்கொண்டு வர வேண்டும். அதாவது அளவிற்கு மிஞ்சி வீங்கிக்காணப்படும் தரைப்படையின் பருமனைக்குறைக்கும் நடவடிக்கையும் தரைப்படையோடு ஒப்பிடுகையில் சிறியதாகக் காணப்படும். கடற்படையின் பருமனைப் பெருக்கும் நடவடிக்கையும் சமாந்தரமாகச் செய்யப்படவேண்டும்.



இதுதான் அந்தக்கட்டுரையின் சாராம்சம். இதன்படி புலிகளைத் தோற்கடிப்பது என்பது அவர்களை கடல்வழியாக சுற்றிவளைப்பதிலிருந்தே தொடங்கப்படவேண்டும் என்ற தொனி அந்தக்கட்டுரையில் காணப்பட்டது. அதோடு அப்போதிருந்த (இப்பொழுதுமுள்ள) வீங்கிய தரைப்படை நாட்டிற்கு - அதுவும் போரில் ஈடுபடும் ஒரு நாட்டிற்கு மேலதிக சுமை என்றமுடிவிற்கு நாம் வரக்கூடிய விதமாக அந்தக்கட்டுரை அமைந்திருந்தது.

தற்சமயம் கொழும்பில் நிகழ்ந்துள்ளபடைத்துறைக் கட்டமைப்பு மாற்றம் மேற்படி கட்டுரையை தவிர்க்கவியலாதபடி ஞாபகத்திற்கு கொண்டுவந்தது.

அந்தக்கட்டுரை வெளிவந்த காலம் கடுஞ்சண்டை நடந்துகொண்டிருந்தது. எனவே தரைப்படையின் அளவைக்குறைத்து கடற்படையின் அளவைப் பெருக்கக்கூடிய ஒரு கால அவகாசமும் ஓய்வும் இல்லாதிருந்த ஒருகாலகட்டம் அது. எனவே இப்பொழுது நிலவும் யுத்தநிறுத்தச் சூழலை அதற்கு வசதியாகப்பயன்படுத்த அரசாங்கம் முயல்கின்றதா?

# யுத்த மூலோபாயத்தில் மாற்றம்

தயாசந்தகிரி பதவியேற்ற பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போது கடற்படையின் ஒரு பகுதியாக வான்படை அலகு ஒன்றை உருவாக்குவது பற்றியும் கேட்கப்பட்டதை இங்கு சுட்டிக்காட்டவேண்டும்.

தவிர, அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய கடற்படைப்பீடத்தின் கட்டளைத்தளபதியின் வருகை, மற்றும் இந்தியக் கடற்படைத் தலைமை அதிகாரியின் வருகை என்பவற்றோடு, அமெரிக்காவிடம் இருந்து கறேஜஸ் கப்பலை வாங்கியது, இந்தியாவிடம் இருந்து மேலும் ஒரு கப்பலை வாங்கவிருப்பது போன்ற எல்லாவற்றையும் கூட்டிக்கழித்துப்பார்த்தால் இந்த அச்சம் மேலும் அதிகரிக்கும்.

குறிப்பாக திருகோணமலையின் பாதுகாப்பைக் குறித்து அவர்கள் அதிகம் பேசிவருவதும் இதோடு


**நிலாந்தன்**

தொடர்பு படுத்திச் சிந்திக்கப்படவேண்டிய ஒரு விசயம்தான்.

ஏற்கனவே இந்திய -சிறிலங்கா கடற்படைகளிற்கிடையில் நெருக்கமான உறவும் உளவுத் தகவல் பரிமாற்றமும் உண்டு. இது தவிர இந்திய மீனவர்களை ஈழத்து மீனவர்களோடு மோத விடுவதில் இரு நாட்டுப் புலனாய்வு நிறுவனங்களும் வெற்றி பெற்றுவிடத்துடிக்கின்றன. இந்நிலையில் மீனவர்களிற்கிடையில் விரோதத்தை உண்டாக்கி அதைப் பேணுவதன்மூலம் கடலில் ஒரு வித உளவியல் மதிலைப்போடும் அதேசமயம், இந்தியக் கடற்படையும் சிறிலங்காக் கடற்படையும் நெருங்கி ஒத்துழைப்பதன்மூலம் மெய்யாகவே கடலில் ஒரு ரோந்து வேலியைப் போட்டுவிடலாம் என்று இரு நாட்டுக் கடற்படைகளும் நம்புகின்றன.

அவர்களிற்கு இப்பொழுது உறுத்தலாயும் பிரச்சினையாயும் இருப்பது கடற்புலிகளின் விரைந்த வளர்ச்சிதான். இந்தப்பிராந்தியத்தில் ஒரு மூன்றாவது கடற்படை இருப்பதை இந்தியா விரும்புவதாகத் தெரியவில்லை. இடைக்கால நிர்வாக ஏற்பாடு எதிலும் கடற்புலிகளின் இருப்பை நியாயப்படுத்தக்கூடிய எந்தவொரு ஏற்பாட்டையும் அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கையைப் போல கடற்புலிகளைப்பற்றி துலக்கமாக வரையறுக்காத எந்தவொரு ஏற்பாட்டையும் இந்தியா ஏற்றுக்கொள்ளும் என்று தோன்றவில்லை.

எனவே யுத்தமூலோபாயத்தை அதிகம் கடல்சார்ந்ததாக மாற்றுவதன்மூலம் கடற்புலிகளின் வீச்செல்லையை மட்டுப்படுத்துவதோடு நீண்டகால நோக்கில் புலிகளை சுற்றிவளைத்து மடக்கி விடலாம் என்று கொழும்பில் உள்ள போரியல் நிபுணர்களும் அவர்களுடன் சேர்ந்து சிந்திக்கும், இந்தப்பிராந்தியத்தில் கடற்புலிகளின் பிரசன்னத்தை விரும்பாத எல்லாச் சக்திகளும் திட்டமிடக் கூடும். ஆனால் இதில் அவர்களிற்



குள்ள நடைமுறைப் பிரச்சினைகள் இரண்டு. முதலாவது, முன்பு சொல்லப்பட்ட அந்தக்கட்டுரை எழுதப்பட்டகாலத்தில் இருந்த கடற்புலிகள் அல்ல இப்பொழுதிருப்பது. கடந்த ஒரு தசாப்த காலத்துள் கடற் புலிகள் பெற்றிருக்கும் அபரிதமான வளர்ச்சியை வைத்துக்கூறுமிடத்து, அந்த ஓய்வுபெற்ற தளபதி அறிவுரை கூறியகாலம் கடந்துபோய்விட்டது என்றே சொல்லவேண்டும். இனி சிறிலங்கா கடற்படையை அசாதாரணமாகக் கட்டியெழுப்புவது என்பது கடற்புலிகளுடன் மோதித்தான் சாதிக்கப்பட வேண்டியிருக்கிறது. இது முதலாவது.



இரண்டாவது, யாழ்ப்பாணத்தைத் தக்கவைப்பதற்காக அங்கே பெருமளவு துருப்புக்களை முடக்கி வைத்திருப்பது என்பது. சிறிலங்கா இராணுவத்தில் ஏறக்குறைய 1/3 பகுதியளவு துருப்புக்கள் யாழ்ப்பாணத்தில் மினக்கெடவேண்டியிருக்கின்றது. யாழ்ப்பாணத்தைப்பிடித்து வைத்திருப்பதற்கு அவர்கள் கொடுக்கும் விலை இது. இந்தவிலை ஒரு சுமையாக மாறியதன் விளைவே பின்வந்த தோல்விகள் அனைத்தும். எனவே தரைப்படையைக்குறைத்து கடற்படையைப்பெருப்பிப்பது என்பது யாழ்ப்பாணத்தைப் பிடித்துவைத்துக் கொண்டிருக்கும்வரை சாத்தியப்படப் போவதில்லை. உண்மையில் யாழ்ப்பாணத்தின்மீது அவர்கள் பெற்ற வெற்றி எனப்படுவது போரியல் அர்த்தத்தில் ஒரு சுயபொறியே! எனவே யாழ்ப்பாணத்தை வைத்திருக்கும் ஆசை உள்ளவரை தரைப்படையின் பருமனை குறைப்பது கடினம் இப்படிப்பார்த்தால் யுத்த மூலோபாயத்தை கடல்சார்ந்ததாக அல்லது கடல்மைய மூலோபாயமாக மாற்றுவது என்பது நடைமுறையில் கடினமானது.

ஆனால்,யுத்த நிறுத்தத்தை எவ்வளவு காலம் நீடித்துச் செல்வது என்பதுபற்றி சந்திரிகாவிடம் இருக்கக் கூடிய ஒரு கால நிரலை வைத்துப் பார்த்தால்தான் இதுபற்றி திட்டவட்டமான முடிவுகளைக்கூறமுடியும். குறிப்பாக அமெரிக்க இந்தியக் கடற்படைகள் போட்டி போட்டுக்கொண்டு உதவ முன்வரும் இத்தருணத்தில் யுத்த மூலோபாயத்தை மாற்றும் வரையிலுமாவது யுத்தநிறுத்தத்தைப் பேணுவது என்ற ஒரு முடிவை அதாவது கொள்கைத் தீமானத்தை சந்திரிகா எடுப்பாராயிருந்தால் தமிழர்களும் வேறுவிதமாகவே சிந்திக்கத் தூண்டப்படுவர்.

# முற்றத்தில் பிணம்



ஒரு மனிதனுக்கு 120 பாகையில் தற்போது காய்ச்சல், குத்துக் கொழுவல் வீட்டுவைத்தியம், நாட்டுவைத்தியம், குளிசை, மருந்து எல்லாம் குடித்தும் போக மாட்டேன் என்கிறது. இனி உயிராப த்துக் கட்டத்தை நோக்கிச் செல்கின்ற நிலையில் வெளிநாட்டு வைத்தியர்கள் சிகிச்சையளிக்கின்றனர். அவர்களது சிகிச்சையும் பலனளிக்கா விட்டால் உயிராபத்துத்தானா உறவினர்கள் ஏக்கம்.

இப்படியான ஒரு நிலைக்குத்தான் தற்போது நமது அரசியல் பிரச்சினை தள்ளப்பட்டுள்ளது. சமாதான முயற்சி எனும் அந்த இரண்டரை வயதுக்கு ழந்தை தற்போது



இனவாதக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருக்கிறது. உள்ளூர் வைத்தியம் எல்லாம் பலனளிக்காத நிலையில் வெளி நாட்டு வைத்தியர்கள் சிகிச்சையளிக்க வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்குமிடையில் கடந்த 22-2-2002 கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் தற்போது போர் ஓய்வு நிலை மட்டும் தான் மின்னிக் கொண்டிருக்கின்றது.

அதன் செயல்திறன் அவ்வுடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு எதனையும் தீர்த்து வைக்கப்படவில்லை என்றே கூற முடியும். போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் இருதரப்பினருக்குமிடையில் ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் நடை பெற்றுள்ளன.

பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் தரப்பால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் எதனையும் அன்றைய ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் தீர்த்து வைக்கமுடியவில்லை. அழுக்குத் துணியை சலவைக் கல்லில் அடிப்பது போன்று இனவாத சக்திகள் போடும் கூச்சல்கள், எதிர்ப்புக்களால் சமாதான முயற்சி ஒரு ஆபத்தான நிலையை அடைந்து கொண்டிருக்கிறது.

ஆளும் கூட்டு அணி அரசாங்கத்துக்குள் இருக்கும் பஞ்சவர்ணங்களின் கொள்கைகளும், கோட்பாடுகளும் தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சூழலை அடையமுடியாத நிலையை எட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்குக் கிழக்கில் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை கோரி நிற்கின்றனர். கடந்த இருபது வருடத்திற்கு மேலாக சிதைக்கப்பட்ட தமிழர் தாயகத்தின் இயல்புச் சூழலை ஏற்படுத்தி பொருண்மிய வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைவை செயற்படுத்தும் போது ஒரு நம்பிக்கை வலுவடையும் இயல்பு சூழல் ஏற்படும்.இதனை சிங்கள இனவாதிகள் ஏற்கத் தயாராகவில்லை. பண்டா செல்வா ஒப்பந்தம் தொடக்கம் போர்நிறுத்த உடன்படிக்கை வரையும் சிங்கள இனவாதத்துக்குள் அந்த உடன்படிக்கைகள் தீக்கிரையாக்கப்பட்டு வந்துள்ளதை வரலாற்றை ஒரு கணம் புரட்டிப் பார்த்தால் புரிய முடியும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சமாதானத்துக்கான வழிமுறை கையாளல்களில் ஒரு தீர்க்கமான திட்டத்தை செயற்படுத்திதீர்வு காணும் மனோபாவத்துடன் இல்லை எதிர்வரும் 2006ம் ஆண்டுடன் ஜனாதிபதி அரியாசனத்திலிருந்து ஓய்வு பெறவேண்டிய ஒரு சூழலில் இன்னும் சிலகாலம் அரசியல் அரங்கில் வலம் வரவேண்டும் என்ற வடிவமைப்புக்களில் கவனம் செலுத்துகிறார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவங்களை பண்டாரநாயக்காவின் வாரிசுகளுக்குள் அடக்கி

## வீட்டுக்குள் விருந்து

வைக்க நினைக்கும் சந்திரிக்கா அம்மையார் மகிந்த ராஜபக்ஷ, மங்கள சமரவீர போன்ற மூன்றாவது நபருக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஏகபோக உரித்து சென்று விடக் கூடாது என்பதில் கவனம் செலுத்தி வருவதை அவதானிக்க முடிகிறது.

> மீண்டும் ஒரு ஜனாதிபதி தேர்தல் வரும் பட்சத்தில் அரசியல் யாப்பு விதிப்படி ஒருவர் இரு தடவைகள்தான் ஜனாதிபதியாக வரமுடியுமாகையால் தனது சகோதரரான அனுராவை ஜனாதிபதி வேட்பாளராக்கி அரியாசனத்தில் அமரவைப்பதற்கான தந்திரோபாயங்களை அம்மணி மேற்கொள்வதாக செய்திகள் கசிந்துள்ளன.

மீண்டும் ஒரு ஜனாதிபதி தேர்தல் வரும் பட்சத்தில் அரசியல் யாப்பு விதிப்படி ஒருவர் இரு தடவை தான் ஜனாதிபதியாக வர முடியுமாகையால் தனது சகோதரரான அனுராவை ஜனாதிபதி வேட்பாளராக்கி அரியாசனத்தில் அமரவைப்ப தற்கான தந்திரோபாயங்களை அம்மணி மேற்கொள்வதாக செய்திகள் கசிந்துள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தின் போது எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த மகிந்தராஜபக்ஷவை பிரதமராக்க வேண்டும் என்பதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் சில முக்கியஸ்தர்களும் கூட்டுச் சேர்ந்திருந்த ஜே.வி.பி.யினரும் விடுத்த வேண்டுகோளையடுத்து. ஜனாதிபதி தனிப்பட்டமுறையில் தீர்மானித்திருந்த லக்ஷ்மன் கதிர்காமருக்குப் பதிலாக மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டார். எனினும் இற்றைவரை ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான பனிப்போர் ஒரு தொடர் கதையாகிக் கொண்டிருக்கும் நிலையில் ஆளும்தரப்பு கூட்டுமுகாம் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்கக்கூடிய ஒரு சூழலை உருவாக்க முடியாத சூழலை உருவாக்கியுள்ளன.

ஏற்கனவே ஜனாதிபதிக்கும் ஜே.வி.பி.க்குமிடையில் இருந்துவரும் முறுகல் நிலையுடன் பிரதமர் விவகாரமும் ஆளும் தரப்புக்குள் கறுப்புப் புள்ளிகளை ஏற்படுத்தியுள்ளன.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் விடுதலைப்புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை வழங்கும் விடயத்தில் ஆளும் கூட்டு முகாம் ஆர்வம் காட்டத் தவறி விட்டது.

கட்சிக்குள் ஏற்பட்ட கரடு முரடுகளை சமப்படுத்திக் கொண்டு வெளியிலே விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கப்போகிறேன் என்று பூசி மெழுகுதல் வேலைகளையே ஜனாதிபதி மேற்கொண்டு வருகிறார். இது சமாதானத்துக்கான வெளிப்படுத்தலாக ஒரு போதும்அமையாது. ஐ.நா.பொதுச் சபையில் உரையாற்றிய ஜனாதிபதி அவர்களின் பேச்சு தற்போது ஆழமாக ஆய்ந்தறிந்து பார்ப்பின் மிக கவலைப்படவேண்டியதொரு பேச்சு சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான இதய சுத்தியுடனான பேச்சுக்கள் அதில் பொதிந்திருக்க வில்லை.

மிகவிரைவிலே பேச்சுக்களை ஆரம்பித்து விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை ஏற்படு த்தி சுமுகமான ஒரு நிலையை ஏற்படுத்தும் சாராம்சம் அதில் காணப்படவில்லை என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியது.

**- பிரவீனா -**

"ஓர் இனத்திற்கோ அல்லது ஒரு குழுவிற்கோ உரிமையை வழங்குவதாக மட்டும் இருக்கக்கூடாது. ஏனைய எல்லா பிரஜைகளுக்கும் உள்ளது போல அனைத்து தமிழர்களுக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று தம்மை கூறிக் கொள்ளும் ஒருகுழு தீவிரவாதம் மூலம் அதற்குப் பதில் தருவதை சரியான என்று நாம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம்"இவ்வாறு ஜனாதிபதி பொறுப்பற்ற விதத்தில் பேசியிருப்பது ஆழமாக சிந்திக்க வேண்டிய விடயம். தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக விளங்கும் விடுதலைப்புலிகள் விடுதலைப்பு லிகளின் ஏகதலைமைத்து வத்தை அங்கிகரிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற பிரதிநிதிகள் போன்றனவற்றை மழுங்கடித்து இன்றும் விடுதலைப் புலிகளை தீவிர வாதக்கு ழுவாக சித்திரம் தீட்டி சர்வதேச சமூகத்திடம் ஒப்புவிக்கும் தன்மையையே அவரது ஐ.நா.பேச்சு வெளிக் காட்டுகின்றது.

இன்று சர்வ தேச சமூகமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமாயின் அது விடுதலைப் புலிகளுடன் தான் பேசித் தீர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. விடுதலைப்புலிகளை தடை செய்துள்ள நாடுகளான அமெரிக்கா கூட விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் பேச்சு வார்த்தை நடத்தியே தீர்வு காண வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

சர்வதேச ரீதியாக தமிழ் மக்களின் ஏகபிரதிநிதி விடுதலைப்புலிகள்தான் மாற்றுக் குழுக்கள் எவையும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்துதான் சர்வதேச பிரதிநிதிகள் அடிக்கடி வன்னிக்கு வந்து விடுதலைப்புலிகளைச் சந்தித்து கலந்துரையாடிச் செல்வதுடன் போர்நிறுத்த உடன்பாடு சீர்குலைந்து விடக்கூடாது என்பதில் கவனம் செலுத்தியும் வருகின்றனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் பொறுப்பற்றவிதத்தில் ஜனாதிபதி ஐ.நா.வில் பேசியிருப்பது அவர் சமாதானப் பேச்சுக்களை விரைவாக ஆரம்பித்து தீர்வு காணும் சாத்தியப்பாட்டை வெளிப்படுத்த வில்லை என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அவரது போக்கு தமது கூட்டுமுகாமில் குடிகொண்டிருக்கும் இனவாதக் கும்பல்களுக்கு கும்பிடு போடும் நிலைப்பாட்டைத்தான் வெளிப்படுத்தியிருக்கின்றன. ஒரு பக்கம் தமது ஆளும் தரப்புக்குள் ஏற்பட்டி ருக்கும் அதிகாரப்போட்டி, இனவாதக் கூச்சல் என்பன அரசியலை செல்லரித்து நிற்கிறது. இவற்றைத் தவிர நாளும் பொழுதும் அத்தியாவசியப் பொருட்களின் விலை யேற்றம் இதனை கட்டுப்படுத்தும் எந்த வழிமுறைகளையும் அரசதரப்பு கையாளவில்லை. மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரிப்பு பெரும் வீழ்ச்சிப் போக்கை காட்டிநிற்கின்றது.

இவற்றை விட சமாதானச் சூழலை நிலையாக தக்கவைத்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக் கூடிய வழிமுறைகளுக்கு வழிகளைத் திறந்து விடாது மூடிவைத்துக் கொண்டு சமாதான தேவதையாக வெளிப்படுத்துவதில் அம்மணி குறியாக இருக்கிறார். இச் சூழ்நிலைக்குள் தேர்தல் ஒன்றில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை அவசியம் எனும் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்பதில் ஆளும் தரப்பு அதிக அக்கறை கொண்டு இருக் கிறது. இந்த அவசரத்தன்மையின் மர்மங்கள் என்ன ஆளும்தரப்புக்கு ஏதோ ஒரு வகை யில் சாதகத்தை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கைதான் இது.

இப்போது வாக்களிப்பில் அடையாள அட்டையைப் பாவிப்பது பிரச்சினையா அல்லது கடந்த இருபது வருட காலத்திற்கு மேலாக போர் திணிப்பினால் சிதைவடைந்த தமிழர் தாயகத்தில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஏற்படுத்துவது அவசியமா? அரசுக்கும் அம்மணிக்கும் சமாதானப்பேச்சு வார்த்தையை மீள ஆரம்பிக்கக் வேண்டுமென்ற அவசரத்தன்மையையோ அக்கறையையோ வெளிக்காட்டவில்லை.

இங்கு நடக்கும் பிரச்சினைகளை எல்லாம் மூடிமறைத்துக் கொண்டு சர்வதேச சமூகத்திற்கு கைலாகு கொடுத்து காலத்தை நகர்த்தும் போக்கினையே சிங்களத் தலைமைத்துவங்கள் குறிக் கோளாகக் கொண்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொல்லப் போனால் முற்றத்தில் பிணத்தை வைத்து அழும் போது வீட்டுக்குள் விருந்து கொடுக்கும் கைங்கரியங்களையே அரசு மேற் கொண்டு வருகின்றது எனலாம்.





# போர் எச்சங்கள் சுமந்து நிற்கும் வக்கியல்ல



**சிங்கள இனவாத அரசுகள் கிழக்கு மண்ணை ஆக்கிரமித்த காலகட்டத்தில் எமது தாய் மண் பறிபோகக் கூடாது எனும் நோக்கில் இங்குள்ள மக்கள் 1956ம் ஆண்டு குடியேறினர்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பசுமையான கிராமம் பாலும் தயிரும் தேனும் பழ மரங்களும் செறிந்து காணப்பட்ட ஒரு எல்லைக் கிராமம் தான் வக்கியல்ல 35ம் கொலணி.

சிங்கள இனவாத அரசுகள் கிழக்கு மண்ணை ஆக்கிரமித்த கால கட்டத்தில் எமது தாய் மண் பறிபோகக்கூடாது எனும் நோக்கில் இங்குள்ள மக்கள் 1956ம் ஆண்டு குடியேறினர்.





பின்னர் சிங்கள இனவெறியாட்டத்தால் வக்கியல்ல கிராமம் சிதைவடைந்து பாழடைந்து போர் எச்சங்களைச் சுமந்து நிற்கும் ஒரு கிராமமாகக் காட்சி தருகின்றது.

போர் ஓய்வு நிலையில் தமிழர் தாயகத்தில் இயல்புச் சூழலை ஏற்படுத்த வேண்டும் என்பதில் தமிழர் தரப்பு மிக மிக அக்கறை கொண்டிருக்கும் சூழ்நிலையில் யுத்த எச்சங்களைச் சுமந்து நிற்கும் வக்கியல்ல போன்ற மீள் குடியேற்ற கிராமங்களில் இயல்புச் சூழல் ஏற்படுத்தப்படுவது அவசியம் என்பது வலியுறுத்தப்பட வேண்டியது.

இக்கிராம மக்களின் துன்ப துயரங்களை அறிந்து கொள்ளும் வகையில் சமீபத்தில் இக் கிராமத்திற்குச் சென்றிருந்தோம். அதனை வாசகர்களுக்கு பகிர்ந்தளிக்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளிப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட எல்லைக் கிராமமாக இது அமையப் பெற்றுள்ளது.

களுவாஞ்சிகுடியிலிருந்து வெல்லாவெளி, பாலையடிவட்டை அதற்குச் சற்றுத் தூரம் போனதும் அந்தக் கரடு முரடான பாதை எங்களை வரவேற்கின்றது. அங்கே உள்ள மக்கள் ஒரு இயல்புச் சூழ்நிலை யற்ற சூழ்நிலையில் வாழ்கின்றார்கள். இந்த வீதியின் புனரமைப்பை இன்னுமேன்? எவரும் அக்கறை செலுத்தவில்லை என்ற கேள்விகளை எழுப்பியபடி அந்தக் கரடு முரடான பாதையைத் தாண்டி உள்நுழைகின்றோம்.

சிறு சிறு மலைக்குன்றுகள் அருகே சிறு குடிசைகள் பற்றைக் காடுகளை வெட்டி வெளியாக்கும் காட்சிகள் அவர்களது குடில்களுக்கு அருகாமையில் பற்றைகள் நிறைந்து பாழடைந்து காணப்படும் கல் வீடுகள். இது தான் வக்கியல்ல இப்போது அது இரு கிராமங்களாக உள்ளது. ஒன்று கண்ணபுரம், அடுத்தடுத்தது கண்ணபுரம் கிழக்கு.

கண்ணபுரத்தில் கடந்த 2001ம் ஆண்டு 299 குடும்பங்களும் கண்ணபுரம் கிழக்கில் 298 குடும்பங்களும் வசித்து வந்தனர். 1990ம் ஆண்டு இவர்கள் சிறிலங்காப் படையினரின் அச்சுறுத்தல் காரணமாக இடம் பெயர்ந்தனர்.

1990 ஆம் ஆண்டு யூன் மாதம் ஓர் நாள் மூங்கில்வெட்டை என்ற இடத்தில் அதிகாலை வேளாண்மை பார்க்கச் சென்றவர் கத்திக் குத்துக்கு இலக்காகி சடலமாக வாய்க்காலுக்குள் காணப்பட்டார். பின்னர் யூன் 13ம் திகதி வக்கியல்ல கிராமத்திற்குள் சிங்களப் படை ஊர்காவல் படையென பெருந் தொகையானோர் புகுந்து கண்ணில் தென்பட்ட பொதுமக்களைக் கண்டபடி சுட்டும் வெட்டியும் ஒரே அல்லோல கல்லோலப் பட்டதையடுத்து உடுத்த உடையுடன் அந்த ஊர் மக்கள் உயிரை மட்டுமாவது காப்பாற்றும் நோக்கில் ஊரை விட்டு வெளியேறி ஓடிவந்தனர்.

சிங்கள ராணுவத்துடன் வந்த ஊர்காவல் படையினரும் சிங்களக் காடையர்களுக்கும் ஒரே குதூகலம் வீடு வாசல்களில் செழிப்பாக மக்கள் தேடி வைத்திருந்த திரவியங்கள் எல்லாம் வாரிச் சுருட்டி எடுத்துச் சென்றனர். வண்டில் மாடு, உழவு இயந்திரம், ஆடு, மாடு, கோழி, நெல்லு தங்க நகைகள் இப்படி ஒரு கிராமத்தின் மக்களின் சொத்துக்கள் சூறையாடப் பட்டது. கிராமங்கள் சுடுகாடானது மட்டுமன்றி அங்கேயும் இராணுவம் தனது முகாமை நிறுவி தமிழ் மண்ணை ஆக்கிரமித்துக் கொண்டது.

இடப்பெயர்வினால் வெளியேறிய ஒரு வயது முதிர்ந்த பெண்மணி இப்படிக் கூறுகின்றார்.


''இப்பத்தான் மனே வந்து வெளியாக்கிப் போட்டு குடியேறி இருக்கிறம். எனக்கு இன்னொரு வீடுமிருக்கிது அதில இப்ப ஆமிக்காரனுகள் இருக்கிறானுகள்'' என்றார். தெற்குப் பக்கமாக கையைக் காட்டி சற்றுத் தொலைவில் தமிழ் மண்ணை ஆக்கிரமித்திருக்கும்



சிறிலங்காப் படை முகாமின் முட்கம்பி வேலிகள் லேசாகத் தெரிந்தன.

நீங்கள் எங்கே இடம் பெயர்ந்தீர்கள் எனக் கேட்டபோது துறைநீலாவணை , எருவில், மண்டூர் ஆகிய கிராமங்களுக்கு இடம் பெயர்ந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இப்போது இங்குள்ள மக்கள் மீள் குடியேறிய போதும் அவர்களின் அடிப்படை வசதிகள் என்பது இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவுள்ளது. அந்தக் கிராமத்தில் பழம் பெரும் இந்து ஆலயம் ஒன்று பாழடைந்து போர் எச்சமாக காணப்பட்டது. அது 90ம் ஆண்டுக்கு முன் பூசைவழிபாடுகள் , உற்சவங்கள் நடை பெற்ற ஒரு ஆலயம் இப் போது ஆலயத்தில் அப்படி எதுவுமே நடைபெறவில்லை பாழடைந்து காணப்பட்டது.



அக்கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கந்தையா மகேஸ்வரன் அவரைச் சந்தித்தேன். ஊரின் தேவைகள் குறைபாடுகளை அடுக்கிக் கொண்டே போனார். வைத்தியசாலை இருந்தது. தற்போது அது பாழடைந்து காணப்படுகிறது. பஸ் சேவை இன்னும் எத்தனையோ குறைபாடுகளைச் சுமந்து நிற்கும் கிராமத்தில் பாடசாலைக் கட்டடம் ஒன்று மட்டும் புதிதாகத் தென்படுகின்றது. பாடசாலைக்குச் சென்று அதிபரைச் சந்தித்தோம் 1958ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை 1990ம் ஆண்டு இடப் பெயர்வுக்குப் பின் இயங்கவில்லை. பின்னர் காக்காச்சி வெட்டையில் சிறிது காலம் இயங்கியதாக தெரிவிக்கும் அதிபர் அ. சந்திரசேகரம் மீள்குடியேறிய பின் 21-6-2004 தொடக்கம் மீண்டும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது என்றார். தற்போது நெக் கோட்டின் உதவியுடன் ஒரு பாடசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது 55 மாணவர்கள் கல்விகற்கின்றனர். தற்போது அதிபருடன் ஐந்து பேர் கற்பிக்கின்றனர். குடிநீர் வசதியில்லை, சுற்றுவேலியில்லை, மலசலகூட வசதியில்லை, எனத் தமது குறைபாடுகளை சொல்லி முடித்தார்.

கடந்த போர் அனர்த்தத்தின் போது கண்ணபுரத்தில் 56 பேர் காணாமல் போயுள்ளனர். கண்ணபுரத்தில் 63 பேர் இறந்துள்ளனர், கண்ணபுரம் கிழக்கில் 45 பேர் இறந்துள்ளனர். கண்ணபுரத்தில் 24 பேர் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். ஊனமுற்றோர் இரு கிராமசேவகர் பிரிவுகளிலும் அறுவர் என வெல்லாவெளிப் பிரதேச செயலகத் தரவுகள் குறிப்பிட்டபோதும்

அதனைவிட இக்கிராமங்கள் போரினால் உயிரிழந்தோர் தொகை அதிகமாகுமென அக்கிராமத்தின் போர் எச்சங்கள் புலப்படுத்துகின்றன.

நேரடி றிப்போட் - வேணிதன்
படப்பிடிப்பு - சூரியகுமார்




# அலை வந்து தாலாட்டும் சிறுதீவு

அலைவந்து தாலாட்டும்
சிறுதீவு – நாளை
அதில்ரண்டு நாடுகள் இதுதீர்வு
வலைகொண்டு போகிறான்
படகோடு – இவன்
வரலாறு காணுவான் திடமோடு.
கடல் வேங்கை எழுந்திட்ட
தமிழீழம் – இனிக்
கனவாகிப் போகாது
ஒரு நாளும்.
படகேறிப் பலநாடு
வென்றவா – புலிப்
படையோடு ஒன்றாகி இன்று வா!




**எப்படி இவர்களுக்கு முகங்களில்லையோ, முகவரிகளில்லையோ அதே போலத்தான் எத்தகைய அறிவாலும், எத்தகைய ஞானத்தாலும் கணிப்பீடு செய்யக்கூடிய வகையில் இவர்களது உள்ளகமும் இல்லை. இங்கே எழுதப்பட்டுள்ளவை எல்லாம் இவர்களோடிணைந்த சில சம்பவங்கள் மட்டுமே. அந்தச் சம்பவங்களினூடு, உங்களால் முடிந்தால் அவர்களது மனவுணர்வுகளை மதிப்பீடு செய்து கொள்ளுங்கள். "முகத்தை மறைத்து, புகழை வெறுத்து, மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட" பிரபாகரின் குழந்தைகள்......**

## இறுதி விருப்பம்.

1987 இன் ஆரம்பம். அப்போது காந்தரூபன் தொண்டைமானாறு சிங்களப் படை முகாமைச் சுற்றியிருந்த காவலரணில் கடமையிலிருந்தான்.

ஒரு நாள் முகாமிலிருந்து சிங்களப்படையினர் வெளியேறிய போது சண்டை தொடங்கியது. அச்சண்டையின் ஒரு சந்தர்ப்பத்தில், எதிரியின் கையில் உயிருடன் பிடி பட்டுவிடக்கூடிய சூழ்நிலை உருவாகிய பொழுது, காந்தரூபன் குப்பியைக் கடித்து விட்டான்.

ஆனால், அதிஷ்டவசமாக சக தோழர்களால் மீட்கப்பட்டு காப்பாற்றப் பட்டான்.

இருந்தபோதும்– சயனைட் விசம் காந்தரூபனின் உடலில் ஒரு உட் பாதிப்பை உண்டாக்கியிருந்தது. இந்த உட்பாதிப்பிற்கான பராமரிப்பு முறையில் அத்தியாவசியமானதாக நிறையுணயவு அருந்த வேண்டுமென, மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

1988, 1989 காலம். இப்போது காந்தரூபன் தலைவர் அவர்களுக்குப் பக்கத்தில் மண லாற்றுக் காட்டில் நின்றான்.

காந்தரூபனுக்கு இப்போதும் நிறை உணவு தேவைப்பட்டது.

ஒரு பசு மாடு இருந்தால் காந்தரூபனிற்குப் பால் எடுப்பதுடன்– சுகவீனம் அடைகின்ற போராளிகளுக்கும் பால் கொடுக்க முடியும் எனக் கருதிய தலைவர், வெளியிலிருந்து பால் தரக்கூடிய நல்ல இனப் பசு ஒன்றை, காட்டுக்குள் இருந்த தளத்திற்குக் கொண்டு வருமாறு சொன்னார். பசு வந்து சேர்ந்தது.

தலைவரின் துணைவியார், ஒரு தாயைப் போல இருந்து பால் காய்ச்சிக் கொடுத்தார்.

அந்தப் பொழுதுகளிலெல்லாம் காந்தரூபன் நெஞ்சு நெகிழ்ந்து நிற்பான், தான் ஒரு கதியற்றவன் என்ற கவலையே அற்றுப் போகும்.

ஒரு நாள் அன்பு கலந்த மரியாதையோடு காந்தரூபன் தலைவருக்குப் பக்கத்தில் வந்தான். பாசத்தோடு அவனை அழைத்து அருகில் இருத்திக் கதைத்தார் தலைவர்.

-அண்ணை..... என்னைக் கரும்புலிகளில் சேர்த்துக் கொள்ளுங்கோ..." என்றான்.

அதோடு தனது உள்ளத்துக்குள் உறைந்து கிடந்த இன்னொரு விருப்பத்தையும் அவன் தலைவரிடம் சொன்னான்.

''உங்களுக்குத் தெரியும் அண்ணை நானொரு 'அநாதை' அப்பா இல்லாம அம்மா இல்லாம ஆருமே இல்லாம அலைஞ்ச என்னை ஒரு அப்பாவும் அம்மாவும் எடுத்து தங்கட பிள்ளையைப் போல வளத்தினம்.

......அதுக்குப்பிறகு நான் இயக்கத்திற்கு வந்தன். நீங்கள் என்னை அன்போடையும் பாசத்தோடையும் ஆதரிச்சு வளர்த்தியள். நான் வருத்தங்களால் வாடேக்கை எனக்கு வேண்டிய எல்லாத்தையும் செய்து கவனிச்சியள்....."

''இப்ப நான் உங்களிட்டை ஒண்டு கேட்கப் போறன் அண்ணை, தயவு செய்து எனக்காக நீங்கள் அதைச் செய்ய வேணும்...."

அவனுக்கருகில் இருந்து அவன் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார் தலைவர்.

எனனைப போல எததனையோ பொடியள் இந்த நாட்டில அநாதைகளாக வாழுறாங்கள்...... அப்பா அம்மா இல்லாம, சொந்தக்காரனின் ஆதரவில்லாம அலைஞ்சு திரியிறாங்கள், வாழ இடமில்லாம, படிக்க வசதியில்லாம, எவ்வளவோ ஏக்கங்களோடையும் துன்பங்களோடையும் அவங்கள் இருப்பாங்கள் எண்டுறதை, நான் அனுபவிப்பதில கண்டனான் அண்ணை......"

''நீங்கள் என்னை அன்போட கவனிச்சுப் பார்த்ததைப் போல அவங்களையும் கவனிக்க வேணும். அவங்கள் எந்தக் குறையுமில்லாமல் வளரவும் நன்றாகப் படிக்கவும் வசதி செய்து கொடுங்கோ, அவர்களுக்கெண்டு ஒரு இடத்தை அமைச்சு, அங்க வைச்சு அவங்களையெல்லாம் வளர்த்தெடுத்து அவங்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைக் கொடுத்து விடுங்கோ அண்ணை...."

தலைவரின் இதயத்தை இது தொட்டது. அப்படியான ஒன்றின் தேவை பற்றி எண்ணியிருந்த தலைவருக்கு காந்தரூபனின் வேண்டு கோள் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அவ்வாறான இல்லமொன்றை ஆரம்பித்து– காந்தரூபனின் நினைவாக, அதனை அவனது பெயரிலேயே செயற்படுத்தத் தான் எண்ணியுள்ளதாக, தலைவர் கூறுகின்றார்.

அதற்குரிய ஏற்பாடுகளிலும் தலைவர் ஈடுபட்டுள்ளார்.

# இன்னொரு போர்முகம்

தூயவன்

15

***சீனன்குடா விமானப்படைத்தளம் மீதான கரும்புலித்தாக்குதல் பற்றிய கதை இது. கற்பனைக்கதைகள் நடக்கக்கூடியனவாகவும் உண்மைக்கதைகள் நடக்க முடியாதவை போலவும் தோன்றும் காலம் இது. கற்பனைகள் இறந்து விட்ட காலம் இது.***

இப்பொழுது இவன் எதிரியின் குகைக்குள் பிரவேசிப்பதற்காகவே முன்னேறிக் கொண்டிருக்கின்றான்.

சுமார் 10 மீற்றர் தூரத்தினை மிகவும் அடர்த்தியான இரிசல் பற்றையை பெரும் சிரமத்தின் மத்தியில் கடந்தவன் இப்பொழுது அதன் பின்னணியில் தன்னை உருமறைத்துக்கொள்கின்றான். முன்னால் இருக்கும் 12 பட்டு முட்கம்பி வேலியை அண்ணர்ந்து பார்க்கின்றான். அதிலிருந்து சுமார் 5 மீற்றர் தூரமளவில் 7 அடி மண்ணரன் இருக்கின்றது. அதிலிருந்து 25 மீற்றர் தூர இடைவெளியில் காப்பரண்கள் உள்ளன. அவற்றினுள் உள்ளவர்களின் உரையாடல் வெளியில் கேட்கின்றது. இவனுக்கு வலது புறமாக 20 மீற்றர் தூரமளவில் மண் பண்டில் 3 வீரர்கள் சிகரட் குடித்த வண்ணம் கதைத்துக் கொண்டு நின்றார்கள். சிறு அசிரத்தையான தனது அசைவும் தன்னுயிரைச் செல்லக்கா சாக்கிவிடும் என எண்ணிய வண்ணம் அடுத்து என்ன செய்யலாம்..... என யோசித்த வண்ணம் இருக்கின்றான். முன்னிருக்கும் முட்கம்பி வேலியோடு 25 மீற்றருக்கு ஒரு முறை ஒரு மின் குமிழ் ஒளிந்த வண்ணம் இருக்கின்றது. இப்பாது காப்பு ஏற்பாடுகளை ஒரு ஈ, காக்கை ஊடுருவினால் கூட கண்டு பிடிக்கப்பட்டு விடும். இவ்வளவையும் கடந்து காவலில் இருக்கும் வீரர்கள் கண்களில் மண்ணைத் தூவிச் செல்வது என்பது திறந்திருக்கும் முதலை யின் வாயினுள் தலையை விடுவதற்குச் சமனாகும். ஆனால் இதைச் செய்தே தீர வேண்டும். என்ன வழிமுறையைக் கையாளலாம்?.... எனப்பலவாறு எண்ணிக் கொண்டிருக்கும் போது இவர்களின் வேவுப் பயிற்சி (விசேட) நிறைவின் போது அண்ணா சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது.

''எந்தவொரு பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கும். அதனைக் கண்டு பிடியுங்கள்" என்பதே அது.

என்ன பலவீனம்...? என்ன பலவீனம்...? இவன் உள்ளம் கேட்ட படியே இருக்க, கண்கள் சூழலைக் கவனிக்க, காது உள்வாங்கும் ஒவ்வொரு சிறு அசைவின் ஓசைக்கும் மூளை காரணங்களை கிரகித்து ஆறுதல் படுத்திக் கொண்டிருக்கிறது. இவனுக்கு இடதுபக்கம் இருக்கும் மின் குமிழொன்று திடீரென ஒளியிழக்கின்றது. இவன் கவனத்தை ஈர்க்கின்றது அதனையே தொடர்ந்து அவதானிக்கின்றான். மீண்டும் ஒளிரத் தொடங்கியது. ''சே... நல்ல சந்தர்ப்பம் தவறிவிட்டது" என எண்ணியவன் அதனைத் தொடர்ந்து அவதானிக்கின்றான்.

அதுமட்டும் மென் பச்சை நிறமாக இருப்பதை அவதானிக்கின்றான். ஏன் இப்படி? என யோசிக்கையில் மீண்டும் இது அணைகிறது. இவனுக்கு பளீர் என மூளையில் பொறிதட்டுகின்றது. ...பவர் கட்... பவர் கட்... கட்... இந்தப் பல்ப் பவர் கட்டாகுது. இதுதான் இவர்களின் வீக் பொயின்ற்... என்ர பிளஸ்பொயின்ற் இதை விட்டால் வேறு நல்ல வழி கிடைக்காது" என்று எண்ணியவன் தொடர்ந்தும் அவதானிக்கின்றான். ஆம் அம்மின் குமிழ் 5 நிமிடம் உயிர் வாழ்ந்தால் ஒன்றரை நிமிடமளவில் மூச்சடங்கி போகின்றது. இதைப் பயன்படுத்தினால் சரி... இனி என்ன செய்ய வேண்டும்? வலப் பக்கம் திரும்பிப் பார்க்கின்றான் அந்த மூவரும் நிற்கின்றனர். இனி ஒன்றும் செய்ய இயலாது. இடதுபக்கமாக ஒவ்வொரு அடியாக சருகுச் சத்தம் கூடக் கேட்காமல் நகர்கின்றான். அம்மின் குமிழுக்கு நேரே வந்தவனுக்கு ஒரு யோசனை பிடிக்கின்றது. இந்த வேலியிலையும் கரண்ட் பாய்ந்தால் என்ன செய்வது? மெல்ல ஒரு நீளமான கொடி ஒன்றை அறுத்தெடுத்த வன்



அதன் இரு முனைகளும் இருகம்பிகளில் தொடும் வண்ணம் தூக்கிப் போடுகின்றான். மின்சாரம் பாய்வதற்குரிய அறிகுறிகள் எதுவும் இல்லை. இனி உள்ளே செல்ல வேண்டும் என்ன செய்யலாம். நிலத்தோடு நிலமாக ஊர்ந்த வண்ணம் முட்கம்பிக்கு அருகில் வருகின்றான். மின் குமிழ் அணைந்தவுடன் நாய் விறாண்டுவதுபோல் மண்ணைக் கொஞ்சம் கொஞ்சமாக விறாண்டுகின்றான். மின் குமிழ் எரியும் போது அசையாமல் அப்படியே படுத்து விடுகிறான். பக்கமாகத் திரும்பி காவலரணுக்கு வெளியே நிற்பவர்களைப் பார்க்கின்றான். அவர்கள் தங்களுக்குள் ஏதோ சுவாரசியமாக கதைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு ஆள் புகுந்து செல்லக் கூடியவாறு நிலத்தைத் தோண்டி விட்டான். சற்றுப் பின் வாங்கிப் பற்றைக்குள் பதுங்கி ஓய்வெடுத்து தன்னை நிதானப் படுத்திக் கொள்கின்றான். ''சரி இனி பவர் கட் ஆகேக்க வேலிபுகுந்து பண்றிக்கு மற்றப் பக்கம் போக வேண்டும்" என எண்ணியவன் இன்னுமொரு சாதகமான விடயத்தைக் கவனிக்கின்றான். இம் மின் கம்பத்திற்கு நேரே உள்ள காவலரணுக்கு நேரே ஆள் நடமாட்டம் இல்லை. இதனைக் கவனித்ததால் அவனுக்கு ஏற்பட்ட அதீத நம்பிக்கையின் விளைவு...

விரைவாகத் தன்னைத் தயார் படுத்துகின்றான். ''ஜீன்ஸ்" பொக்கட்டினுள் இருந்த இரண்டு கறுப்புக் கால் உறைகளையும் எடுத்து அணிகின்றான். சாக்குத் தொப்பியை மீண்டும் சரி செய்து பார்க்கின்றான். பாட்டா இரண்டையும் கையினுள் கோர்த்து முழங்கை வரை இழுத்து விடுகின்றான். கைக் குண்டு ஒன்றை இடுப்புப் பட்டியினுள் இருந்து உருவி எடுத்து அதன் பாதுகாப்பு வலயத்தினுள் ஒரு முறை பார்க்கின்றான். நிலத்தில் படுத்து அங்குலம் அங்குலமாக முழங்கையினாலும் கால் பெருவிரலின் உதவியினாலும் மெல்ல மெல்ல எதுவித சத்தமும் கேட்காமல் ஊர்ந்து செல்கின்றான் தான் வழி ஏற்படுத்தி வைத்திருந்த இடத்துக்குக் கிட்ட வந்து கிடக்கின்றான். பண்டில் நிற்கும் வீரர்களினதும் மற்றும் காவலரண்களில் நிற்பவர்களினுள்ளும் தெளிவான பார்வைப் பலத்தினுள்ளும் இலகுவாக ஆனால் மிகவும் பெறுமதியான இலக்காய் இவன் கிடக்கின்றான்.

(தொடரும்...)

03

# ஈழ மன்னர் குளக்கோட்டனின் சமய, சமுதாயப் பணிகள்

க.தங்கேஸ்வரி
B.A.Hons.(Arch)

கி.பி 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்மந்தரால் பதிகம் பாடப்பட்ட தலங்களுள் திருக்கோணேஸ்வரமும் ஒன்று. கி.பி.9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய ஊர்த்தொகையில் 3 ஆவது பாடலில் ''மகோணத்தானே'' எனக் கோணேசப் பெருமான் குறிப்பிடுகின்றார். அவ்வாறே கி.பி 15ம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரி நாதர் தன்னுடைய திருப்புகழில் திருகோணமலை பற்றிக் குறிப்பிடுகின்றார்.

கோணேசர் கோயிலை இட்டு மற்றொரு முக்கியமான தகவல் உண்டு, இக்கோயில் அமைப்பில் மலை அடிவாரத்தில் ஒன்று, நடுப்பகுதியில் ஒன்று, மலை உச்சியில் ஒன்று - என மூன்று கோயில்கள் இருந்தன. இவை கடல் கோள்களின் போது மூழ்கி இருக்கலாம்.

டாக்டர் டபிள்யூ. பாலேந்திரா,



ஸ்பெயின் நாட்டின் தலைநகரான விஸ்பனில் உள்ள அஜுடா நூதனசாலையில் 1952ம் ஆண்டு பார்வையிட்ட ஒரு படத்தில் மூன்று கோயில்கள் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். அதில் மலை உச்சியிலுள்ள கோயிலிலே அலங்கார சிற்ப வேலைகள் காணப்படுகின்றனவாம்.

1961 ஆம் ஆண்டு மைக்வில்சன், றொட்னி ஜொன்கிளாஸ் ஆகியோர் திரைப்படம் ஒன்று எடுப்பதற்காகத் திருகோணமலைக்கடலில் சுழியோடிய போது, அங்கே கோயில் தூண்கள், தளங்கள் முதலியன இருப்பதாகக் கண்டனர். அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் திரு.ஆர்தர் சி.கிளார்க் அவர்கள் கூறிய கருத்துக்களிலிருந்து, பண்டைய கோணசர் ஆலயம் கடலில் மூழ்கி இருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. குளக்கோட்டன் புனரமைப்புச் செய்வதற்கு முன்பு இவ்வழிவு ஏற்பட்டிருக்க வேண்டும். போர்த்துக்கேயத் தளபதியால் அழிக்கப்பட்ட கோயில், பின்னர் அமைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பல ஆய்வாளர்கள், போர்த்துக்கேயர் காலத்தில் ஏற்பட்ட அழிவை மட்டுமே கருத்தில் கொள்கின்றனர். கடற்கோளினால் ஏற்பட்ட அழிவு பற்றிக் கவனம் செலுத்தவில்லை. கடற்கோளினால் இவ்வாலயம் அழிவுற்றதென்பதற்கான ஆதாரம் பல தகவல்கள் இன்று நமக்குக் கிடைத்துள்ளன.

## குமரிக் கண்டக் காலத் தொன்மை

மேற்படி தகவல்களிலிருந்து பண்டைய கோணேசர் ஆலயம் கடல்கொண்ட குமரிக்கண்டத்ததில் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்க முடிகிறது. கடற்கோளினால் குமரிக்கண்டம் அழிவுற்ற போது எஞ்சிய ஒரு நிலத்திணிவாக மீந்திருக்க இலங்கைத்தீவில் கோணேசர் கோயில் நிலைபெற்றிருக்க வேண்டும். இது தொடர்பாக சில கருத்துக்கள் வருமாறு:-

(அ) வரலாற்றுக் காலத்துக்கு முன், உலகில் பல கடற்கோள்கள் ஏற்பட்டுள்ளன. சுமார் 12.000 ஆண்டுகளுக்கு முன் ஒரு கடற்கோளும், 7000 ஆண்டுகளுக்கு முன் மற்றொரு கடற்கோளும், 5000 ஆண்டுகளுக்கு முன் இறுதிக்கடற்கோளும் ஏற்பட்டதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வேறு சிலர் ஐந்து கடற்கோள்கள் ஏற்பட்டது எனக் கூறுகின்றனர். வெசினர் என்பவர் ஐந்து கடற்கோள்களும் ஏற்பட்டன என்றும், டெனன்ற் என்பவர் மூன்று கடற்கொள்களும் ஏற்பட்டன என்றும் கூறுகின்றனர்.

கடற்கோள்கள் நிகழ்ந்த காலங்களும் வெவ்வேறு விதமாகக் கூறப்படுகின்றன.

(ஆ) டெனற் என்பவரின் கூற்றுப்படி:-

1. முதலாவது கடற்கோள் கி.மு.2378ஆம் ஆண்டிலும்,
2. இரண்டாவது கடற்கோள் கி.மு.504ஆம் ஆண்டிலும்,
3. மூன்றாவது கடற்கோள் கி.மு.306ம் ஆண்டிலும் ஏற்பட்டன.

இவற்றுள் முதலாவது கடற்கோளில் இலங்கை இந்தியாவி லிருந்து பிரிந்தது என்றும், இரண்டாவது கடற் கோளில் இலங் கைக்கு அதிக அழிவு இல்லையென்றும், மூன்றாவது கடற் கோளின் போது இல ங்கைக்குப் பாரிய அழிவு ஏற்பட்டதெனவும் டெனற் கூறுகின்றார். இம் மூன்றாவது கடற்கோள் ஏற்பட்டபோதே கோணேசர் ஆலயமும் அழிந்திருக்க வேண்டும் எனக் கொள்ளலாம்.

(இ) இராவணனது காலம் கி.மு.6000 ஆம் ஆண்டு எனவும், கி.மு. 3544இல் கடற்கோள் ஏற்பட்டது எனவும், அதில் இலங்கையில் பெரும் பகுதி அழிவுற்றது எனவும் டாக்டர் டபிள்யூ.பாலேந்திரா கூறுகிறார். இதில் கோணேசர் ஆலயம் உட்பட இலங்கையின் பெரும் பகுதி கடலுக்குப் பலியானதெனவும் கூறப்படுகின்றது. மேலும் இராமாயண காலத்துக்குப் பின்னர் பெரும் கடற்கோள் ஏற்பட்டு இலங்கையின் பெரும் பகுதியைக் கடல் கொண்டதாக ''ராஜாவலிய'' என்னும் பாளி மொழி வரலாற்று நூல் கூறுகிறது.

(ஈ) கோணேசர் கோயில் கட்டப்பட்ட காலம் கி.மு.3541 ஆம் ஆண்டு என்பது குல.சபாநாதன் அவர்களின் கருத்து. கோணேசர் ஆலயம் மிகவும் தொன்மையானது எனவும், திருகோணமலை நாகரீகமும், மொஹாஞ்தாரோ நாகரீகமும் ஏறக்குறைய ஒரே காலத்தவை எனவும் அவர் கூறுகிறார்.

(உ) மூன்றாவது கடற்கோளின் போது பெரியதொரு ஆலயம் கடலில் மூழ்கியது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆலயம் கோணேசர் ஆலயமே என்பதைத் தற்போதைய அகச் சான்றுகள், புறச்சான்றுகள் நிரூபிக்கின்றன.

(ஊ) இராவணன் வெட்டு என்று அழைக்கப்படும் மலைப்பிளவும், தற்போது மலைப் பூசை நடைபெறும். பாறையின் பிளவுகளும் ஒரு கடற்கோளின் போது மலைகள் பிளவு படும் தன்மையில் அமைந்துள்ளன. இப்பாறையின் எதிர்புறம் உள்ள பாறைக்கு அடியில் ஆதி கோணேஸ்வர ஆலயத்தின் மூலஸ்தானம் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

(எ) இப்பாறைக்கு இடையில் கடல் பரந்திருக்கும் இடமே ஆதிக்கோயில் இருந்த இடம் என்பது ஆய்வாளர் கருத்து.

இவ்விடத்தில் குமரிக்கண்டம் பற்றி ஒரு சிறு குறிப்புக் கூற வேண்டும். குமரிக் கண்டம் என்பது லெமூரியக்கண்டம் ஆகும். உலகில் முதன்முதல் உயிரினங்கள் தோன்றிய இடம் இதுவே என்பது ஆய்வாளர் கருத்து. இக்கண்டம் கிழக்கே கிழக்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா வரையும், மேற்கே ஆபிரிக்கா வரையும், தெற்கே தென்துருவம் வரையும் பரந்திருந்த ஒரு பெரும் நிலப்பரப்பாகும்.


கடற்கோளினால் இக்கண்டம் சின்னாப்பின்னமாக்கப்பட்டபோது, சிதறிய மக்கள் வடக்கே இடம் பெயர்ந்து சென்று, சிந்துவெளி, மொஹஞ்சதாரோ, சுமேரியா போன்ற நாகரீகங்கள் உருவாக்கினர்.

நிலத்திணிவாக எஞ்சியிருந்த இலங்கைத்தீவில் இருந்த பூர்வ குடிகள் இயக்கர், நாகர் எனக்கருதலாம்.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பே, திராவிட மக்கள், இமயம் முதல் குமரி வரை கோட்டைகளையும் நகரங்களையும் உருவாக்கி, உயர்ந்த நாகரீகத்துடன் வாழ்ந்தவர்கள் என்பதை சட்டர்ஜி போன்ற பிரபல ஆய்வாளர்கள் பலர் அறுதியிட்டுக் கூறியுள்ளனர். பபிலோனியா முதல் குமரி முனை வரை திராவிடர்கள் வாழ்ந்தார்கள் என்பதை சேஷஐங்கார் போன்ற ஆய்வாளர்கள் நிறுவியுள்ளனர். ஆகவே குமரிக்கண்டத்தில் இருந்து பிரிந்த நிலத்திணிவான இலங்கைத் தீவில் அமைந்த கோணேசர் ஆலயம் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு குமரிக்கண்டக் காலத் தொன்மையுடையது கோணேசர் கோயில் எனக் கூறும் போது, இது ஒரு மிகைப்பட்ட கூற்றாகத் தோன்றும். ஆயினும் கடல் கோள்கள் இடம் பெற்ற காலத்தைக் கருத்தில் கொண்டால் அத்தகைய எண்ணம் ஏற்படாது.

கோணேசர் ஆலயம் இவ்வளவு தொன்மையுடையதால் குளக்கோட்ட மன்னன் காலமும் இதே காலமாக இருக்க வேண்டும் என்று கருதுவது தவறு. கோயிலின் தொன்மைக்குச் சான்றுகள் உள்ளன. ஆனால் குளக் கோட்டன் காலத்துக்கு அவ்



வாறு சான்றுகள் இல்லை.

கோணேசர் கோயிலைக் கட்டியவன் குளக்கோட்டன் என்று கொள்வதாலேயே இந்த மயக்கம் ஏற்படுகின்றது. உண்மையில் குளக்கோட்டன் இக்கோயிலைக் கட்டினானா அல்லது திருப்பணிகள் மட்டுமே செய்தானா என்பது பின்னால் ஆராயப்படும்.

மிகத் தொன்மையான கோணேசர் கோயிலுக்குக் காலத்துக்குக் காலம் திருப்பணிகள் நடைபெற்று வந்துள்ளன என்பதற்குப் பல்வேறு தொல்லியல் ஆதாரங்களும் வரலாற்றாதாரங்களும் இப்பகுதியில் உள்ளன.

(தொடரும்...)




## எதிர்பார்த்தது நிறைவேறவில்லையே!



எரிக்சொல்ஹெய்ம் அவர்களுக்கு!

கடந்த வாரம் தங்களின் வருகை சமாதானத்திற்கான ஒரு நல்லெண்ணச் சூழலை உருவாக்கும் என எதிர்பார்த்த போது அது நிறைவேறவில்லை.

சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் உங்கள் தேசம் கொண்டிருக்கும் அக்கறையும், அவாவும் சிங்கள தேசத்தின் தலைமைகளுக்கு இல்லையே என்பதை நினைக்கின்ற போது நெஞ்சு தணலாய் எரிகின்றது.

கடந்த இருபது வருட கால விடுதலைப் போராட்டத்தில் பதினேழாயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களின் ஒப்பற்ற தியாகத்தால் கட்டியெழுப்பப்பட்ட இந்தப் போர் ஓய்வு நிலையில் ஒரு சமாதானச் சூழல் ஏற்பட வேண்டியதன் அவசியம் தமிழர் தரப்பால் வலியுறுத்தப்படுகின்றது.

அந்த வலியுறுத்தலுடன் சர்வதேச சமூகம் சமாதானத்தின் மீது அக்கறை கொண்டிருப்பது சிங்கள இனவாதிகளுக்குப் பிடிக்கவில்லை. நோர்வே நாடு சமாதானத்திற்காக வழங்கும் அனுசரணைப்பணியை அவதூறுபடுத்தும் இனவாத சக்திகள் உங்கள் தேசியக் கொடியை எரித்துச் சாம்பலாக்குகின்றனர்.

நீங்கள் கொழும்பு வந்தால் வரவேற்பு, விருந்தோம்பல், கைகுலுக்கல் இதுதான் சிங்களத் தலைமைகள் இத்தனை காலமும் கையாண்டு வரும் யுத்திகள். இனிவரும் காலத்திலும் கையாளப் போகும் வழி முறையும் அது தான். கொடிஎரிப்பும் படுகொலையும் இனவாதிகளுக்குப் பழக்கமான ஒரு விடயம். இதனைக் கையாண்டு தமிழர் உரிமையை வழங்க மறுதலிக்கும் மனோபாவம்.

இப்போது உங்கள் வரவு நல்ல வரவாகும் என நினைத்தோம். ஆனால் அதன் மூலம் பயன் கிடைக்கவில்லை. கொடை வழங்கும் நாடுகள் உதவியைச் சுருட்டுவதற்கு மட்டும் தான் சமாதானச்சாயப் பூச்சு அம்மணி பூசிக் கொண்டிருக்கின்றார்.

இனியும் ஒருவருகை அது சொல்ஹெய்ம் வருகையாக அமையுமானால் சமாதானத்தினைத் திடப்படுத்தும் சுப காரியங்கள் நடைபெற வேண்டும். தமிழினம் நிம்மதி விட வேண்டும். அதனைத்தான் எதிர் பார்க்கின்றோம். மீண்டும் ஒரு போர் தமிழர் தாயகத்தின் மீது திணிக்கப்படக் கூடாது. தமிழ் தேசம் இடுகாடாக மாறக் கூடாது. இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ளனர். அதனை சிங்கள அரசு புரிந்துணர்வுடன் அமுல்படுத்துமானால் அது சமாதானத்துக்கான நற்சூழலை ஏற்படுத்தும்.

இப்போது நோர்வே இதற்கான வலியுறுத்தலை சர்வதேச சமூகத்தின் உதவியுடன் மேற்கொள்ள வேண்டும் என்பதே தமிழினம் எதிர்பார்க்கிறது. அதனை நிறைவேற்ற சொல்ஹெய்ம் பாடுபட வேண்டும் என வேண்டி எனது மடலை முடிக்கின்றேன்.

இங்ஙனம்
ஈழமகன்

# பெற்றோர்களே!



## குழந்தைகளுக்கு வற்புறுத்தி உணவு ஊட்ட வேண்டாம்

குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் உணவு இன்றியமையாத ஒன்றாகும். குழந்தைகள் உணவு உண்ணும் போது எந்தவித சந்தர்ப்பத்திலும் உணவை வற்புறுத்திக் கொடுக்கக் கூடாது.

குழந்தைகள் அழும் போதும், கோபத்தில் உள்ள போதும் அவர்களுக்கு உணவு கொடுக்கக் கூடாது. பெரியவர்கள் கோபத்தில் உள்ள போது அதிகம் சாப்பிட மாட்டார்கள். அதுபோல். குழந்தைகளும் சாப்பிட மாட்டார்கள்.

''இவ்வளவு சாப்பாட்டையும் நீ இப்பவே சாப்பிட வேண்டும் ...'' இல்லாவிட்டால் உன்னை என்ன பண்ணுவேன் என்று தெரியாது என குழந்தைக்கு மிரட்டி சாப்பிட வைக்கக்கூடாது.

குழந்தைகளை மிரட்டும் போது அவர்கள் மன நெருக்கடியை யும், பதட்டத்தையும் அனுபவிப்பார்கள். அப்போது அவர்களுக்குச் சாப்பிடும் ஆர்வமே இருக்காது. அந்த நேரத்தில் வற்புறுத்தி உணவை வாய்க்குள் திணித்தால் உணவை அவர்கள் வெளியே துப்பி விடுவார்கள்.

தாய் குழந்தைகளுக்கு அவசர அவசரமாக உணவு ஊட்ட விரும்பக் கூடாது. தாயின் அவசரத்திற்குத் தகுந்தபடி குழந்தையால் மின்னல் வேகத்தில் செயல்பட முடியாது. அதனால் சிறிதளவு உணவாக இருந்தாலும், அதிக நேரம் எடுத்துக் குழந்தைக்குக் கதை சொல்லி, பாட்டுப் பாடியாவது நிதானமாக ஊட்ட வேண்டும்.

குழந்தைகளுக்கு உணவில் உள்ள சத்து பற்றியோ, அதன் பலன் பற்றியோ எதுவும் தெரியாது. ஆனால் அண்ணா, அக்கா போன்றோர் ஏதாவது ஒருவகை உணவை வேண்டாம் என்று ஒதுக்கி விடுவார்கள். குழந்தையும் அது போல் தன் பங்குக்கு உணவை வேண்டாம் என்று சொல்லிவிடும். எனவே அவ்வாறானவர்கள் முன்னிலையில் குழந்தைகளுக்கு உணவு கொடுக்கக்கூடாது.

சில தாய்மார்கள் தன் குழந்தை உணவே உண்பதில்லை என்று குறை கூறுவார்கள். அதற்கு முக்கிய காரணம் அவர்கள் தயாரிக்கும் உணவு குழந்தைகள் விரும்பி உண்ணும் வகையில் இல்லை என்பதுதான் உண்மை. சுவையான உணவுகளை வழங்கினால் குழந்தைகள் அதிகம் சாப்பிடுவார்கள், என்பதை உணர்ந்து சுவையான உணவைத் தாய்மார் சமைத்துக் கொடுக்க வேண்டும்.

குழந்தை பால் குடிக்கும் பருவமாக இருந்தால் அதற்கு அவ்வப்போது ஜூஸ், பழங்கள் கொடுக்கலாம். இப்படி உணவுகளை மாற்றிக் கொடுத்தால் குழந்தைகளுக்கு பசி அதிகரிக்கும். இதனால் கட்டியான உணவுகளை உண்ணும் ஆர்வம் குழந்தைகளுக்கு ஏற்படும். சொக்லட், சிப்ஸ் போன்றவைகளை அதிகம் சாப்பிடும் குழந்தைகளுக்குப் பசி இருக்காது.

## வீட்டுக் குறிப்புகள்


❦ முந்திரிப்பருப்பில் வண்டுகள் எளிதாகப் புகுந்துவிடும். நாலைந்து கராம்புகளை முந்திரியம் பருப்போடு போட்டு வைத்தால், வண்டுத் தொல்லை இருக்காது.

❦ காய்கறிகள் வாடிப்போனால், அவைகளை வினிகர் கலந்த நீரில் சிறிது நேரம் வைத்து எடுக்க காய்கறிகள் புதுமையாகிவிடும்.

❦ போத்தல்களின் இறப்பர் அடைப்பைத் திறப்பதற்கு கடினமாக இருந்தால், சுடுநீரில் துணியால் அடைப்பைச் சற்றுக் கட்டுங்கள், பின்பு அதன் மீது குளிர்ந்த நீரை ஊற்றினால், அடைப்பு எளிதாக வந்துவிடும்.

❦ எலுமிச்சம் பழத்தோலை சவற்காரத் தூளில் அழுத்தி சமையலறைக் கழிவு நீர்த் தொட்டியை தேய்க்க நன்றாக தூய்மையாகும்.

❦ ஒட்டுப் பசைத்தாளைச் சிறிது நேரம் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து எடுக்க அதன் தொடக்கப் பகுதியை எளிதாகக் கண்டு பிடித்து எடுத்து விடலாம்.



❦ தையல் இயந்திர நாடா ('பெல்ட்') அதிகமாக இறுகிவிட்டால் அரை மணி நேரம் அதனை குளிர்ந்த நீரில் அழுத்தி வைத்து வெயிலில் காய வைத்து எடுத்தால் இறுக்கம் குறைந்துவிடும்.

❦ பெருங்காயத்தைத் தூளாக வாங்குவதை விட கட்டியாக வாங்குவதே சிறந்தது. அதனை வறுத்து, தூளாக்கிப் போத்தலில் வைத்துத் தேவைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

❦ சமையலறையில் வண்டு, பூச்சிகளின் தொல்லைகள் இருந்தால் சிறிதளவு கருஞ்சீரகத்தை அரைத்து தண்ணீரில் கலந்து அந்த இடத்தில் தெளியுங்கள்.

❦ மல்லி இலை, புதினா, கறிவேப்பிலை போன்றவைகளை சாப்பாட்டுப் பெட்டியில் வைத்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் வாடிப் போகாது.

❦ தயிரில் மணம் வீசாமல் இருக்க வேண்டுமானால், அதில் இரண்டு துண்டு தேங்காய் போட்டு வையுங்கள்.

❦ கறையான காய்கறிகளை வெட்டுவதற்கு முன்னால் உப்புத் தண்ணீரில் கைகளையும் கத்திகளையும் மூழ்கிக்கொள்ளுங்கள். கையிலோ, கத்தியிலோ கறைபடியாது.

## சிந்தித்துப் பார் மானிடனே!

*போகப் பொருளாய்*
*பெண்ணை நினைத்து*
*வார்த்தையால் இம்சிக்கும்*
*ஆண்வர்க்கமே!*

*பத்துமாதக் கருவறையில்*
*உனை உலகம்*
*புகழ மீட்டெடுத்த*
*அன்னையும்!*

*கைப் பிடித்து*
*கடைசிவரை உன்னுடன்*
*வாழத்துடிக்கும்*
*மனைவியும்!*

*அப்பா என்று*
*உன் அன்பால்*
*சுற்றித் திரியும்*
*மகளும்!*

*உன் கண்களில்*
*மட்டும் பெண்களாகிட*
*நாங்கள் என்ன*
*மாற்றுலகப் பெண்களா?*
*மானிடனே!*

*எஸ்.சித்ரா*
*நாவற்குடா*

## இஞ்சிச் சர்பத்

**தேவையானவை:-**

| | |
|---|---|
| எலுமிச்சைச் சாறு | 2 கப் |
| இஞ்சிச்சாறு | 1 கப் |
| சீனி - | 8 கப் |
| நீர் - | 2 கப் |
| சிற்றிகசிட் - | அளவாக |

**செய்முறை:-**

**எலுமிச்சைச் சாறு, இஞ்சிச்சாறு ஆகியவைகளை ஒன்றாக்கி வைத்தல். பின் ஒரு பாத்திரத்தில் நீரைக் கொதிக்க விடுங்கள். கொதிக்கும் போது அதன் மேல், சாறு வகைகள் அடங்கிய பாத்திரத்தை கிளறி சூடாக்குங்கள். சூடானதும் எடுத்து விடுங்கள். சீனி, நீர், சிற்றிகசிட் ஆகியவைகளைச் சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டி எடுங்கள். இது ஆறியதும் இஞ்சிச் சாற்றுக் கலவைகளைக் கலந்து, தேவைக்கு தண்ணீர் சேர்த்துப் பருகுங்கள்.**

## மகளிர் மகுடம்



## நகங்களும் நாங்களும்



*ஒருவரின் நகங்களின் அமைப்பை வைத்து அவர்களின் குணாதிசயம் எப்படி இருக்கும் என்பது பற்றி நீங்கள் நிறைய அறிந்திருக்கலாம். ஆனால் இது சற்று மாறுதலான தகவல்.*

*நீங்கள் எப்படியானவர் என்பதை நகத்தின் வலிமையை வைத்து மதிப்பிட்டு விடலாம் என்பது தான் புதுச் செய்தி.*

*நகங்கள் எவ்வளவு வலிமையாக இருக்கின்றதோ அந்தளவிற்கு உங்களின் உடல்பலமும், மனபலமும் அதிகமாகக் காணப்படும்.*



*இலகுவாக அழுத்தினால் கூட வளைகின்றது, என்றால் உங்களிடம் இந்த இரண்டுமே மிகக் குறைவாக இருக்கும்*

*நகங்களின் வலிமையைக் கூட்டுவதன் மூலம் உங்களின் உடல், மனோபலத்தையும் சற்று கூடுதலாக்கலாம்.*

*எவ்வாறு மண்டையோட்டை மசாஜ் செய்யும்போது இரத்த ஓட்டத்தை அதிகரித்து தலை முடிக்கு வலுவை அளிக்கின்றதோ, அதேபோல் நகங்களை மசாஜ் செய்வதன் மூலம் நகங்களை வலிமையாக்க முடியும்.*

*விரலின் நுனிப்பகுதியை மசாஜ் செய்வதன் மூலம் அப்பகுதியின் இரத்த ஓட்டத்தை தூண்ட முடியும். இதற்கு இரண்டு விதமான வழிமுறைகள் இருக்கின்றன. முதல் முறை பப்பிங். இது மிகப் சுலபமான வழி.*

*ஒவ்வொரு நகத்திலும் கன்டிஷனிங் கிறீமை தடவி அதனை சமோய்ஸ் துணி கொண்டு நன்றாக அழுத்தி தேயுங்கள். உங்கள் நகங்கள் பளிச்சென்றாகி விடும்.*

*இன்னொரு வழியிலும் நகங்களைப் பளபளப்பாக்க முடியும்.*

*அது டேப்டிங் முறை. டேப்பிங் என்றால் தட்டுவது என்று அர்த்தம். இந்தப் பயிற்சியை நீங்கள் எங்குவேண்டுமானாலும் செய்யலாம். பாடசாலைகளில், வேலை செய்யும் இடங்களில் மரத்தினால் செய்த மேசை இருந்தால் அதில் விரலின் நுனிப்பகுதியைத் தட்டலாம். கணனி தட்டெழுத்துச் செய்பவர்களுக்கு மற்றவர்களை விட நகங்கள் பளபளப்புடன் காணப்படுவது இதனால்தான்.*

## வீட்டுச்சுவர் பளிச்சென்று இருக்க

வீட்டின் உட்பகுதியை அலங்கரிப்பது பணக்காரர்கள் மட்டும் செய்யக் கூடியதாக இன்றி நடுத்தரக் குடும்பத்தினர் கூட தங்களது வீட்டின் உட்புறத்தை அழகாக வைத்துக் கொள்ள விரும்புகின்றார்கள்.

வீட்டின் உள் அலங்காரம் சிறப்பாக அமைய வேண்டுமாயின் சில விடயங்களில் நாம் கலை உணர்வோடு இருப்பது அவசியம்.

குறிப்பாக சுவருக்குப் பூசும் வண்ண நிறத்தை தேர்ந்தெடுப்பது. மேசை, கட்டில், கதிரை, பந்து பேப்பர், திரைச்சேலை, தரை விரிப்புக்கள், தலையணை உறை, பூச்சாடிகள் ஆகியவற்றில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். உங்களது இரசனை மெல்லியதாக இருந்தால் வீடு பளிச் சென்று பார்ப்போரைக் கவரும் வகையில் இருக்கும்.

வண்ண நிறங்கள் என்னும் போது புதிய வரவு என்ன என்பதைப் பாருங்கள். இது கணனியுகம். நீங்கள் விரும்பும் வண்ணம் டிஸ்டெம்பரையோ, வர்ணத்தையோ தெரிவு செய்யலாம்.

இப்போது அடர்த்தியான வண்ணங்களை யாரும் விரும்புவதில்லை. இதில் லேட்டஸ்ட் டிரெண்ட், வெளிறிய பச்சை, சிவப்பு, நீலம், பழுப்பு, ஒரேஞ் நிறங்கள் தான்.

தளபாடங்களைப் பொறுத்தவரை. அறைக்கு ஏற்ப அதன் நிறம் இருந்தால் நல்லது. அதே சமயம் ஒரே இடத்தில் பல்வேறு நிறங்கள் கொண்ட தளபாடங்கள் இருப்பதைத் தவிர்ப்பது நலம்.

ஏனெனில் அது உங்களது இரசனைக் குறைவினைக் காட்டும். வரவேற்பறையில் பழுப்பு நிற, சோபா ர்போய், என்றால் வீட்டின் சாப்பாட்டு அறையிலும் அதே மாதிரி பழுப்பு நிறம் இக்க வேண்டியது என்பது அவசியமில்லை. அறைக்கு அறை தளபாடங்கள் மாறுபட்ட நிறம் கொண்டவையாக இருக்கலாம். கதிரை, திரைச்சேலை, தலையணை உறைக்கும் சிவப்பு, வெள்ளை நிறத்திலான துணிகளைப் பயன்படுத்தலாம். அல்லது நீலமும், வெள்ளையும் கலந்த நிறத்தை உபயோகிக்கலாம்.

வோல் பேப்பர்கள் இயற்கைக் காட்சிகள் கொண்டதாக இருந்தால் உங்களுக்கு கலையுணர்வு மிகுதியாகக் காணப்படும்.

வீட்டிற்கு வண்ணம் பூசும் போது. ஒரு அறையில் குறைந்த பட்சம் மூன்று பக்கங்களிலாவது ஒரே வகையான நிறம் அமையுமாறு பூச வேண்டும்.

# க.பொ.த.சாதாரணதர மாணவர்களுக்கான வினா விடைகள்

## சமூகக்கல்வியும், வரலாறும்

01) ஜனநாயகம் என்பதற்கு வரைவிலக்கணம் தருக?
1. 18ம் நூற்றாண்டு வாழ்ந்த ரூசோ :- சுதந்திரமாகப் பிறந்த மனிதன் சுதந்திரமாக வாழவேண்டும்.
11. கி.பி 1690ல் வாழ்ந்த ஜோன்லொக் :- அரசுக்களின் ஆட்சி அதிகாரம் ஆளப்படும் மக்களின் விருப்பத்திலே தங்கியுள்ளது.
111. அமெரிக்காவின் 16வது ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன்:- மக்கள் மக்களுக்காக ஆளப்படும்ஒரு மக்கள் ஆட்சிமுறை.

02). இந்தவகையில் இலங்கையின் புராதன மன்னராட்சியில் நிலவிய ஜனநாயக இயல்புகள்?
1. அரசர்கள் சபையில் அமைச்சர்களுடன் கலந்துரையாடிய பின்பே தீர்மானங்களை மேற்கொண்டனர்.
11. பண்டைய காலத்தில் இலங்கையில் வழக்கிலிருந்த கம்சபா (கிராமசபை) முறையில் ஜனநாயகப் பண்புகள் காணப்பட்டன.
111. மன்னன் நாட்டின் சம்பிரதாயங்களை அடிப்படையாகக் கொண்டே ஆட்சி செய்தான்.
1V. கிராமத்தின் பொது விடயங்களை அவதானித்து நியமிக்கப்பட்டிருந்த கிராமத் தலைவன் மக்களின் விருப்பத்தின் பெயரிலே நியமிக்கப்பட்டான்.

03). ''சுவிற்சலாந்து ஜனநாயகத்தை சிறப்பாகப் பேணும் ஒரு நாடாகும்'' அவ்வாறு சிறப்பாகக் காணப்படும் ஜனநாயகப் பண்புகள் சில தருக?
1. டுப்ஸ் என்ற அரசியல் சிந்தனையாளரின் கூற்றுப்படி சுவிற்சலாந்து மக்கள் சுதந்திரமான கருத்துக்களை உடையவர்களாகவும் தமது மேம்பாட்டினைப் போன்றே மற்றவர்களது மேம்பாட்டிற்காகவும் அற்பணிப்புடன் செயலாற்றும் ஒரு குழுவினராகவும் இருந்தனர்.
11. மொழியால், சமயத்தால் வேறுபட்ட மக்களைக் கொண்ட சுவிற்சலாந்தில் உண்மையான ஜனநாயக ஆட்சி நிலவுவது சிறப்பானதாகும். உ-ம்: மொழி ரீதியாக (ஜேர்மன்-71% பிராஞ்சு-21% இத்தாலி-6%சமயரீதியாக புரட்டஸ்தாந்து-57%கத்தோலிக்கம்-41% யூதர்கள்-0.5% )

04). ஜனநாயகம் ஒரு ஆட்சி முறை. விளக்கம் தருக?
1. மக்களுடைய விருப்பத்திற்கு வாய்ப்பளிக்கும் மக்களால் தெரிவு செய்யப்படும் ஆட்சியாளரைக் கொண்ட ஆட்சிமுறையாகும்.
11. மக்கள் தமது ஆட்சி அதிகாரத்தை நேரடியாக அல்லது பிரதிநிதிகள் மூலம் செயற்படுத்தும் ஆட்சிமுறையாகும்.
111. ஜனநாயக ஆட்சி முறையில் உள்ள நிறுவனங்கள் கருத்து வெளிப்பாட்டிற்கும், பொதுவிருப்பை வெளிப்படுத்தவும் உதவுகிறது.

05). ஜனநாயகம் ஒரு சமூக வாழ்க்கை முறை விளக்குக?
1. சிறந்த குணப்பண்புகளுடன் கூடிய மக்களைக் கொண்டமைந்த ஒருசமூகம் ஜனநாயக சமூகம்.
11. ஜனநாயக சமுகம் என்பது சுதந்திரம், சமத்துவம் என்ற கருத்துக்களினால் கட்டியெழுப்பப்பட்டது.
111. ஜனநாயக முறையில் முடிவுகள், கலந்துரையாடல், விவாதங்கள், ஒத்தினங்கள், சகிப்புத்தன்மைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

06). பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் அடிப்படை இயல்புகளை விளக்குக?
1. தேர்தல் இடம் பெறல்:- மக்கள் ஆட்சி செய்வதற்கு பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யும் உரிமையை நிறைவேற்ற இது உதவும். தொகுதி அடிப்படையிலும், பிரித்தானியாவிலும் மாவட்டஅடிப்படையில், இலங்கையிலும், பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். ஜனநாயக நாடுகளில் 5 அல்லது 6 வருடங்களுக்கு ஒருமுறை தேர்தல் இடம்பெறும்.
11. மக்கள் இறைமை:- வாக்குரிமை மூலம் பொருத்தமான ஆட்சியாளரைத் தெரிவு செய்யவும், பொருத்தமற்றவர்களை ஆட்சியில் இருந்து நீக்கவும் வாக்குரிமை இது 1978ம் ஆண்டு யாப்பில் "மக்கள் இறைமை" என குறிப்பிடப்பட்டுள்ளது.
111. பிரதிநிதித்துவ முறை:- ஆட்சி செய்வதற்காக பிரதிநிதிகளை தெரிவு செய்யும்முறை. பிரித்தானியாவில் தேர்தல் தொகுதி மூலமும், இலங்கையில் விகிதாசார பிரதி நிதித்துவம் முலமும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.
1எ. எதிர்க்கட்சி அமைந்திருத்தல்:- அரசாங்கத்தின் செயற்பாடு பற்றி பயனுள்ள விமர்சனங்கள் மேற்கொள்ளவும், தவறுகளைச் சுட்டிக்காட்டவும், மாற்று அரசாங்கத்தை சுட்டிக்காட்டவும், தெரிவு செய்யவும் இதுஅமையும.

07). ஜனநாயக நாட்டில் காணப்படும் பொதுவான இயல்புகள்?
1. சர்வசன வாக்குரிமை இருத்தல். 11. நாடு தேர்தல் தொகுதிகளாகபிரிக்கப்பட்டிருத்தல்.
111. தேர்தல் இடம்பெறல். 1V. பிரதிநிதித்துவ முறை காணப்படல்.
V. அரசியல் கட்சிகள் காணப்படுதல். V1. அரசாங்கக் கட்சியும், எதிர்க் கட்சியும் காணப்படல்.

08). ஜனநாயக நாட்டில் பெரும்பான்மையோர் விருப்பு, நியாயமாக அமையும் சந்தர்ப்பங்கள 2 கூறுக? விளக்குக?
1. அரச அதிகாரத்தை நிலைநாட்டல்:- மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் கூடிய எண்ணிக்கையிலான அங்கத்தவர்களை வென்ற அரசியல் கட்சிக்கு ஆட்சி அதிகாரம் உரித்ததாகும்.
11. சட்டமாக்குதல்:- சட்டத்தினையும், சமாதானத்தையும் பொதுத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான சட்டங்களை ஆக்குவதிலும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை வாக்குகள் அவசியமாகும்.

09). ஜனநாயகத்திற்கான வெற்றிக்கான இயல்புகள் 4 கூறி விளக்குக?
1. அரசியல் அறிவு படைத்த மக்கள்:-
ஆட்சி செலுத்துவதற்கு பொருத்தமான ஆட்சியாளர்களையும், ஆட்சிக் கொள்கைகளையும் தெரிவு செய்வதற்கு அரசியல் அறிவு படைத்த மக்கள் முக்கியமாக வாக்களிக்கும் போதுசரியான முறையில், வாக்களித்தல், லஞ்சம் ஆகியவற்றிற்கு அடிபணியாமை, பாரிய கோட்பாடுகள் போன்றவற்றிற்கு அடிபணியாமை ஆகியவற்றிலிருந்து தப்பித்துச் செயற்படல்.
11. அற்பணிப்புடன் செயலாற்றும் தலைவன்:-
ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற அங்கத்தவர்கள் சுயநலமின்றி பொதுநலத்துடன் செயற்படல்.
111. சுதந்திரமான ஊடகத்துறை:-
மக்களின் கருத்துக்களைக் கட்டியெழுப்பக் கூடியதும், அதை நெறிப்படுத்தக் கூடியதுமான பாரபட்சமற்ற சுதந்திரமான ஊடகத்துறை அவசியமாகும்.
1V. பொருளாதாரம் கீழ்மட்டத்தில் இல்லாது இருத்தல். V. சிறுபான்மையோரை அடக்கி ஆளாத பெரும்பான்மையினர்.


10). ''பிரித்தானியா இருகட்சி ஆட்சி முறை கொண்ட நாடு என அழைக்கப்படுகிறது'' இருகட்சி ஆட்சி முறையின் நன்மைகள் தீமைகள் 3 தருக?
நன்மைகள்:-
1). கூட்டுப் பொறுப்பும் ஒற்றுமையும் கூடுதலாகக் காணப்படும். 2). பிரதம மந்திரியை தெரிவு செய்வது இலகுவாக இருக்கும்.
தீமைகள்:-
1). அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவது கடினமாகும். 2)அரசியல் ஸ்திரத் தன்மை காணப்படாமை.

11). மனித உரிமைகளை வென்றெடுப்பதற்கு பல்வேறு நாடுகளில் புரட்சிகள் ஏற்பட்டுள்ளன.அத்தகைய புரட்சிகள் எவை?
1. அமெரிக்கப் புரட்சி 11. ரஷ்யப் புரட்சி 111. ஆங்கிலப் புரட்சி 1V. பிரான்சியப் புரட்சி

12). ஐக்கிய நாடுகள் அமையம் 1948ம் ஆண்டு எதற்காகப் பிரகடனப்படுத்தப்பட்டது?
1. புரட்சிகளின் போது வெற்றி கொள்ளப்பட்ட உரிமைகளை இனம், மொழி, வர்த்தகம், சமயம் என்ற பேதங்களிலிருந்து விடுபட்டு முழுமனித இலக்குகளை அனுபவிக்கும் நோக்கிலாகும்.


13). ஜனநாயக நாட்டில் நிலவும் குடியியல் (தனிமனித) உரிமைகளைத் தருக?
1. வாழும் உரிமை. 11. கருத்து வெளியிடும் உரிமை. 111. சொத்துக்கள் வைத்திருக்கும் உரிமை.
1V.கூட்டம் கூடும் உரிமை. V. வேலை செய்வதற்குரிய உரிமை. V1. குடும்ப வாழ்க்கை நடாத்தும் உரிமை.


14). ஜனநாயக நாட்டில் நிலவும் அரசியல் உரிமைகளைத் தருக?
1. ஆட்சியாளரைத் தெரிவு செய்யும் உரிமை. 11. தேர்தலில் ஆட்சியாளராக போட்டியிடும் உரிமை.
111. அரசியல் கட்சியில் சேரும் உரிமை. 1V. அரசாங்கத்தில் பதவி வகிக்கும் உரிமை.
V. தனது தேவைகள், கோரிக்கைகளை அரசாங்கத்திடம் முன்வைக்கும் உரிமை.




### சமபகுதியம் என்றால் என்ன?


ஒரே மூலக்கூற்று சூத்திரத்தையும், வித்தியாசமான கட்டமைப்பையும் கொண்டவை சமபகுதியம் எனப் படும்.





ஆகவே ஒரே மூலக்கூற்றுச் சூத்திரம் வித்தியாசமான கூட்டமைப்பு நேர்ச்சங்கிலி, கிளைச் சங்கிலி அமைப்புச் சமபகுதியம்.





(a) ஒரே மூலக்கூற்றுச் சூத்திரம்
(b) வித்தியாசமாக கூட்டமைப்பு
(d) ஒரே தொழிற்படும் கூட்டமைப்பு

### அமைப்புச் சமபகுதியம்


1). நேர்ச்சங்கிலி, கிளைச்சங்கிலி
2). கட்டமைப்பு நிலை
3). மெற்றா மெரிச அமைப்பு
4). தொழிற்படும் கூட்மைப்பு




ஆகவே ஒரே மூலக்கூற்றுச் சூத்திரம் வித்தியாசமான கட்டமைப்பு

### கூட்மைப்பு நிலைச் சமபகுதியம்




(a) ஒரே மூலக்கூற்றுச் சூத்திரம்.
(b) வித்தியாசமான கூட்டமைப்பு
(d) ஒரே தொழிற்படும் கூட்டம்
(d) கூட்டமைப்பு நிலையில் மாற்றம்.

எஸ். ரவீந்திரன்
களுவாஞ்சிகுடி

## மாணவர் பரிசுக் குவியல்

*தமிழ் பேசும் மாணவ செல்வங்களுக்கு!*

ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு மாணவர் அறிவுத் திறனை விருத்தி செய்யும் வகையில் வாரந்தோறும் பரிசுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. மட்டக்களப்பு ராஜாஸ் புத்தக நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இந்தப் பரிசுக் குவியலில் நீங்களும் அதிஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படுமிடத்து பெறுமதி மிக்க அறிவு நூல்கள், பாடசாலை உபகரணங்கள் பரிசுகளாக வழங்கப்படும்.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்,

கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடை எழுதி, பாடசாலை அதிபரினால உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

முதலாவது அதிஷ்டசாலிக்குப் பரிசும் பாராட்டுப் பெறும் ஐந்து மாணவர்களின் பெயர், பாடசாலை விபரங்களும் பிரசுரிக்கப்படும்.

**விடைகள் வந்து சேரவேண்டிய இறுதித் திகதி-** 2004.10.05

**அனுப்பவேண்டிய முகவரி**

**மாணவர் பரிசுக்குவியல் –05,**
**ஈழநாதம்[ மட். பதிப்பு ],**
**பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை**

இவ்வார வினாக்கள்,
1).ஐ.சி.சி சம்பியன் கிண்ணச் சுற்றுப் போட்டி எங்கு எப்போது ஆரம்பமானது?
2).சர்வதேச பயங்கரவாதி எனவர்ணிக்கப்படுபவர் யார்?
3).இந்தியாவின் தற்போதைய பிரதமர் யார்?
4).லெப்-கேணல் தியாகி திலீபன் எத்தனையாம் ஆண்டு உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்தார்?
5).இலங்கைக்கான நோர்வேயின் விஷேட சமாதானத் தூதுவர் யார்?

### பரிசுக்குவியல் போட்டி –3ற்கான விடைகள்

1) சீனா
2) யூன்
3) 2002 பெப்ரவரி 22
4) பங்காளதேசின் டாக்கா தலைநகரில்
5) செப்ரெம்பர் -06

பரிசுக்குரியவர்
தங்கராசா–பிரதீபன்
தரம் -11
மட்- அரசடித்தீவு
வி.ம.வி.




# நரியின் விருந்து

ஒரு காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. அக்காட்டில் நாரை ஒன்றும் வசித்து வந்தது. நாரையை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டும் என்று நினைத்தது நரி.

ஒரு நாள் நாரையைக் கண்ட நரி 'நண்பா! இன்று எனது வீட்டில் உனக்குச் சுவையான விருந்து வைக்க எண்ணியுள்ளேன். என் வீட்டுக்கு நீ வரவேண்டும்" என்று அழைத்தது.

நாரையும் அதன் அழைப்பை ஏற்று நரியின் வீட்டுக்குச் சென்றது. நரி பாயாசம் தயாரித்து இரண்டு தட்டுகளில் ஊற்றி ஒன்றைத் தனக்கு வைத்துக் கொண்டு மற்றொரு தட்டை நாரையிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னது.

நரி தட்டிலிருந்த பாயாசத்தை நாக்கினால் நக்கி ருசித்துக் குடித்தது. நாரைக்கோ தனது நீண்ட அலகினால் பாயாசத்தைத் தட்டிலிருந்து குடிக்க முடியவில்லை.


'நாரையே! ஏன் தயக்கம் காட்டுகிறாய்? தயக்கப்படாமல் சாப்பிடு'! என்று கூறியது நரி.

தனக்கு ஏற்பட்ட அவமானத்தை மறைத்துக் கொண்ட நாரை 'நண்பனே எனக்கு இன்று திடீரென வயிறு சரியாக இல்லை. நான் இன்னொரு நாள் வருகின்றேன்!' என்று கூறிவிட்டுப் புறப்பட்டது நாரை.

நாரையை அவமானப்படுத்தி விட்டோம் என்று எண்ணிச் சந்தோஷப்பட்டது நரி. நாரை எப்படியாவது நரியைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டது.

சில நாட்களின் பின் நரியைக் கண்ட நாரை, 'நண்பனே! எனக்கு இன்று பிறந்த நாள். இன்று என்னுடன் விருந்துண்ண வர வேண்டும்' என்று கேட்டுக் கொண்டது.

நரியும், நாரையின் அழைப்பை ஏற்று அதன் வீட்டுக்குச் சென்றது. நாரை மிகவும் உயரமானதாகவும் கழுத்துப்பகுதி மிகவும் குறுகிய தாகவுமுள்ள இரண்டு ஜாடிகளுள் பாயாசத்தை ஊற்றி ஒன்றைத் தான் வைத்துக் கொண்டு மற்றையதை நரியிடம் கொடுத்தது.



பின் நாரை அந்தக் குறுகிய ஜாடியினுள் தனது தலையை விட்டு, நீண்ட அலகினால் பாயாசத்தை உறிஞ்சிக் குடித்தது. ஆனால் நரியினால் அந்த உயரமான ஜாடியை எட்டக் கூடப் பார்க்க முடியவில்லை.

நாரை அதனை நோக்கி ஏளனத்துடன் 'என்ன நரியே! எவ்வளவு ருசியாக இருக்கிறது பாயாசம்.' ஏன் சாப்பிடாமல் இருக்கிறாய்? கூச்சப்படாமல் சாப்பிடு? என்று சொன்னது. 'இன்று எனக்கு வயிறு சரியில்லை. இன்னொரு நாளைக்குச் சாப்பிடுகிறேன் என்றவாறு கூறி நரி திரும்பிப் பார்க்காமல் சென்றது.

'நாம் பிறரிடம் அன்பு காட்டினால் அன்பு வளரும். மாறாக அவமானப்படுத்தினால்' அதுவே நமக்கு மீளவும் வரும்'

*க.பிரசாந், தரம் ~ 10*
*மட்/தாழங்குடா ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம்*

# சிந்தனைத் துளிகள்

1. உன் ஆடை கசங்கினால், அதைச் சீர் செய்வாய், ஆனால் நீயே கசக்கினால், உன்னைச் சீர் செய்ய முடியாது.
2. பணம் என்பதை விட பாசமே மேல்.
3. அறிவற்றவரின் நட்பைவிட, அறிவுடையோரின் பகை சிறந்தது.
4. மனித வாழ்வு என்பது ஒரு நீர்க்குமிழி போன்றது.
5. கடும் மொழிகள் பேசுவதால், ஒருவனது இயல்பே கடுமையாக மாறுகின்றது.
6. கிடைக்காததை அந்தக் கணமே மறந்துவிட வேண்டும்.
7. கடுமையாக உழை, உழைப்பின்றி எதுதான் கைகூடும்.
8. உன்னை ஒருவன் இருமுறை ஏமாற்றினால் அது உன்னுடைய குற்றம்.
9. அனைத்திலும் ஆசைப்படாதே, ஆசைப்படுவது அனைத்தும் கிடைப்பதில்லை.
10. பேராசையும், கோபமும் உள்ளவனுக்கு மன அமைதி கிடைப்பதில்லை.

**இ.சூரியகுமாரி**
**ஆரையம்பதி-3**

# அறிவியல் கருவிகள்

1. இதயத்தின் இயக்கத்தைச் சரியாகக் கணக்கிட்டுக் காட்டுவது.
   கார்டியோ கிராம்
2. மூளையின் இயக்கத்தைக் காட்டும் கருவி.
   என்.ச.்.பலோ கிராம்
3. இதயத்துடிப்பை அறியும் கருவி.
   ஸ்டெதஸ் கோப்
4. இரத்த அழுத்தத்தை அளக்கும் கருவி.
   ஸ்பைக்மோ மனோமீற்றர்
5. இதயத்தின் இயக்கத்தைச் சீராக்க உதவும் கருவி.
   பேஸ் மேக்கர்

*கே.எல். ஹில்மி*
*சாய்ந்தமருது-13*

# எனக்குப் பிடித்த பூ

- எனக்குப் பிடித்த பூ ரோஜா
- ரோஜா செடி நான் வீட்டில் வளர்க்கிறேன்.
- ரோஜா பூவின் தலைநகரம் ஆசியா
- ரோஜாப் பூ அழகானது.
- ரோஜாப் பூவில் பல வர்ணங்கள் உண்டு.
- ரோஜாச் செடியில் முள் உள்ளது.
- ஆனால் ரோஜா மலரோ மென்மையானது.
- நான் ஒவ்வொரு நாளும் எனது வகுப்பு ஆசிரியருக்கு ரோஜாப் பூ கொண்டு கொடுப்பேன்.

**த.ஜிவசங்கரி**
**தரம் - 3V**
**மட்.விவேகானந்தா ம.ம.வி.**

# ஆனைக்குட்டி

ஆனை ஒன்று வளர்க்கிறேன்
அசைந்து அசைந்து நடக்குது.
அத்தை மகள் போலவே
மொத்த நிறமும் கறுப்புத்தான்.
மொறு மொறுத்த உடலும் தான்
சித்து வித்தை காட்டுதே!
சிரிக்க வைத்துப் பார்க்குதே!
பத்து யாரு நடக்குதே!
பதட்ட மின்றி இருக்குதே
பாகன் அதற்கு இல்லையே
பாதம் கழுவ வில்லையே!
சுற்றிச் சுற்றி நடக்குதே
சுதியைக் கூட்டி பிளிறுதே
சத்தியமாய்ச் சொல்லுகிறேன்
சுத்தமாக உயிரில்லை
வித்தை கற்றுக் கொடுத்திட்ட
வித்தைக் காரன் யாரடா?
ஆசையோடு வாங்கிட்ட
ஆச்சரியப் பொம்மையடா!

**சித்திரா ரவிராஜ்**
**களுவாஞ்சிகுடி**

# விடுகதைகளும், விடைகளும்

1. மண்ணுக்குள்ளே வெள்ளிக் கட்டி அது என்ன?
2. ஜாடி மேலே குரங்கு அது என்ன?
3. மணி அடித்தால் தலைப் பாம்பு நகரும் அது என்ன?
4. இலை இல்லாத மரம் அது என்ன?
5. அம்மா தந்த தட்டிலே தண்ணீர் விட்டால் நிற்காது அது என்ன?

1. முள்ளங்கி
2. முந்திரியம் பழம்
3. ரெயில்
4. மான் கொம்பு
5. தாமரையிலை

**நே.வினோதா**
**தரம் - 05**
**மட்.குறிஞ்சாமுனை அ.த.க பாடசாலை**

# நாடறிந்த பெரியார்

## கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி



ஈழத்திரு நாட்டிற்குப் பெருமை சேர்த்த அறிஞர்களுள் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியும் ஒருவராவார். இவர் யாழ்ப்பாணத்து மானிப்பாயிலே கல்வி, கேள்விகளிற் சிறந்து புகழ்பெற்ற சேர்.முத்துக்குமார சுவாமி என்பவருக்கும், இங்கிலாந்து நாட்டுப் பெண்ணான எலிஸ பெத்கிளேபீ என்பவருக்கும் ஒரே மகனாக 1877ம் ஆண்டு ஆவணி மாதம் 22ம் திகதி கொழும்பிலே பிறந்தார்.

ஆனந்தருக்கு 2 வயது நடந்து கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக தந்தையார் மரணமானார். இங்கிலாந்தில் இருக்கும் இவரது சிறிய தாயார் ஆரம்பப் பாடங்களைப் போதித்தார். ஆனால் இவரது தாயார் மறுமணம் செய்யாது இவரைச் சீராக வளர்த்து வந்தார். இவர் ஆரம்பப் பாடசாலையில் திறமையுடன் கல்வி கற்றுப் பின்னர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து விஞ்ஞானப் பட்டதாரி ஆனார்.

மேலும் இவர் சிறந்த நிலநூற் பண்டிதராகவும் விளங்கினார். அதனால் இவரை இலங்கை அரசினர் 1903ம் ஆண்டு தமது உலோக பரிபாலனத் துறைக்குத் தலைவராக நியமித்தனர். இவர் கனிப்பொருள் பற்றிய பல ஆராய்ச்சிகளைச் செய்தமையால் இலண்டன் பல்கலைக்கழகம் இவருக்கு விஞ்ஞான கலாநிதி; என்னும் பட்டத்தைக் கொடுத்துக் கௌரவித்தது.

இவர் தனது தந்தையாரைப் போலவே இலங்கைக்குத் தலைப்பாகை அணிந்தே வந்தார். கலையார்வம் மிக்க தனது தந்தையாரைப் போலவே இவரும் கலையில் ஆர்வம் கொண்டு செயற்பட்டார். தமது ஓவியங்களையும், சிற்பங்களையும் மேனாட்டவரும் அறியவேண்டுமென்று விரும்பிய அவர் 1907ம் ஆண்டு பதவி துறந்து இங்கிலாந்து சென்றார்.

மேலும் தாம் சேகரித்த செய்திகளைக் கொண்டு இடைக்கால 'சிங்களக் கலைகள்' எனும் நூலை வெளியிட்டார். 1914ம் ஆண்டு முதலாவது உலகமகா யுத்தம் மூண்ட காரணத்தால் ஆனந்தர் அமெரிக்கா சென்றார். இவ் கலைகள் ஊடாகத் தத்துவத்தை உணர்ந்து 40ற்கு மேற்பட்ட கலை சம்பந்தமான கட்டுரைகளை எழுதி வெளியிட்டார்.

ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள் பல தடவை இலங்கைக்கு வந்துள்ளார். யாழ்ப்பாணத்துக்குச் சென்ற பொழுது யாழ். இந்துக் கல்லூரி அவரை வரவேற்று யாழ் மக்களுக்கு அவரது புகழை அறியும் படி செய்தது. இவர் கலை அறிஞராகவும் சீர்திருத்த பணியாளராகவும் திகழ்ந்த பொன்னாட்டிற்கு அளப்பெரிய சேவைகள் ஆற்றியதால் அவருக்கு 'வித்தியாவிநோதன்' எனும் பட்டம் வழங்கியது.

கலாநிதி ஆனந்தரின் 70 ஆவது பிறந்த நாள் பொஸ்ரன் நகரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் சேர் ஐவர் ஜெனிஸ் தலைமையில் பாராட்டுக்கள் வழங்கப்பட்டன. 70வது பிறந்த நாள் கொண்டாட ஒரு மாதம் செல்ல உலகம் போற்றும் உத்தமர், ஈழத் திருநாட்டின் தவப்புதல்வர் 1947ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

இவரது மறைவுக்குப் பின்னர் இவரது மனைவி டொனா லுயினா கணவனின் அஸ்தியைக் கொண்டு இலங்கைக்கு வந்து பின்னர் இந்தியாவிலுள்ள திரிவேணி சங்கமத்தில் கரைத்தார்.

# பொது அறிவு

- இந்திய தேசிய கீதத்தை இயற்றியவர் ரவீந்திர நாத் தாகூர்.
- உலகில் மிகப் பெரிய இஸ்லாமிய நாடு இந்தோனேசியா.
- மிகக் குறுகிய தேசிய கீதம் உள்ள நாடு யப்பான். 4 வரிகள்.
- இரண்டாம் உலக மகா யுத்தம் யப்பானில் நடைபெற்றது.
- உலகில் மிகப் பெரிய தீவு கிறீன்லாந்து.
- இலங்கையின் முதல் அரசி அனுலா.
- இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தியவர் C.W.W. கன்னங்கரா.
- பூச்சியத்தை அறிமுகப் படுத்தியவர் ஆரியப்பட்டா.
- வெள் வரிப்பட்டத்தைக் கண்டு பிடித்தவர் ஜோன் வென்.
- அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் கொலம்பஸ்.
- உலக அதிசயங்கள் 7 (8 வதாக சிகிரியா பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.)

*வி. சுபாஜினி*
*தரம் - 11L*
*மட். களுதாவளை ம.வி*

## சிறுகதை

# யாரைத்தான் நம்புவதோ..

குழந்தைவேல் சுதாகரன்

பிள்ளையார் கோயில் மணி ''டாங்'' 'டாங்' என ஒலித்தது. பறவைகள் கீச்சிடும் ஓசையும் நித்திரையில் உள்ள வாணியின் காதுகளில் மெதுவாகச் சென்று அவளைத் தட்டி எழுப்புகிறது.

வழக்கம் போல தனக்குரிய கடமைகளை முடித்துக்கொண்டு ''அம்மா ஸ்கூலுக்குப் போயிற்று வாறேன்''. என்று தன் தாயிடம் சொல்லிப் புறப்பட்டாள். பார்வதி விடைகொடுத்து விட்டு தன் மகளின் அழகைப் பின்னால் நின்று ரசித்துக் கொள்வாள். தன் மகள் அழகானவள் என்பதில் அவளுக்கு பெருமையோ பெருமை. பெரிய இடத்தில் தன் மகளைக் கட்டிக் கொடுக்கலாம் என்று பூரித்துக் கொண்டு நின்றாள். தான் கஷ்ரப்பட்டாலும் தன் மகள் நல்ல வசதியாக வாழ வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு!

ஆனால் மகள் காதலிப்பது அவளுக்குத் தெரியாது. வாணி வீட்டிலிருந்து புறப்பட்டால் அவளைப் பார்க்காத கண்களே இல்லை. இளைஞர்கள் மாத்திரமல்ல திருமணம் முடித்தவர்கள் கூட சொக்கித் தவிக்கிறார்கள் என்றால் இன்னும் சொல்ல வேண்டுமா? மலரினை முகர்ந்து பார்க்கத் துடிக்கும் வண்டுகளைப் போல இளைஞர்களும் வயதானவர்களும் துடிப்பார்கள். அப்படிப்பட்ட பேரழகி காதல் வலையில் வீழ்ந்து விட்டாள். அவளுடன் படிக்கின்ற பக்கத்து ஊரில் வசிக்கின்ற வசதியான குடும்பத்தில் பிறந்த சேகரே இவளை லவ் பண்ணுகின்றான். இருவர் வீட்டிலும் இவர்களின் காதல் சமாச்சாரம் தெரிய வருகிறது. வாணியை எப்படியாவது தன் பக்கம் இழுக்க வேண்டும் என்று சேகர் நினைத்தான்.

பார்வதிக்குத் தெரிந்த நாளில் இருந்து ஒரே அர்ச்சனை வாணிக்கு! சேகருடன் பழகினதைக் கண்டனென்றால் உன்னை வீட்டில் கூட எடுக்கமாட்டேன். என்னை மீறி அவனைக் கலியாணம் செய்வதென்றால் என் முகத்தில் கூட நீ முழிக்கக் கூடாது என்று கண்டிசன் போட்டாள். வரம்பை மீறிய நீரைப் போல தாயின் எதிர்ப்பையும் உடைத்துச் சென்று விட்டாள் வாணி. சேகர் கூட்டித்து ஓடி விட்டான். தன்னைக்கடைசி வரைக்கும் சேகர் வைத்துக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையுடன் சென்றவள் அனுபவிப்பது வேறாகி விட்டது.

வாணி ஒரு நாளும் காணாத ஒரு புது இடம். பாழடைந்த வீடு. இதில் தான் சேகர் அவளைக் கொண்டு நிறுத்தினான். தாயின் அரவணைப்பில் செல்லப்பிள் ளையாக வாழ்ந்து வந்த அவ ளுக்கு இப்போது இருக் கும் இடம் அவளு க்கு பய மாக இருந்தது. ஆனால் சேக ருக்கு உழைப் பேதும் இல் லை.




பணம் கை நிறைய வைததிருக்கின்றான் தொழில் ஒன்றும் இல் லை. எப்படிச் சேகர் காசி... என்று வாணி கூறி முடிக்கும் முன் உனக்குத் தேவையில் லாத பேச்சுக்கள் வேண்டாம். என்று வெடித்த தைப்போல் கூறிவிடுவான். எல்லா வசதியும் நமக்குக் கிடைக்குதுதானே, எப்படிப் பணம் வந்தாலும் நமக்கென்ன இருக்கிற வீடு யாரிட வீடு என்றாலும் நமெக்கென்ன என்று வாணியும் விட்டுவிட்டாள்.

இவ்வாறு நகர்ந்தன மூன்று மாதங்கள். அதுவரைக்கும் வாணிக்கு யாருடைய வீடு, சேகருக்கு எப்படிப் பணம் கிடைக்கிறது என்பது புரியாத புதிராகவே உள்ளது. அவன் அவளைக் காதலிக்கும் போது இருந்த மாதிரி தற்போது இல்லை. அவளின் மேல் பாய்ந்து விழுவான். எதற்கு எடுத்தாலும் ஏச்சித்தான் விழும். போவான் பணத்துடன் வருவான். இவ்வளவுதான் அவளுக்குத் தெரியும்.

ஒரு நாள் சேகர் வீட்டுக்கு வரப் பிந்தியது, வாணியின் நெஞ்சில் ஈரமில்லை. பககம் யாருமில்லாத இடம். பயந்து பயந்து இருந்தாள். அப்போது கடப்பு வாயிலில் ஒரு கார் வந்து நின்றது. அச்சத்துடன் பார்த்தாள். அதில் சேகர் இறங்கினான். அப்போதுதான் அவளுக்கு மூச்சே வந்தது . காரிலிருந்து வயதுபோன ஒரு மனிதரும் இறங்கி சேகருடன் வந்தார். அவருக்கு சுமார் அறுபது வயது இருக்கும். வீட்டுக்குள் வந்தவுடன் இந்தத் தாத்தா யாரு? சேகர் எனக் கேட்டாள். பணம் எப்படி வந்தது? என்று அடிக்கடி கேட்பாயே! இவ்வளவு நாளும் பணம் தந்து உதவி செய்தவரு இவருதான். இனிமேல் உதவி செய்யப்போறவரும் இவருதான். என்று பதிலளித்தான் சேகர். கேட்டுக்கொண்டு நின்ற வாணி எதற்காக அவரு நமக்குப் பணம் தரவேணும் என்றாள். அது அவரே சொல்லுவாரு. அவருடன் காரில் சென்று பணம் வாங்கித்து வா என்றான் கணவன். இந்த இரவு நேரத்திலையா? நான் போறது. அவர் திரும்ப ஏற்றிக் கொண்டு உன்னை விடுவாரு பயமில்லாமல் போ என்றான் சேகர்.

கணவனின் பேச்சை மறுக்கமுடியாத வாணி அந்த வயோதிபருடன் சென்று விட்டாள். கார் ஓடிக் கொண்டிருக்கும் பொழுது ஏன் தாத்தா சேகருக்கு நீங்க என்ன உறவு? பணமெல்லாம் கொடுத்து உதவி செய்கிறீங்க உங்களுக்குச் சொந்தமா? என்றாள் வாணி ''ஆ.... ஆ... ஆ.... என்று அவர் சிரித்து விட்டு சேகர் என்னைப்பற்றிச் சொல்லவில்லையா? வீட்ட போய் விளக்கமாய் சொல்றன் என்றார் அவர். இவ்வாறு கதைத்துக் கொண்டு போகும் போது ''கறாச்'' என்றது பிறேக். ''என்ன தாத்தா''? என்றாள் வாணி. இது தான் நம்ம வீடு இறங்கிற்று வா என்றார். கிழவர். வீட்டைப் பார்த்த வாணி திகைத்துப் போனாள். இப்படி ஒரு வீட்ட நான் வாழ்க்கையில காணல தாத்தா. எந்தப் பெரிய வீடு தாத்தா இது என்றாள்.சரி வாணி நீ விட்டச் சுற்றிப் பாரு நான் பணத்தை எடுத்து வாறன் என்றார் அந்தக் கிழவர். நீங்க மட்டும் தானா? இந்த வீட்டில் இருக்கிறீங்க ஒருத்தரையும் காணல என்றார் வாணி. ஆமா நான் மட்டும்தான் இருக்கன். மற்ற எல்லோரும் வெளியே போயிற்றாங்க. அதெல்லாம் அப்புறம் விளக்கமாகச் சொல்லுறன். நீ விட்டைச் சுற்றிப் பார்த்துவா என்றார். அவளும் ஆவலுடன் ஒவ்வொரு அறையாகச் சென்று பார்வையிட்டாள். அவள் சென்றதும் வீட்டுக் கதவுகளை அடைத்துவிட்டான் கிழவன். சுற்றிப்பார்த்து விட்டு வந்த வாணி சீக்கிரம் வெளிக்கிடுங்க தாத்தா போவம். சேகர் காத்திருக்கும் என்று சொல்லிக் கொண்டு நிமிர்ந்தாள். கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. ஏன் தாத்தா கதவு அடைச்சிருக்கு என்று அவள் கூறி முடிக்கும் முன் சினிமாப் படங்களில் வில்லன் சிரிப்பதைப் போல சிரித்தான் அந்தக் கிழவன். எனக்கும் சேகருக்கும் என்ன உறவு என்று கேட்டியே? அதைப் பற்றிச் சொல்ல வேண்டாமா? சொல்றன் கேள், உன்னை என்னிடம் பணயம் வச்சி நிறையப் பணம் வாங்கியிருக்கான் உன் புருஷன். நான் கொடுத்த பணத்தில் தான் உங்க குடு ம்பம் இவ்வளவு காலமும் ஒடிக் கொண் டிருந்தது. இப்பவும் ஓடிக் கொண் டிருக்கு, இனியும் ஓடப் போகுது. உண்ட புருஷன் உனக்கிட்ட எல் லாம் சொல்லியிருப்பான் என்று நினைச்சன். நீயும் சம்மதிச்சித்தான் என் கூட வாறியாக்கும் என்று சந்தோசப்பட்டன். காரில் வரும்போது தான் உனக்கு ஒன்றும் தெரியாது என்று அறிஞ்சன். அவன் சொல்லாட்டி என்ன நான் இப்போது சொல்லி விட்டேன் தானே! உன்ட அழகுக்கு நான் மட்டுமல்ல எவன் தான் பணம் கொடுத்து வாங்காம விடுவான். அடம்பிடிக்காம எனக்கும் வயசாச்சி சொன்ன படிகேளு. என்று மூச்சுப் பிடியில் சொல்லி விட்டு வாணியின் முகத்தைப்பார்த்தான் கிழவன். வேண்டாம்.... தாத்தா வேண்டாம்.... தாத்தா என்று கூச்சலிட்டபடி கிழவனின் பாதங்களில் விழுந்தவளை தோளில் பாட்டன் பேத்தியைத் தூக்குவது போல தூக்கிக் கொண்டு படுக்கை அறைக்குக் கொண்டு சென்றான் மிருகத்தனம் பிடித்த கிழவன்.

வாணியும் கொடும்புலியின் வாயில் அகப்பட்ட கோழி தப்பிச் செல்வதற்குப் போராடுவது போல கிழவனுடன் போராடினாள். போராட்டம் நடந்தும் பயனில்லை. கரும்பினைச் சப்பி சக்கையைத் துப்புவது போல வாணியைத் துப்பி விட்டான். கிழவனுக்கு அன்றிரவு சொர்க்கம், ஆனால் வாணிக்கு நரகமாகியது. குழந்தைப் புத்தியில் இருந்த வாணிக்கு இப்போது தான் புத்தி வெளிப்பட்டது. இந்த உலகத்தில் யாரைத்தான் நம்புவது இந்த பேதை நெஞ்சம். தன் கணவனின் கையிலிருந்த பணத்திற்கு அர்த்தம் இப்போது தான் கண்மணிக்குப் புலனாகியது. தன் கணவனின் போக்கும், சில கிழடனுகளின் மோக கபடத்தனமும் அவளுக்கு இப்போதுதான் புரிந்தது.

இப்படிப்பட்ட கிழவனுகளைத் தாத்தா என்று என்னைப் போன்ற பெண்கள் கும்பிடக் கூடாது. அவனுகள் தாழ்ப்பாள் போட்டு விடுவானுகள். அம்மா சொல்லைக் கேட்காத பிள்ளைகளுக்கு இது ஒரு பாடமாக அமையட்டும். என்றெல்லாம் தன் மனதுக்குள் பல கோணங்களில் சிந்தித்துக் கொண்டிருந்தாள் வாணி.

அவளின் முகத்தைப் பார்க்கமுடியாதவாறு கண்ணீர் பெருகியது. தண்ணீரில் தான் தோணி ஓடும். ஆனால் வாணியின் கண்ணீரில் கூட ஓடக்கூடியவாறு பெருக்கெடுத்தது. முகத்தை மட்டுமல்ல அவளின் தேகத்தைக் கூடப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. கொடும்புலி பிடித்துத் தப்பிய கோழி போல உடம்பெல்லாம் ஒரே புண்ணாக இருந்தது. மதுரையை எரித்த கண்ணகி போல தலைவிரிக் கோலத்தில் அழகான வாணி அசிங்கமான வாணியாகக் காணப்பட்டாள்.

முதல் நாள் இரவு 7.00 மணிக்குக் கொண்டு வந்த வாணியை மறு நாள் காலை 7.00 மணிக்கு கிழவன் அழைத்துச் சென்றான். அழுது கொண்டிருந்த வாணி தன் கணவனின் முகத்தில் தான் முழிக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தாள். சனங்கள் நாடமாடும் தெரு வந்ததும் காரில் இருந்து யன்னல் ஊடாக பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்டாள். அவளது கைக்குள் ஒரு கடிதம் இருந்தது. அதில் தனக்கு நடந்த சம்பவங்கள் அனைத்தும் விளக்கமாக வாணி மொழிந் திருந்தாள்.

இறுதியாக தன்னைப் போன்ற யுவதிகள் தாயின் சொல்லைத் தட்டாதவர்களாகவும், தனக்கு ஏற்பட்ட இந்த நிலை யாருக்கும் வரக்கூடாது என்றும், எனது சாவு ஏனைய பெண்களுக்கும் ஒரு பாடமாக அமையட்டும் என்றும் குறிப்பிட்டிருந்தாள்.

இந்தக் கடிதத்தைப் பார்த்தவர்கள் கிழவனையும், சேகரையும் பிடித்து அடித்து பொலிசாரிடம் ஒப்படைத்தனர். வாணியின் சாவுக்கு யார் காரணம் தாயா? இல்லை வாணியா? சேகரா? கிழவனா? ஆண்டவா யாரில் குற்றம் சொல்வது. யாரைத்தான் நம்புவது.

# கவிநாதம்

## அம்மா

அம்மா!
எங்களுக்காய்
எரியும் ஒளி விளக்கு நீ!
பொங்கும் துயரம்
பொத்தி வைப்பாய்
அல்லும் பகலும்
அயராது உழைப்பாய்
அன்பால் அணைத்து
அறிவால் உயர்த்தி
என்பை உருக்கி
எம்மை வளர்ப்பாய்!
அம்மா!
எங்களுக்காய்
எரியும் ஒளி விளக்கு நீ!
உயர்வாய் வாழ
உழைக்க வேண்டும்
உழைத்து வாழ
உயர்படிப்பு வேண்டும்
ஓயாது உரைக்கும்
உந்தன் வார்த்தைகள்
"உண்மை பேசி
உத்தமராகு"
அன்பாய்க் கூறும்
அறிவின் உரைகள்
இன்றும் என்றும்
ஒலிக்கும் அம்மா!
பண்பாய் வளர
பாசம் ஊட்டி
நண்பனாயிருந்து
நல்லறம் காட்டி
கண்போல் எம்மை
காத்திடும் அம்மா
அம்மா!
எங்களுக்காய்
எரியும் ஒளி விளக்கு நீ!
தமிழே உயிரே
தாயின் மொழியே
அதுவே நமது
அன்பு மொழியே
ஆயிரமாயிரம்
ஆண்டுகளாயினும்
அன்னைத் தமிழில்
ஆண்டு வாழ்வோம்
அம்மா நீயும்
அடிக்கடி கூறும்
அன்பு வார்த்தைகள்
இடித்து உரைத்திடவே
இனியொரு தெய்வம்
எங்களுக்கு உண்டோ!
அம்மா!
எங்களுக்காய்
எரியும் ஒளி விளக்கு நீ!

தேனினி

## இலட்சியக் கனவு

வெந்து போன மண்ணில்
நொந்து போனது மனம்.
காய்ந்து போன இதயத்தில்
நைந்து போனது உறவு.
நிறைந்து போன கவலையில்
கரைந்து போனது கண்ணீர்.
வறுமையில் கொடுமையில்
சிதைந்து போனது- என்
இலட்சியக் கனவுகள்
வீட்டைப் பார்த்தால்- கூரை வழியே
ஓட்டைகள் பளிச்சிடுகின்றன.
இதற்கிடையில் முடிந்துதான் விடுமோ...?
என் இலட்சியக் கனவு?

கயல் விழி புண்ணியமூர்த்தி
நொச்சி முனை

## என் இதயம்

குப்புறக் கிடந்து
குமுறி அழுகின்றது.
என் இதயம் உன்னால் இன்று!
அன்று நீ பேசியவார்த்தை
பாலை வானத்தில் நிழல் கொடுத்த
மரமாகத் தோன்றியதடி எனக்கு
இன்று நீ பேசும் வார்த்தைகள்
என் இதயத்தைக் கிழிக்குதடி
நான் சிறை சென்றதற்காய்
என்னை மறந்தாயோ- இன்னும்
எனக்கு விளங்கவில்லையடி?
சிறை மீண்டு பறந்து வந்தேன்.
உன் அன்பைத் தேடி
என் சிறகையே உடைத்து விட்டாய்!
இவைகளால் என் இதயம்
கல்லறையிலும் குமுறி அழுமடி
நிம்மதியான தூக்கத்தையும் இழந்து.....

தி.கண்ணா
எருவில்

## ஒன்றும் விளங்கவில்லை

ஐயோ....
ஒன்றுமே விளங்குதில்லை
இந்த நாட்டின் போக்கு!
சண்டையா?
சமாதானமா?
இல்லை
சண்டைக்கான சமாதானமா?
இல்லை
சமாதானத்திற்கான
சண்டையா
ஐயோ
ஒன்றுமே விளங்க வில்லை.

ரீ.சுரேஸ் கோவி
ஆரையம்பதி

## காதல்

உணர்வால் உணர்ந்து
உதிரமாய் உதிர்ந்து...
கண்கள் பேசி
களங்கம் போய்....
புன்னகை பூத்து
புரிந்து கொண்டு...
இமைகள் அசைந்து
இனிமை அடைந்து....
உலகில் பிறந்த
உன்னத உறவு காதலே......!

எம்.ரி.எம்.யூனுஸ்
காத்தான்குடி-1

## உன் வருகைக்காக...

உன்னைப் பார்க்கும் போது தான்
என் உள்ளம் மலர்கிறது
உன் உருவம் அதற்குள் விழுகிறது
என் கண்கள் சத்தமின்றி
உன்னோடு உரையாடுகின்றன.
நித்தமும் உன் நினைவில் நீந்துகின்றேன்.
தினமும் நேசிக்கின்றேன்.
உன் வதனத்தை
பகலில் யோசிக்கிறேன் பழகியதை
இதயத்தில் புகுந்து விட்டது காதல்
அகற்ற முடியவில்லை
கதவுகள் மூடியும் விட்டது.
நிஜமானால் உண்டு
இல்லையென்றால்
இறந்து விடும் என் இதயம்.

இ.ஹஜேந்திரன்
கன்னன்குடா

## அந்த மூன்று சொல்

ஐ லவ் யூ என்று சொன்னாய்
அப்பாவியாய் சிரித்தேன்
ஐயோ நீ பாவம் என்றாய்
அதிர்ந்து விட்டேன் நான்
இப்போது தான் தெரிகிறது
நீ பலபேருக்கு இந்த
மூன்று சொல் சொல்லி
மூழ்கடித்து விட்டாய் என்று
ஓ.. இப்போது புரிகிறது
நீ என்னையல்ல என் பணத்தை
காதலித்தாய் என்று
இப்படிக்கு நான் எழுதிக்கொள்வது
விழிப்பாயிருங்கள் ஆண்களே
வீதியில் அழகான தேவதைகளாய்
பல சாத்தான்கள் உலாவுகின்றன.

## தமிழ் அழிவதில்லை

பத்து மாதம் தாயின்
கருவறையில் இருந்தேன்
தமிழனாகப் பிறப்பதற்காக!
பல ஆண்டுகள் சிறையில் இருக்கிறேன்
தமிழனாகப் பிறந்ததற்காக!
அதையெண்ணி வருந்தவில்லை
தமிழனாகப் பிறந்ததே
என் பாக்கியம்!
எத்தனை காலம்
சென்றாலும்-தமிழ்
என்றும் அழிவதில்லை.

ரமேஷ்கண்ணா
சங்கமன் கிராமம்,

## சீ.ஐ.டி. வாரான்...

பொயின்டை அடைந்தால்-அன்று
போளின் தான்
பொதுமக்கள் கூட போராளிதான்.
கதைத்தால் அடி
பார்த்தால் இடி
எதிர்த்தால் வெடி
ஏசினால் வெட்டு
அடையாள அட்டையை அலுக்காது
கேட்பான்
புதிதாய் பார்ப்பது போல்
புதினமாய் நடிப்பான்.
பூநகர் என்பதை
பூநகரி என்பான்
புலி என்ற சொல்லை
புளி என்று சொல்வான்
கொட்டியா என்று
கொந்தளித்துப் பாய்வான்
சண்டை என்று வந்தால்
சஞ்சலித்து ஓடுவான்
எத்தனை ஷெல்
என்னுயிரை அழித்தது
இத்தனை செய்தும்
இவனே! இன்று...
கூட்டாளி என்று
கூத்தாடி வாரான்
சிரிக்காத போதும்- பல்லை
இழித்தாவது காட்டு...
கோணாது அவன் மொழியில்
கொஞ்சமாவது பேசு
காணாது போன்று- அவனைக்
கவனித்துக் கொள்ளு....ம்....சூ... சீ.ஐ.டி.
வாரான்!!

க.சிவானந்தம்
பூநகர்-வெருகல்

## பிரிவுகள்

என் இதயப் பூங்காவில்
பூத்த முதல் பூ –நீ
உன் காதல் என்னை
அழகாக்கியது.
உன் பாசங்கள் என்னை
பணிய வைத்தது
உன் சிரிப்புக்கள் எனக்குள்
சித்திரம் தீட்டியது
உன் மௌனங்கள் எனக்கு
சம்மதம் தந்தது
உன் கோபங்கள் எனக்கு
துன்பத்தைத் தந்தது
உன் பிரிவுகள் எனக்கு
கண்ணீரைத் தந்தது.

த.தர்சினி
கோவில்குளம்.

## ஒப்பந்தம்

புரிந்துணர்வு ஒப்பந்தமா?
புரிந்து உணராத ஒப்பந்தமா?
ரணில் ஐயா இழுத்தடித்தார்
சந்திரிகா அம்மா பேய்க் காட்டுகிறார்
இராணுவம் வேட்டையாடுகிறது
எம்மவர் உயிர்களை
சொல்ஹெய்ம் ஓடி ஓடி அலுத்து விட்டார்.
தேரர்கள் விதை நசுக்கப்பட்டும் உணராமல்
எமக்கெதிராய்க் கர்ச்சிக்கிறார்.
ஜூலை கலவரத்திற்கு மன்னிப்பு நாடகம்
இந்தியா அமெரிக்கா ஒப்பந்தங்கள் எனும்
சூழ்ச்சி வலைகள் ஆட்டுத் தோல் போர்த்திய
ஓநாய்களும்
கர்ச்சிக்கிற சிங்கங்களும் உள்ள இன்நாட்டில்
எத்தனை ஒப்பந்தங்களைக் கண்டு விட்டோம்.
ஒப்பந்தம் வேண்டாம் என எதிர்க்கும்
இன வெறியர்களே
சாது மிரண்டால் காடு கொள்ளாது
இதை உணர்ந்தால் சரி!

சி.ரவிரஞ்சித்
ஜயன் கேணி

## எது சமாதானம்

எது சமாதானம் என்று
எனக்கு விளங்கவில்லை
இராணுவ முகாம்கள் அகற்றப்படவில்லை
இயல்பு வாழ்க்கை இன்னும் இல்லை
அபிவிருத்தி என்ற பேச்சே இல்லை
பிஸ்டல்கள் முத்தமிடுகின்றன
பல இளம் உயிர்களை!!
மண்ஃல் மூட்டைகளும் சென்றிக்
கம்பிகளும் இன்னும் எம்மைப்
பயமுறுத்துகிறது
பெண் சிப்பாய்கள் எம் பெண்களின்
அந்தரங்கங்களில் கைவைத்து சோதனை!
தாத்தாக்களின் வேட்டி கழற்றப்படுகிறது.
விசைகள் அழுத்த ஆயத்தமாய்
துப்பாக்கிகள் தயாராய்
எனக்கு இன்னும் விளங்கவில்லை
எது சமாதானம் என்று

## சமாதான வெண்ணிலா

நேற்றைய நிகழ்வுகளுக்காய்
இன்று கண்ணீர் வடிக்கும்
நம் தேசத்தில்
சமாதானம் என்பது
சந்திக்கவே முடியாத
சொர்ப்பனமாகியதோ?
நேற்றையச் சமாதானப் பேச்சுக்கள்
இன்று முற்றுப்புள்ளியை
முத்தமிடும் தூரத்தில்
மூக்கை நீட்டுகிறது.
யுத்த மேகங்கள்
ஈராக்கை மட்டுமன்றி
எம்மையும் தாக்கிடுமோ?
என்ற அச்சத்தில் மீண்டும்
ஆமையாய்த் தம்மை
அடக்கிக் கொள்கிறார் மாந்தர்.
"சமாதானத்தைக் சீர் குலைக்க
சதிகள் சரமாரியாய்"
என பத்திரிகைகள் பல
பக்கமிடுகின்றன.
சமாதானம் வந்ததென்று
சந்தோச வானில்
சிறகடித்த சிட்டுக் குருவிகள்
நாளை மீண்டும்
சிறகொடிந்த பறவையாய்
சிறைக்குள் சுருங்கிடுமா?
சமாதான வெண்ணிலவு
பாத யாத்திரை சென்று
எம் சங்கடத்தைப் போக்குமா
இல்லை.....
சஞ்சலத்தில் ஆழ்த்துமா?

ஜே.வினோ சோலையூர்.

## மேகமே..மேகமே...

காலமெல்லாம்
கடல் நீரை
காவிச் சென்று
வறண்ட நிலத்திற்கு
வளம் சேர்க்கும் மேகமே
ஒரு தடவையாவது
என் கண்ணீரை
காவிச் சென்று
உலர்ந்த அவள் இதயத்தில்
தூற்றி விடுவாயா?
அப்போதாவது......

ந.கோணேஸ்
கலைப்பீடம்
கிழக்குப்பல்கலைக்கழகம்.

# மட்டக்களப்பு பிரதேச பூர்வீக மண்வளச்சொற்கள்

இக்கட்டுரை பூர்வீக தொழில் முயற்சி களை முக்கியமாக இனம் கண்டு கொள்வதுடன் அவற் றுடன் இணைந்த தொழில் வளச் சொற்களையும் இயன்றவரை ஆய்வு செய்வதைக் குறிக்கோளாகக் கொண்ட போதிலும் இன்று வரை அவை பேணப்பட்டு வருவது. குறிப்பிடத்தக்கது.

தொழில்சார் சுவையான செய்திகள் கொண்டதாக அமைக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு அமைவிடம் என்பது ஈழத்தின் கிழக்கே அமைந்துள்ள போது இதன் வடக்காக வெருகல் ஆற்றினையும் தெற்கே பொத்துவில் பாணமை வரையான எல்லையினையும் கிழக்கே வங்காள விரிகுடாவினையும் மேற்கே பொலநறுவை வரையிலான அடர் காடுகளையும் கொண்டது.

**தொழில்களும் அதன் துணைநிலை அமைப்புக் களும்**

தொழில்களும் கீழ்வருமாறு விடய இலகு கருதி வகுக் கப்பட்ட போதி லும் இது முற்று முழுதான தொழில் பகுப்பு என உறுதியாக வரையறை செய்யமுடியாது.

**வேளாண்மை**

அவை கீழ்வருமாறு வகுக்கப்படும், அவைவருமாறு

அ. விவசாய வேளாண்மை.

ஆ. விலங்குவேளாண்மை.

இ. நாணய பரிமாற்றங்கள்.

தொழில்சார் முயற்சிகளில் வேளாண்மையில் விவசாய வேளாண்மையினை எடுத்து நோக்கும் போது அவற்றில் கீழ்வருவன கட்டுரைக்கென எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அவைவருமாறு

அ.நெல் செய்கையும் தொழில்சார் வளச் சொற்களும்.

ஆ.வாழைபற்றிய செய்திகள்.

இ.வெற்றிலை பற்றிய செய்திகள்.

**அ) நெல் செய்கையும் தொழில்சார்வளச் சொற்களும்.**

நெல் செய்கையுடன் தொடர்பு பட்ட தொழில்சார் வளச் சொற்களை விடய இலகு கருதி கீழ் வருமாறு வகுக்க முடியும். அவை பின்வருமாறு,

1. நெல் செய்கையுடன் தொடர்பு பட்ட ஆளணிப்படை வளச் சொற்கள்.
2. நெற்செய்கையுடன் தொடர்புபட்ட நில நிலவளச் சொற்கள்.
3. நெல் செய்கையில் விளைநெல்லுடன் தொடர்புபட்ட வளச் சொற்கள்.
4. நெல்செய்கையுடன் தொடர்பு பட்ட தொழில் கருவி சொற்கள்.
5. நெல்செய்கையுடன் தொடர்பு பட்ட தொழில் நடவடிக்கை வளச் சொற்கள்.
6. நெல்செய்கையுடன் தொடர்புபட்ட விலங்கு வளச் சொற்கள்.
7. நெல் செய்க்யுடன் தொாடர்பு பட்ட கட்டளை அல்லது பணிப்புரைச் சொற்கள்.
8. நெல் செய்கையாளர்களினால் பாவிக்கப்படும் பேச்சு வளச் சொற்களும் விளக்கங்களும்.
9. நெல் செய்கையில் மத நடவடிக்கைச் சொல்லும் விளக்கமும்.
10. நெல் செய்கையுடன் தொடர்புடைய பயிர் பாதுகாப்பு நடவடிக்கை சொற்களும் விளக்கங்களும்.

**நெல்செய்கையுடன் தொடர்பு பட்ட ஆளணி படையுடன் தொடர்புடைய தொழில் சார் வளச்சொற்களும் விளக்கங் களும்.**

**அ. போடிஅல்லது போடியார்**

உழவர்களின் தலைவன் என அழைக்கப்படும் இவனே காடழிந்து வயல் பெருக்கி பெரும் நிலங்களுக்கு உரிமையாளன்.

✱ போடிக் கிழவி /போடியாரின் மனைவி

✱ முல்லைக்காரன் / முல்லைக்காரன் மனைவி

✱ செய்கைக் காரன் - வயலில் வேலை செய்பவர்கள் செய்கைக்காரார் என அழைக்கப் படுவதுடன் இதில் முழுப்பங்குக்காரன் என்பது செய்கைக்காரரின் பெரிய ஆள். அரைப்பங்குக் காரார் என்பது 14 வயதுக்குக் குறைவானவர்கள். முக்கால் பங்குக்காரர் என்பது முழப்பங்குக் காரருக்கும் இடைப்பட்டவர்கள்.

**வட்டவிதானை**

வயலில் பயர்ச்செய்கைக் கடமைகளை மேற் பார்த்து நடாத்துவதற்கு வயலில் உள்ள போடி மார், குத்தகைப் போடிமார் ஆகியோரால் நியமிக்கப்படும் ஒருவர்.

**வட்டைக்காவலர்**

வட்டை விதானையின் உதவியாளர்.

**குருவிக்காரன்**

வேளாண்மை காயகும் நேரத்தில் பறவைகளால் ஏற்படும் சேதத்தைத் தடுக்க குருவிகளைத் துரத்துபவன் இவனே. வயல்வேலை செய்பவர்களுக்கு தண்ணீர் எடுத்துக் கொடுத்தல் போன்ற வேலைகளைச் செய்பவனாக இருப்பான். பெரும்பாலும் சிறுவர்களே குருவிக்காரர்களாக இருப்பார்கள்.

கதிர் பொறுக்குவோர்.

வயல் வெட்டி உப்பட்டி கட்டிய பின் வயலில் எஞ்சிய நெற்கதிர்களைப் பொறுக்குபவர்கள்.

**நெற்செய்கை நிலத்துடன் தொடர்பு பட்ட தொழில் சார் வளச் சொற்களும் விளக்கங்களும**

1. பெரும் போகம் / அல்லது மனாவாரி~ அல்லது முன்மாரி பூமி. மழையை நம்பி வயல் செய்யும் பூமி.
2. கால போக பூமி~ நீர பாய்சுதல் மூலம் மேற்கொள் ளப்படும் நெற்செய்கைப் பூமி.
3. ஏற்றாலைக் காணி~வயல் வாய்க்கால் மட்டத்தை விட உயரமாக உள்ள வயல்களுக்கு ஏற்றுக்களைக் கொண்டு நீர பாய்சும் காணியே ஏற்றழைக் காணியாகும்.
4. முத்தெட்டுக் காணி~முழு உரிமையாக நிலத்தை ஒருவனுக்கு விலை எதுவும் கொள்ளாது அளிக்கப்படும் நிலம்.
5. அவணத்தறை அல்லது விதைப்புத் தறை~ மூன்று ஏக்கர் நிலத்தினைக்குறிக்கும்.
6. வட்டை ~வயல் பகுதி முன்னர் வட்டமாக அமைந்தமையினால் வட்டம் என்ற சொல்லின் அடியாகப்பிறந்து இருக்கலாம் என்பர்.
7. வரவை~வரம்பினால் எல்லைப்படுத்தப்பட்ட வயல் பரப்பின் சிறு பகுதி.
8. போட்டா~மிகப்பெரிய வரவையினைக் குறிக்கும்.
9. கண்டம்~வயல்கள் சேர்ந்து கண்டமாகும்.
10. வயல் நிலம்

    பல கண்டங்கள் சேர்ந்தது.
11. இலவிசம்

    வயலில் போடியாரின் பகுதி.
12. முல்லை வயல்

    வயலில் முல்லைக்காரனின் பகுதி.
13. குருவி மூலை வரவை

    குருவிக் காரனுக்கான வரவை.
14. வக்கடை

    நீர் செல்லவதற்காக வரம்பில் வெட்டி விடப்படுவதும் தேவைப்படும் போது அடைக்கப் படுவதற்குமான வழி.
15. நட்டுமை

    வரம்புகளின் நடுவில் கண்ணுக்குப் புலப்படாதவகையில் அமைந்து கிடக்கும் நீர் கசிந்து பொழியும் கண்ணறை
16. களவெட்டி / சூட்டடி

    சூடுகள் வைக்கும் வரவை இதே சூடு மிதிக்கும் களமும் ஆகும். இதன் படி சற்சதுர களத்தில் வட்ட வடிவில் மண்ணினால் அமைக்கப்பட்ட மேடை. இது நிலத்திலிருந்து நான்கு அடி உயரமாக இருப்பதுடன் மழைத்தண்ணீர் ஈரம் என்பனவற்றால் கதிர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதனை அடிப்படையாகக் கொண்டது.
17. பட்டறை~நெற்பட்டறை

    விளைநெல்லை சேமித்து வைக்கும் இடம்.
18. வாடி

    வயலில் திடலான, தண்ணீர் பிடிக்காத மேட்டு நிலத்தில் கம்புகளைக் கொண்டு வேளாண் மைக்காரர்கள் தங்கியிருக்கக் கட்டும் இடம். இதற்கு பாற்கொடி என்னும் ஒரு வகை கொடி பயன்படுத்தப்படும்.
19. வேலிக்கால்

    வேலியும் வேலி கட்டுவதற்கான மரங்களையும் குறிக்கும்.
20. வட்டை வேலி வயலுக்கான வேலி
21. சுடுவான் / தூணா போடுதல்~

    இரு காவல் பரன்களுக்கு இடையில் நெருப்புப் பற்றவைக்கும் சிறு பந்தல்.

    கொள்ளிகளைக் கொண்டு நெருப்புப் பற்றவைக்கும் போது வெளிச்சம் கண்ட பன்றிகள் வராது நின்றதுடன் வெளிச்சம் கண்ட பயிருக்கு தீங்கு இழைக்கும் பூச்சிகள் அதனுள் வந்து வீழ்ந்து இறப்ப தனால் பன்றித் தொல்லை. பூச்சித் தொல்லையிலிருந்து நெற்பயிர் காப்பாற்றப்படும்.
22. காவற் புரி~

    அறுவடை செய்யப்பட்ட நெல்லை குவியலாக்கி பின் மேற் பகுதியை சிறிது தட்டையாக்கி பரவிய பின் வேலைக்காரன் கம்பு நட்டு நெல்லைச் சுற்றிய நிலப்பரப்பில் வைக்கோல் மூலம் செய்யப்பட்ட புரி ஒன்றின் இரு முனைகள் படுமாறு வைக்கப்படும்.
23. அடிப்படுத்தல்~

    வைக்கோல் பட்டறையின் அடிப்பகுதி
24. கந்து முறி~

    நெல் ஒன்றுடன் இணைந்தவாறு கிடப்பதைக் குறிக்கும்.
25. அரை வயிறன்~

    நெல்லின் அரைப் பகுதி அரிசியாகி மிகுதி. வெறுமையாகக் காணப்படும் நெல்
26. பதக்கடை~

    கழிக்கப்படும் நெல்.

**நெல் விளைச்சலுடன் தொடர்புபட்ட வளச் சொற்கள**

1. மாவக்கை~

    அரிந்த ஒரு பெரியளவு நெற்கதிர்.
2. உப்பெட்டி~

    மாவக்கை சில சேர்ந்ததாகும்.
3. கட்டு~

    உப்பட்டி சில சேர்ந்தது.
4. ஆடு~

    பல நூறு கட்டு கதிர் சேர்ந்த போர்க் குவை.
5. கந்து~ சிறிய சூடு.
6. ஒட்டுத் தாள்~ கதிர் அறுக்கப்பட்டு வயலில் மீகுதியாகக் கிடக்கும் பயிரின் அடிப்பகுதியாகும்.
7. வைரப்பொலி~ நல்ல நெல்லு.
8. பொலிக் கொடி~ வைக்கோல்.
9. பொலி~ நெல்
10. முளை நெல்~ விதைக்கவேண்டிய நெல்லை சாக்குகளில் கட்டி நீரில் அமுக்கியவாறு சுமார் 12 மணித்தியாலங்கள் இழக வைத்தலைக் குறிக்கும்.
11. விதை நெல்~ விதைப்புக்கென ஒதுக்கப்பட்ட கலப்பு நீக்கிய நெல்.
12. படி நெல்~ வயல் வேலை செய்பவர்களுக்கென கூலியாக ஒதுக்கப்பட்ட நெல்.
13. சாப்பாட்டு நெல்~ உணவுத் தேவைக்கென ஒதுக்கப்பட்ட நெல்.
14. நெல் வகைகள்

    பச்சைப் பெருமாள், கறுப்பன்~ஆனை முகவன், பன்றிக் கூரன், வெள்ளைவாலன், செம்பவளச் சம்பா, சாம்பல் கறுப்பன், குறவன் சம்பா, தவிட்டுச் சம்பா, உதயன் சம்பா, முருங்கன் சம்பா, சீரகச்சம்பா, தங்கச்சம்பா, முருங்கைக் காயன், ஆனைக்கோடன், சீனெட்டி இவை தவிர இன்னும் பல உண்டு.

**நெல் செய்கையுடன் தொடர்புபட்ட தொழில் கருவி வளச் சொற்கள்.**

1. அவுரி~ நாற்காலி வடிவில் அல்லது முக்காலி வடிவில் உயரமாக கம்புகளை வைத்து வைக்கோல் புரியினால் இணைத்துக் கட்டுவது. நெல் தூற்றப்பயன்படுத்தப் படுவது.
2. வேலைக்காரன் கம்பு~ நெல் வைக்கோல் போர் கிழறும் வளைவான தடி.
3. கணக்கன்~ மரைக்கால்.
4. குஞ்சு வாயன்~ கைப்பெட்டி, இரண்டு மரைக்கால் கொள்ளும்.
5. பெருவாயன்~ சாக்கு அல்லது கடகம், ஐந்து மரைக்கால் கொள்ளும்.
6. படவாள்~ ஏர்க்கால் கம்பு.
7. நுகம்~ ஏர் முன் பகுதி.
8. மேழி~ ஏரின் நுகமும் ஏர்க் கலமும் சந்திக்கும் இடம்.
9. பொலி நெருக்கிப் பலகை~ களத்தில் கணப்படும் பொலியை நடுகளத்திற்கு எடுக்கப் பயன்படும் பலகை. இது சுமார் 5 அடி நீளமும் 6 அங்குல அகலமும் உடையது.
10. தோல்வாயன்~ சாக்கு, கடகங்கள் (பெரும் பாலும் பிரம்பு மூலம் செய்யப்படுபவை)
11. தாள் கத்தி~ வயல் வெட்டப்பயன்படும் வளைவான கத்தி.

**நெல் செய்கையுடன் தொடர்பு பட்ட தொழில் நடவடிக்கை வளச் சொற்கள**

1. நிலையெடுப்பு~ ஆடியில் போடும் முதலாவது உழவினைக் குறிக்கும்.
2. இரட்டடிப்பு~ ஆவணியில் போடும் இரண்டாவது உழவினைக் குறிக்கும்.
3. ஏர் நாள்~ தலை மழை பெய்ததும் உழவு தொடங்குவ தற்கு சுப நேரத்தில் உழவு மேற்கொள்ளுதலைக் குறிக்கும்.
4. நெல் மறுத்தல்~ நெல் விதைத்த பின் மேற்கொள்ளும் இரண்டாவது உழவு.
5. தண்ணீர கட்டுதல்~ காலபோகத்திற்கு நீர்பாய்ச்சப்பட்ட வயலை கிடா மாடுகளைக் கொண்டு சேர் ஆக்கப்படுவதைக் குறிக்கும்.
6. பூமி புளித்தல்~ சேற்று விதைப்புக்கு ஏற்ப வயலில் நிரம்ப தண்ணீர் கட்டப்பட்டு காலபோகத்திற்கு ஏற்ப மாற்றம் பெறுவதைச் சுட்டும்.
7. கொக்கு உழக்கல்~ முளை நெல் முளைக்க முன் வயல் நீர் குறைக்கப்பட்டு மாடுகளினால் உழக்கப்பட்டு சேர் அடிக்கப்படுவதைக் குறிக்கும்
8. கண் கழுவு தண்ணீர்~

    புளிக்கவிடப்பட்ட தரையில் முளையிட்ட விதை நெல்லை விதைத்து மூன்றாம் நாள் தண்ணீர் விட்டு முளையை நனைத்த பின் நீரை வெளியேற்று வதைக் குறிக்கும்.
9. முத்தெட்டு / முல்லை இலவசம்~

    போடிகள் இலவசமாக முல்லைக் காரருக்கு விதைத்துக் கொடுப்பது.

[தொடரும்......]

கே.எஸ்.ஆர்.சிவகுமார்.
கலாசார உத்தியோகத்தர்.




# தமிழின அழிப்புக்களின் நினைவுச் சுவடுகள்

அவர்கள் முகத்தை இவர்கள் பார்த்தவாறு அ தனர். அப்போது திடீரென ஒரு உத்தரவு வந்தமாதிரி கல் முனை நகரில் வைத்திருந்த அனைவரையும் மாடுகளைச் சாய்ப்பது போல் அவர்களை முன்னால் விட்டு இராணுவத்தினர் பின்னால் துப்பாக்கியை நீட்டியவாறு சென்றனர்.

லை. திரும்பும் திசையெல்லாம் ராணுவத்தினரையே காண முடிந்தது. அப்போது கல்முனை

வந்தோம். எங்களை ஏன் ஐயா பிடித்து வைத் திருக்கின்றீர்கள். எனக் கேட்டனர். அதையெல்லாம் பொருட்படுத்தாதவர்களாய் அந்தச் சிங்களக் காடையர்கள் தமது இனவெறியாட்டத்தைத் தொடங்க ஆரம்பித்தார்கள். நட்ட நடு வீதியில் பட்டப் பகலிலே அக் கூட்டத்திலிருந்த இளம் பெண் களைக் கட்டிப் பிடித்துத் தூக்கிக் கொண்டு நகருக்குப் பக்கத்தில் காணப்பட்ட பாழடைந்த கட்டடத்தினுள் கொண்டு சென்று அந்த அப்பாவிப் பெண்களை கதறக் கதறக் கற்பழித்தனர். இன்வெறி பிடித்த காமுகர்கள் தங்களது வெறியை ஆள் மாறி, ஆள் அப்பெண்கள் மீது தீர்த்துக் கொண்டனர். பின்பு அவர்களைத் துடிக்கப் பதைக்க வாளால் வெட்டிக் கொலை செய்தனர். அப்போது அந்த அப்பாவி இளம் பெண்கள் எழுப்பிய அவலக் குரல் அந்தப் பகுதியையே அதிரவைத்தது. அப்போது வீதியில் வந்தவர்களையும் நிலை குலைய வைத்தது. அவர் களால் தடுத்து வைக்கப்பட்ட அத்தனை பெண் களையும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்தனர். பின்னர் சிறிது நேரம் சென்றதும் அங்கு எஞ்சிய ஆண்களை அங் கிருந்த மற்றுமொரு கட்டடத்தினுள் கூட்டிச் சென்று அனைவரையும் வாளால் வெட்டிச் சாய்த்தனர். பின்னர் அந்தக் காடையர்களால் கொலை செய்



அப்போது அங்கு தவித்துக் கொண்டிருந்த உறவுகள் என்ன செய்வது ஏது செய்வது என அறியாது மே லும் ஒப்பாரி வைத்து அழுதனர். இதனை வீதியில் இரு மருங்கிலும் நின்று முஸ்லிம்கள் பார்த்துக் கொண்டு நின்றனர். கல்முனை நகர் தாண்டிகாரை தீவு முகா

நகரின் மத்தியில் வீதியால் சென்று கொண்டிருந்த பொது மக்களை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர். அனைவரையும் ஒரு இடத்தில் போய் இருக்குமாறு உத்தர விட்டனர். இவ்வாறு நூற் றுக்கு மேற்பட்டவர்களைத் தடுத்து நிறுத்தி நகரின் மத்தியில் அமர வைத்தனர். அதில்

மைநோக்கிச் சென்று கொண்டிருந்தனர். உறவுகள் அனைவரும் அழுது புலம்பி நின்ற வேளை நேரமோ மாலையாகிவிட்டது. அனைவரும் அவ்விடத்தில் நின்றவாறு தத் தமது வீடுகளுக்குத் திரும் பினர். வீடு திரும்பியவர்கள் அன்று இரவு முழுவதும் ஊன், உறக்கமின்றி உறவு களின் நினைவில் இருந்தனர். வீடுகள் அனைத்தும் மரண வீடுகள் போல் காட்சியளி த்தது. தமது

தமிழர்களும் முஸ்லிம்களும் அடங் கியிருந்தனர். அப்போது ஆண் களை வேறாகவும் பெண் களை வேறாகவும் அமரும் படி உத்தர விட்டனர்.

அப்போது திடீரென அவ்விடம் வந்த இராணு வத்தினர் கூட்டத்தில் காணப்பட்ட



## சுவடு -21

பிள்ளைகளுக்கு என்ன நடக்குமோ, இப்போது எங்கு கொண்டு செல்கின்றார்களோ என ஏங்கிநின் றனர்.

மறுநாள் காலை விடிந் ததும் விடியாததுமாய் தமது பிள்ளைகளின் நிலையினை அறிவதற்காக காரை தீவு இராணுவ முகாமுக்குச் செல் வதற்கு ஆயத்தமானா ர்கள். விடிந்ததும் கூட்டம் கூட்டமாகவும், தனித் தனியாகவும் காரைதீவு முகாம் நோக்கிச் சென்றார்கள்.

எப்போதும் சனக் கூட்டம் நிரம்பி வழிகின்ற கல்முனை நகரம் அன்று வழமைக்கு மாறாக வெறிச் சோடிக் காணப்பட்டது. கடைகள் யாவும் பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது. நகர வீதியின் இரு மருங்கிலும் இராணுவத்தினர் தங்கள் துப்பாக்கியினை நீட்டிய வாறு நின்றனர்.

இதனால் அப் பகுதியில் சென்று கொண்டிருந்த மக்களுக்கு பெரும் ஆச்சரியமும் பீதியும் ஏற்பட்டது. வீதியில் சன நடமாட்டமே இல்

முஸ்லிம்கள் அனைவரையும் செல்லுமாறு பணித்தனர். அப் போது அங்கு காணப் பட்டவர் களில் முஸ் லிம்கள் அனைவரும் சென்று விட்டனர். மிகுதியாக ஆண்களும் பெண்களு மாக தமிழர்கள் மட்டும் எஞ்சியிருந்தனர்.

அதில் மொத்தம் 40 தமிழ் உறவுகள் காணப்பட்டன. அதில் கூடுதலாகப் பெண்களே இருந்தனர். முதல் நாள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டவர்களின் உறவுகளும் வேறு வேலைக ளுக்காக கல்முனைநகருக்கு வந்த பாண்டிருப்பு, நற்பிட்டி முனை , நீலாவணை, வீரமுனை போன்ற கிராமங்களிலிருந்து வந்தவர்களும் அடங்கியிருந்தனர். அப்போது “ ஐயா எங்கள் பிள்ளைகளை நேற்றுப் பிடித்துப் போனார்கள். அவர்களைப் பார்ப் பதற்கு காரைதீவு ஆமிக் காம் புக்கு செல் வதற்காகத் தான்

யப்பட்ட பெண்களையும் , ஆண்களையும் டயர் போட்டு பெற்றோல் தெளித்து கொழுத்தினர். அத்தனை உயிர்களும் அங்கு அக்கினியில் சங்கமமாயின.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல்

**தருவது- நிர்மலன்**

தமது உறவு களை இழந்து தவித்து அவர் களின் முகம் காணச் சென்றவர்க ளையும் கொன்று குவித்து விட் டார்கள். பட்டப் பகலில் நடு வீதியிலே அத்தனை தமிழர் களையும் எவ்வளவு துணிச்சலோடு இன வெறிபிடித்த பேரினவாத கூலிப் படைகள் கொன்று குவித்து இவர்களில் கல்முனைப் பகுதியைச் சேர்ந்த பிரபல வைத்தியர் ஒருவரும் அடங்குவர்.

*(சுவடுகள் தொடரும்)*

*ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) வாரம் தோறும் வழங்கும் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபெற விரும்புவோர் போட்டிப்படிவத்தைப் பூர்த்தி செய்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடை அனுப்பும் ஒரு அதிஸ்டசாலிக்கு 250 ரூபா பணப்பரிசும், பாராட்டுப் பெறும் 10 அதிஸ்டசாலிகளின் பெயர் விபரமும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.*

*விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி:~05.10.2004*

## குறுக்கெழுத்துப் போட்டி 21

**குறுக்கெழுத்துப் போட்டி இல -21**
**ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)**
**பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | |
| | ■ | 4 | | | ■ |
| 5 | 6 | | | ■ | 7 |
| 8 | | | ■ | 9 | |
| 10 | | | 11 | ■ | |
| ■ | | ■ | 12 | | |
| 13 | ■ | 14 | | ■ | |
| | ■ | 15 | | | |

### இடமிருந்து வலம்

01. ஆயிரம் வருடங்களைக் குறிக்கும் காலப்பகுதி.
04. கோள் மூட்டும் பெண்களை இவ்வாறும் அழைப்பர்
05. மேனி.
08. இடம்,பிரதேசம் என்று பொருள்படும் (குழம்பியுள்ளது)
09. ஆறு.
10. திறை. (திரும்பியுள்ளது)
12. முற்காலத்தில் நீண்ட தூரங்களை அளக்கப்படும் அலகு. (திரும்பியுள்ளது)
14. எதிர்ப்பு,குரோகம். (திரும்பியுள்ளது)
15. அலங்காரமான அங்க அசைவுகள்.

### மேலிருந்து கீழ்

01. மனதில் ஏற்படும் இனம்புரியாத குழப்பநிலை.
02. பண்டிகை நாட்களில் பட்டாசு வாணம் என்பவற்றுடன் வானில் ஏவி விடப்படும் இன்னொரு ஒளிர் பொருள். (குழ்ப்பியுள்ளது)
03. உறுதி.
06. காலம், குறிப்பிட்ட கால எல்லை. (குழம்பியுள்ளது)
07. ஈழத்தில் தொன்மையான முருகன் திருத்தலம் ஒன்று. மெல்ல மெல்ல பௌத்த பூமியாக மாறி வருகிறது.
11. குளிருக்கு இதமான துணி.
13. குற்றம்.
14. பெண்களைக் கவர்ந்திழுப்பதில் இது முதன்மையானது.(தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 19 ற்கான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. கச்சிதம் | 01. கச்சைதீவு |
| 05. மஞ்சம் | 02. இஞ்சி |
| 07. இம்சை | 04. மத்திமம் |
| 08. ரதி | 06. சத்திரம் |
| 09. தீப(ம்) | 10. அசல் |
| 10. அத்தி | 11. துயில் |
| 11. சமத்து | 12. உரல் |
| 12. உயில் | 14. ஊரி |
| 13. காரல் | |
| 15. காரிகை | |

### பரிசு பெறும் அதிஸ்டசாலி .

**அஜா கரிஷ்மா**
**இல-111, மதரஸா வீதி,**
**கல்முனை-10**

### பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. வேலு. சாந்தி, கல்லடி வேலூர், மட்டக்களப்பு
02. செ. நேசமலர், ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு
03. மோ.ஏரகன், கல்முனை~3
04. திருமதி.ர. பங்கையதேவி, மட்.அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
05. எம். ஜெயந்தா, வின்சன் பெண்கள் விடுதி, மட்டக்களப்பு
06. வி. மேனகானன், மட்டக்களப்பு
07. அ. றொசான் லக்மால், வாழைச்சேனை
08. எஸ். கே. கரன், ஏறாவூர்~5
09. ஜெ. சுஜானா, வாவி வீதி, மட்டக்களப்பு
10. பி. முரசொலிமாறன், கறுவாக்கேணி, வாழைச்சேனை

"கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே" இது ஒரு அழகான கருத்தாளமுள்ள பழமொழி மட்டுமல்ல ஒரு சம்பவத்திற்கான எதிர்வு கூறல் என்றே நாம் கருத வேண்டும். விதியில்லாமல் மதியில்லையென்பது ஒரு வெளிப்படையான சித்தாந்தமாக அல்லது வேதாந்தமாக இருக்கலாம். விதி எக்கேடாவது கெட்டுப்போ கட்டும். ஆனால் மதியென்றும் ஒரு மனித

வளர்ச்சியுற்றிருக்கும் வன்முறைகளுக்கெல்லாம் பெருத்த ஒரு அடியாக இருக்கும் எனவும் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

"ஆனமான கோயிலில் அடிதண்டம் பிடி தண்டம் வெறுவாக்கிலம் கேட்ட கோயில் விடி விளக்கு கேட்டதாம்" என்கின்ற மாதிரித்தான் நினைக்க வேண்டியிருக்கிறது. 13 மாதகால தீவிரவாத வளர்ச்சியினால் பக்தாத் நகரமே

கொண்டு எதைச் சாதிக்கப் போகின்றார் அலாவி? தேர்தலைக் கொண்டு எந்த ரீதியில் தீவிரவாதத்தை ஒடுக்கப் போகின்றார் அலாவி என்பது ஒருவருக்கும் புரியாத புதிராகவே இருக்கின்றது. மேலும் சென்ற வாரம் நியூயோக்கில் ஐ.நாடுகள் சபையின் பொது வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், ஈராக்கின் இடைக்கால அரசு தை மாதத்



# முன்னாடி அமெரிக்கத் தேர்தல்

னுக்குக் கெட்டுவிடவே கூடாது. அந்த மனிதன் தனியாக இருந்தாலும் அல்லது ஒரு அரசியல் தலைவராக இருந்தாலும் சரி தாக்கம் ஓரளவு பெரிதாகவே இருக்கும். அகில உலகமும் அங்கலாய்ப்புடன் உற்று நோக்கிய படி உள்ள

படுபாதாளத்துக்குப் போய்க் கொண்டிருக்க அனுதினமும் ஆட்கடத்தல். வெடிகுண்டுப்புரளி, வான்வழித் தாக்குதல், எண்ணெய் உற்பத்தி மசகு எண்ணெய் ஏற்றுமதி இடைநிறுத்தம், மசகு


தேர்தலுக்கான தயாரிப்பில் மிக உறுதியாக இருப்பதாகக் கூறியிருப்பதுடன், இது தை மாதம் 31 ம் திகதியாக இருக்குமெனவும் ஹேஸ்யம் கூறியிருக்கின்றார். "மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக" தேர்தல் திட்டம் இருக்கப்போகிறது. என்பதை அலாவி அவர்கள் அறியாவிட்டாலும், ஈராக்கின் அப்பாவிப் பொதுமக்கள் நிட்சயம் தெரிந்திருப்பார்கள் என்பது வெளிப்படை. இது ஒரு பகிடியாகவும் இருக்கும் என்று ஆய்வாளர்கள் நினைத்து விடாத படி இல்யாட் அலாவியவர்கள் லண்டன் மாநகரில் வைத்து பிரதமர் ரொனி பிளேயர் அவர்களுடனான சந்திப்பையடுத்து செய்தியாளர்களிடம் பேசுகையில் அடுத்து வரும் ஜனவரி ஈராக்கின் பயங்கரவாதத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் பலத்த ஒரு அடியாக இருக்கும் என்றும், ஈராக்கில் ஜனநாயகம் ஜெயிக்கும் என்றும் ஜனநாயகம் மலர்ச்சி அடையும் என்பதில் தாங்கள் திடமாகவும் பிடிவாதமாகவும்



இன முஸ்லிம்களாகும். இந்த அமைப்பின் மிகப் பெரிய ஆன்மீகத் தலைவராக விளங்குபவர் அலி.அல்.சிஸ்ராணி என்பவர். இவர் தேர்தலை நடாத்தும்படி கொடுத்த அழுத்தத்தினாலும் அலாவியவர்கள் உந்தப் பட்டிருக்கலாம். சைற்றீ இன முஸ்லிம்களின் அரசியல் அதிகாரம் எண்ணிக்கையினாலும் அதிகரிக்க ஒரு வேளை சந்தர்ப்பமாகலாம். இவைகளின் அடிப்படையிலே அலாவியவர்கள் ஒரு தேர்தலை நடாத்தத் தீர்மானித்திருக்கலாம். ஆனால் ஈராக்கைப் பொறுத்தவரையில் சைற்றீ முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக விளங்கினாலும் பக்தாத்தின் மேற்கு-வடக்கு நகரங்கள் குறிப்பாக பளுஜா போன்றவைகள் இன்னும் அமெரிக்கக் கூட்டுப்படையினரினதோ அல்லது ஈராக் அரசாங்கத்தினதோ

ளது என்பதை இன்று கூறுமுடியாவிட்டாலும் எதிர்காலத்தில் அவர்களது நடவடிக்கை மூலமாக நாம் சில பல விடயங்களை ஓரளவுக்கு அறிந்து கொள்ள நிச்சயம் சர்ந்தர்ப்பம் உண்டு என்பது திண்ணம்.

இதற்கிடையே அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் அதிபர் புஸ் அவர்கள் பேசுகையில் ஈராக் அரசியல் பற்றியும் சிலாகித்துப் பேசியுள்ளார். ஈராக்கில் நிறுவப் பட்டிருக்கும் இடைக்கால அரசுக்கு ஏற்பட்டிருக்கும் அரசியல் தொந்தரவுகளுக்கு முகம் கொடுக்கக் கூடியதாக உலக நாடுகள் அலாவியவர்களின் அரசுக்கு இயன்றவரை உதவி செய்ய வேண்டும் எனவும் இது விடயத்தில் அமெரிக்கா முற்று முழுதாக தன்னை ஈடுபடுத்தியுள்ளதை



மாபெரும் மயான பூமியின் அதிபதியும், மாண்டோர் தொகையதிகரிப்பின் ஊடே மாபெரும் தேர்தல் ஒன்றை நடாத்தி முடிக்க கங்கணம் கட்டியிருக்கும் நிகழ்காலக் கதாநாயகன் இல்யாட் அலாவி அவர்களின் போக்கோடு மேற்கோள் பழ மொழியை ஒப்பிடுகையில் "கேடு நடப்பது முன்னே மதிகெட்டு வருவது பின்னே" என்று ஒரு மாற்றத்துடன் பழ மொழியைச் சொல்ல வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது. 20-09-2004 திங்கள் வெளியாகியிருக்கின்ற வெப்தளச் செய்தி ஒன்றில் ஒரு வாரத்தில் மாத்திரம் ஈராக் நகரில் 300 பேர் வரை அகாலமரணமடைந்துள்ளமை உலகளாவிய ரீதியில் ஒரு அச்சத்தை ஏற்படுத்தி

எண்ணெய் விநியோகக் குழாய்கள் வெடிவைத்துத் தகர்ப்பு 75 வீதமான எண்ணெய் உற்பத்தி வீழ்ச்சி இப்படியான இன்னோரன்ன இயல்பு நிலைக் கெதிராக சகல சித்து விளையாடல்களும் பக்தாத்தைப் படாதபாடு படுத்திக் கொண்டிருக்க இந்தப் பழாய்ப் போன மனிதனுக்கு தை மாதத் தேர்தலும் ஒரு கேடா? "கண் கெட்ட பின் எதற்கப்பா சூரிய நமஸ்காரம்" செய்ய நினைக்கிறார். அதிபர் அலாவி அவர்கள் தீவிரவாதம் தலைவிரித்தாடுகின்ற ஒரு நாட்டிலே சுமுகமான சுதந்திரமான ஒரு தேர்தலை யாரால் நடாத்த முடியும்.? எவரால் நடத்த முடியும்? தேர்தலுக்கு முந்திய வன்செயலுக்கான அடிப்படைக் காரணிகளைக் கண்டறியாமல் தூரவைத்து

# பின்னாடி அலாவியின் தேர்தல்


இருப்பதாக வேறு கூறியிருக்கின்றார். இவரது திட்டத்தின் பின்னணியில் என்ன இருக்கின்றதென்று எவருக்குமே இப்போதைக்குத் தெரியாது. ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளரைத்தவிர என்றே கூறவேண்டும். அலாவி அவர்களுடைய அறிக்கையை அடுத்து பொதுச் செயலாளர் கொபிஅனான். அவர்கள் விடுத்

**அகஸ்த்தியர்**

திருக்கும் செய்தி ஒன்று வெப்தளத்திலிருந்து கிடைத்திருக்கிறது. இதில் கடந்த வாரம் மட்டும் 300 பேர் பல்வேறுபட்ட வன்செயலினால் அகால மரணத்தை தழுவியுள்ள நிலையில் மேற்படி அலாவி அவர்களின் தேர்தல் பற்றிய அறிக்கையின் படி ஒரு நம்பகத் தன்மையற்ற ஒன்றாகவே தேர்தல் இருக்கும் தற்போதைய ஈராக் பாதுகாப்பு நிலைப்பாட்டில் இது சாத்தியப்படாது என்று எச்சரிக்கை கலந்த தொனியில் கூறியுள்ளதாக அச்செய்தி தெரிவிக்கின்றது. தேர்தல் ஒன்று நடந்தால் அது ஜனநாக மரபுகளுக்கப்பாற்பட்ட ஒன்றாகவே அமைந்து விடும். என்பது ஐ.நா பொதுச்செயலாளரின் கூற்றிலிருந்தே மிக எளிதாகப் புரிந்து கொள்ளலாம். இன்னுமொருபுறத்தில் சிந்திக்கப் போனால் பெரும் தொகை கொண்ட அமெரிக்கக் கூட்டுப்படையினரினாலும் 50000 க்கும் மேற்பட்ட ஈராக் பாதுகாப்புப் படையினராலும் ஒருமித்துக் கொடுக்கமுடியாத பலத்த அடியை ஒரு தேர்தலைக் கொண்டு சாதிக்க அலாவி அவர்கள் முயற்சிப்பது அரசியல் பம்மாத்து என்பதை அவதானிகள் புரிந்து கொள்வார்கள். இதே நேரம் அதிபர் அலாவி அவர்கள் ஒரு சைற்றீமுஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர். இந்த சமூகத்தில் தான் அதிகம் மதவாதிகள் இருக்கின்றார்கள். ஈராக்கின் பெரும் பான்மைச் சமூகத்தவர்களாக விருப்பதும் இந்த சைற்றீ

கட்டுப்பாட்டில் இதுவரைக்கும் இல்லை. சுனி முஸ்லிம்களின் இருதய பூமிகளெல்லாம் அதிகமாக தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளவைகளாகவே கணிக்கப்பட வேண்டும். இந்தப் பிராந்தியங்களில் தேர்தல் ஒன்றை நடாத்த முடியாதா? என்ற கேள்வி ஒன்று எழலாம். ஆனால் சுனி முஸ்லிம்களின் பாரிய பங்களிப்பு, பங்கேற்பு இல்லாமல் சட்டரீதியான ஒரு தேர்தலை நடாத்தி முடிப்பது வெறும் பகல்கனவாகவே இருக்கும். அத்துடன் குர்திஸ் முஸ்லிம்களும் கூடிய பகுதியினராக ஈராக்கில் இருக்கின்றனர். அவர்களது தற்போதைய அரசியல் ஸ்திர

தான் தற்போது நினைவூட்டத் தேவையில்லை என்றும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். இதில் உதவி என்று அதிபர் புஸ் அவர்கள் எதை அந்தரங்கமாய்க் கருதுகிறார். என்பதும், இந்த உதவியின் மூலம் ஈராக்கில் எதைச் சாதித்துக் கொள்ள விரும்புகின்றார் என்பதும் ஆரம்பத்தில் அதிபர் அலாவியவர்கள் எதிர்வரும் தை மாதம் தேர்தல் நடந்தே தீரும். என சூழுரைத்திருப்பதற்கும் தேர்தலின் மூலம் எதைச் சம்பாதித்துக் கொள்ள முயற்சிக்கிறார் என்னும் இரண் டுக்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்புகள் இருப்பதா



ப்பாடு பற்றிய சரியான தகவல்கள் இல்லாது இருப்பதன்காரணமாய் இவர்களது அரசியல் பங்களிப்புப் பற்றி இப்போதைக்கு எதிர்வு கூறுவது மிகவும் சிரமமாகவே இருக்கிறது. ஈராக் இடைக்கால அதிபரின் தேர்தல் பற்றிய வெளிப்படையான அறிவிப்பானது ஈராக் எங்கும் பரந்து காணப்படும். பெரும் எண்ணிக்கையான தீவிரவாதிகள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்

கவே தென்படுகிறது. அதிபர் புஸ் அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையில ஈராக் பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது பணயக்கைதியாக இருந்த ஒரு அமெரிக்கப் பிரஜை தீவிரவாதிகளால் சிரச்சேதம் செய்யப்பட்ட பரிதாபமான செய்தியும் அதிபர் புஸ் அவர்களின் ஐ.நா. சபை பேச்சும் ஒன்றாகவே உலகுக்குக் கிடைத்திருப்பது ஆச்சரியம் மட்டுமல்ல அதிசயமும்தான்.

இருப்பதாகவே எண்ணத்தோன்றுகின்றது. இந்தச் செய்தியை இடைக்காலப் பிரதமர் இலியாட் அலாவி அவர்களே தனது திருவாயால் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பது


விட்டு நடைபெறப்போகின்ற தேர்தல் வன்செயலுக்கு ஒரு மரண அடியாக இருக்கப்போகின்றது. என அலாவியவர்கள் அறைகூவல் விட்டிருப்பது அகில உலகத்தையும் ஏமாற்றும்

நடைபெறப்போகின்ற தேர்தல் வன்செயலுக்கு ஒரு
மரண அடியாக இருக்கப்போகின்றது.
எனஅலாவியவர்கள் அறைகூவல் விட்டிருப்பது
அகில உலகத்தையும் ஏமாற்றும் ஒரு
விஷப்பரீட்சையாகவே கருத இடமுண்டு.

ஆச்சரியத்துக்குரியதொன்று என யாரும் தப்பாக எடைபோட முயற்சிக்க வேண்டாம். ஏனெனில் இந்த அறிக்கையை அடுத்து அவர் கொடுத்திருக்கும் பேட்டி ஒன்றில் "எதிர்வரும் 2005 ஜனவரியில் நடைபெறவிருக்கும் ஈராக் தேர்தல்

ஒரு விஷப் பரீட்சையாகவே கருத இடமுண்டு. மக்கள் வெளியரங்மாக வீதியில் இறங்கி ஒரு சுதந்திரமான தேர்தலுக்கு முகங் கொடுக்க முன்வருவார்களா என்பது வேறு விடயம். ஆனால் இந்தத் தேர்தலை நடாத்தி இதன் பெறுபேறுகளைக்

# தங்கத் தலைவர் காலத்தில்



அன்று
வட்டுக்கோட்டையிலும்
வடலிமுனையிலும்
சுதுமலையிலும்
சுன்னாகத்திலும்
முழங்கிய தமிழ்
இன்று சுவிசின் பனிமலையிலும்
ஜெனீவா ஒயிலிலும்
பாரிசின் நடுவிலும்
அவுசியின் முகழ்விலும்
கனடா அமெரிக்கா
ஆசியா ஆபிரிக்கா - என
அத்தனை கண்டத்திலும்
அனலாய்த் தெறிக்கிறது
ஈழத்தை அழித்து
ஈனத் தமிழினத்தை
இல்லாதொழித்து
பௌத்த சிங்கள
ஒட்டுமொத்த அரசமைக்க
திட்டமிட்ட பண்டாவுக்கு
அட்டமத்தில் சனி கண்டது
செல்வாவையும் பொன்னரையும்
செல்லாக்காசாய் நினைத்து
சாக்கடை அரசியல் செய்து
தமிழினத்தை நாசம் செய்த
சிங்கள மோச இனம்
தேசத்தில் மீதமாய்க் கண்டது
சிதறிய இராணுவ உடல்களைத்தான்
83ல் ஆயிரமாயிரம்
உயிரைப் பறிகொடுத்த தமிழினம்
பயந்து பரிதவித்து அடிமைப்பட்டு
அமைந்து நடக்குமெனக்
கனாக்கண்டது சிங்களப் பேரின
அரசு. அல்கைதாவின் அராஜகத்தில்
இரண்டாயிரத்து ஐநூறு பேர்
கட்டட இடிபாட்டில் இறந்ததற்கு
இரு நாடுகளுடன் போர்புரிந்த
அமெரிக்கா, ஐயாயிரம்
அப்பாவித் தமிழர்கள்
அடித்தும் உதைத்தும் எரித்தும்
பிய்த்து எறியப்பட்டும்
பிஞ்சுப் பாலகர்கள்
தார்ப்பீப்பாவில் வீசப்பட்டும்
கர்ப்பிணிகள் கற்பழிக்கப்பட்டும்
தாயும் தந்தையும் சீவி
எறியப்பட்டும்
வீதியிலும் வீட்டினிலும்
ஓட்டினிலும்
பட்டப் பகலினிலே
பச்சையாய்ப் படுகொலை
செய்யப்பட்டபோது
பயங்கரவாதம் பண்ணிய
ஸ்ரீலங்காவின் அராஜகத்தை
எப்படி ஜனநாயகப்படுத்தியது!?
கொக்கட்டிச்சோலையும்
நவாலியும்
வட்டக்கச்சியும் செம்மணியும்
சத்துருக்கொண்டானும்
மட்டுவில்லும்
நாச்சிக்குடாவும் செட்டிகுளமும்
மைலந்தனையும் சங்கத்தனையும்
அரியாலையும் குருநகரும்
கிங்குருகொடவும் பிந்துனுவேவவும்
இன்னும் நூற்றுக்கணக்கான
படுகொலைக் களங்களும்
முட்டாள் சிங்களத்
தலைமைகளுக்கு
புத்தமத தர்மத்தைச் சித்தம்செய
மறுத்தது வேதனை
இந்தப் படுகொலைக் களங்களைப்
பாடமாக்க மறந்ததும்
மனிதமற்ற ரோதனை
56ல் நாடுதளுவிய படுகொலையும்
58ல் பொலநறுவைக்
காரங்களும் தமிழன்
தலைவிதியை மாற்றிவிடுமெனும்
சிங்கள வெறியரின்
கோரச் சிந்தனை
பொடியாய்ப்போனது
பொலநறுவைக்
கரும்புக்காட்டிற்குள்ளே
பாதுகாப்புத்தேடித் தலைமறைவான
ஏழைத் தமிழர்களை
கரும்போடு கரும்பாக
எரித்துச் சாம்பல்செய்த
கொடிய அரக்கர்கள்,
மறுபக்கம் தப்பியோடிவந்த
குற்றுயிரும் குலையுதிருமான
தமிழர்களை
வாளால் வெட்டிச்சாய்த்த வரலாறு
பாழாக்கிவிடவில்லை எம்
உணர்வுகளை
நாம் அன்றும் இன்றும்
நெஞ்சுகாட்டி நிற்கும் தமிழர்கள்
தான்!
இரவிலே ஊரையழிப்பதும்
குடித்துவிட்டு குமுதினியில்
வெட்டுவதும்
மேகஉயர் தொலைவிலிருந்து
குண்டுவீசி அழிப்பதும்
புக்காரா ராக்கெட்டால் ஒழிந்திருந்து
சிதைப்பதும்
மொசாட் படைகளால் நாசகாரம்
குவிப்பதும்
தலையாட்டித் துரோகிகளை
விலைகொடுத்து வாங்குவதும்
வெட்கம்கெட்ட சிங்களவன் பழக்கம்
நாம் தமிழர்கள்
கெஞ்சக்கெஞ்சத் தரமறுத்த
சுதந்திரத்தை
பொங்குதமிழ் கற்றுத்தருகிறது,
புரிந்துகொள்!
உரிமையைத்தா என்று
உணர்வோடுதான் கேட்டோம்
நீ தரவில்லை
கட்டுக்கதைகள் புனைந்து
சிங்களக் காடையரை ஏவிய
பழங்கதையை
மீண்டும் புதுக்கதையாய் ஜனதா
விமுக்தி தொடர்கிறது
கட்டுக்கட்டாய் விடுகிறது
புழுகுகளை - ஜே.வி.பி.
நம்பிக்கெட்ட சிங்கள இனம்
இப்போதும் நம்பியதால்
நாட்டுக்கே நாசம்
விளைந்திருக்கிறது
சரியான வழிகாட்டி கிடைக்காத
இனமாகி,
சிங்களம் மங்களம் பாடுகிறது
சீரான தலைமையின் நேரான
வழிகாட்டலில்
எழுந்து நிற்கிறது தங்கத்
தமிழினம்
உலகின் மூலைமுடுக்கெலாம்
பொங்குகிறது தமிழின விடுதலை
தொலைந்துபோகட்டும் என
அழிக்க முயன்ற தமிழினம்
எழுச்சிகொண்டிருக்கிறது
உலகெங்கும்!
தங்கத் தலைவன்
தளராமல் தாங்கியதில்
நிமிர்ந்து நிற்கிறது தமிழும்
தமிழ்மண்ணும்
வீழ்வது நாமாயினும்
எழுவது தமிழாகட்டும் எனும்
வாக்கு
எம் அனைவரின் நாக்கிலும்
எழுந்திடட்டும்
எழுந்திடு தமிழா
எழுந்திடு தமிழா
எழுந்திடு தமிழா
விழவிழ எழுந்திடும் தமிழினமாய்
வெற்றியில் தினம்தினம்
குளித்திடும் தமிழினமாய்
வெற்றித் திருமகன்
மேதகு பிரபாகரனின் பிரவாகத்தில்
தமிழீழம் கண்டிடும் தமிழினமாய்
திரண்டெழுந்து வெற்றிக்குப்
பங்களிப்போம்
தங்கத் தலைவன் காலத்தில்
தரணியில் வாழ்வதில்
பெருமைகொள்வோம்
தரணியெங்கும் தமிழினம்
புகழ்பெற ஒன்றிணைவோம்
வாருங்கள் தமிழர்களே - நாம்
தமிழீழம் காண்போம்
தலைவரின் கனவுகள் மலர்ந்திட -
எம்
தோளினைக் கொடுப்போம்.

**குயின்ரஸ் துரைசிங்கம்**
**கனடா**

# பொங்குது தமிழ் நானிலத்தில்!









செந்தமிழ் சுவை கலந்து திக்கெட்டும் புகழ் பரப்பும் ஈழநாதமே.......நீ... தாங்கி வரும் அத்தனை அம்சங்களும் இனிமையிலும் இனிமை. முத்துக்கள் அத்தனையும் பசுமையாயுள்ளது. எங்கள் இதயத்தில் இன்னும்...வாரம் தோறும் வருகின்றாய். ஆனால் தினந்தோறும் வருவது போல் ஒரு உற்சா கம். தினம் தோறும் உன்னைப் படிப்பதனால்.... சிறியோர் முதல் பெரியோர் வரை சகலரும் விரும்பும் ஈழநாதம் நீ..ஈழம் எங்கும் உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

எஸ்.தாரணன்
கல்முனை



ஈழநாதம் ஒவ்வொரு வாரமும் தவறாமல் பார்த்து வருகிறேன். அதில் வருகின்ற அனைத்து அம்சங்களும் சூப்பராக இருக்கின்றது. மேலும் புதுமைகள் படைத்து எல்லோரும் கவரும் வண்ணம் வலம் வரவேண்டும். தொடரட்டும் உன் பணி. வளரட்டும் தமிழ்.

பிரதிக்குமார்
தாண்டியடி
கோமாரி.

என் இதய நாதத்திற்கு!

தினமும் என் வாசல் வலம் வரும் நீ உன்னில் சுமந்து வரும் ஒவ்வொரு அம்சமும் வெரி சூப்பர். அதிலும் நீ தரும் தலைவரின் சிந்தனை ஒவ்வொன்றும் பொன்னாக உள்ளது. அதிலும் மகளிர் மகுடம் வெரி சூப்பர். கவிநாதமும்தான். சிறுவர்நாதம் மிகவும் அழகு. ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு பெரியார்களைப் பற்றித் தருகிறாய்.



மேலும் மாணவச் செல்வங்களுக்கு ஒவ்வொரு வாரமும் அறிவூட்டும் வினாக்களைச் சுமந்து வந்து பரிசில்கள் அள்ளி வழங்குகின்றாய். மொத்தத்தில் எல்லாம் சூப்பர்தான். ஆனால் ஒரு சில எழுத்துப்பிழைகளை மட்டும் நீ நிவர்த்தி செய்து நீ வளர வாழ்த்துகிறேன்.

ரி.தயாநிதி
அக்கரையூர்.



என் இனிய நாதமே!

எம் ஈழத்திற்கு முதற்கண் வணக்கம். வாரம் ஏழு நாள் இறுதியில் வந்து என்னை மகிழ்விக்கும் நீ சுமந்து வரும் ஆக்கம் முழுவதும் அழகு. அறிவைத் தரும் மொழிகள். அரவணைக்கும் அன்புக் கதைகள் சுவையாக உள்ளது மேலும் உன்பணி தொடர என் வாழ்த்துக்கள்.

அ. உஷாந்தி
மட்/இருதயபுரம்




# உருக்குலையும் வல்லரசின் விளையாட்டு

## வல்லரசுக்கு ஒலிம்பிக்கில் சீனாவால் தலையிடி, ஓபன் கிண்ணத்தில் ரஷ்யாவால் நெருக்கடி, ஐ.சி.சி.யில்.......?

சர்வதேச வல்லரசாகத் திகழும் அமெரிக்கா விளையாட்டு என்ற மையத்தில் நின்று பார்க்கையில் தனது வல்லரசு என்ற முத்திரையை விளையாட்டில் இழக்கும் தறுவாயிலே உள்ளது. என்று கூறக்கூடியளவிற்கு இவ்வாண்டின் விளையாட்டுக்களில் அமெரிக்காவின் நிலை உள்ளது. குறிப்பாக எதேன்சில் இடம்பெற்ற ஒலிம்பிக், பெண்களுக்கான ஓபன் கோப்பை, அது மட்டுமல்ல அமெரிக்கா என்ற பெயரில் ஐ.சி.சியில் இறக்கியிருக்கும் பல நாட்டு வீரர்களின் நிலையும் இவ்வாறுதான் உள்ளது.

2004ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா அதிக பதக்கங்களை வென்றிருந்தாலும் ஒவ்வொரு போட்டிகளிலும் சீன வீரர்கள் அமெரிக்காவுடன் சமசக்தி மிக்க வீரர்களாகவே திகழ்ந்தனர். அப்போதுதான் வல்லரசுக்கும், வல்லரசு வீரர்களுக்கும் கதிகலங்கியது. வல்லரசுக்கே வல்லரசா? என்ற வினாவையும் அதற்கான விடையையும் சீன வீரர்கள் உண்டாக்கியிருந்தனர். இருப்பினும் அடுத்த ஒலிம்பிக்கிற்காக தமது வீரர்களை தயார்ப்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் வல்லரசு நிம்மதிப் பெருமூச்சு விட்டு நிற்கின்ற வேளையில் எதேன்சில் ஒலிம்பிக் போட்டிகள் முடிவுறுவதற்கு முன்னரே சீன அரசு 2008ம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டியைத் தனது நாட்டிலே நிகழ்த்துவதற்கு மைதான ஒழுங்குகளைச் செய்துள்ளது. இந்த நிலையில் வல்லரசுக்கு மற்று மோர் சிக்கல் கற்பனையில் தோன்றியது. அதாவது மைதானத்தை தயார் செய்வதற்கு நான்கு வருடத்திற்கு முன்னரே திட்டமிடல் செய்த சீனா வீரர்களுக்கு எத்தனை வருடம் பயிற்சியளித்திருக்கும்? என்பதுதான் அந்தக் கற்பனை வினா.

ஒரு வகையில் நோக்கினால் சீனா பாரியதொரு திட்டம் தீட்டித்தான் தனது விளையாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டு வருகின்றது போல் தெரிகின்றது. இந்நிலமையில் அமெரிக்க விளையாட்டுத் துறை பெரும் தர்மசங்கடமான நிலையை எதிர் கொண்டு நிற்கின்றது.

ஒலிம்பிக் மட்டுமல்ல பெண்களுக்கான ஓபன் போட்டியிலே அமெரிக்க வீரர்களை வெல்ல முடியாது என்ற நிலை இதுவரை நிலைத்திருந்த ஒரு பெரும் புள்ளி ஆனால் இம்முறை பெண்களுக்கான ஓபன் போட்டிக் கிண்ணமும், அமெரிக்காவின் பெண்டகன் வீழ்த்தப்பட்டதைப் போன்று ரஷ்ய வீரர்களினால் தட்டிப்பறிக்கப் பட்டது.

இந்த நிலையில் வல்லரசின் விளையாட்டு சரிந்து கொண்டு செல்லும் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவைகள் தவிர அமெரிக்க பகிரங்கத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் போட்டியில் அவுஸ்திரேலிய



வீரர் லேய்டன் ஹெவிட்டைத் தோற்கடித்து, சுவீற்சலாந்து வீரர் ரோஜர் பெடரர் சம்பியனாகியமை குறிப்பிடத்தக்க மற்றுமொரு விடயமாகும்.

இந்த நிலையில் மினி உலகக் கிண்ணமான ஐ.சி.சி கிண்ணக் கிரிக்கெட் போட்டியும் ஒப்பு நோக்கத்தக்க விடயம். வலலரசின் ஒரு பிறவிக்குணம் என்னவென்றால் யாரையாவது, எந்த நாட்டுக் காரரையாவது விலைகொடுத்து வாங்கி தனது பெயரில் வெற்றியை ,ஈட்டித்தரவைப்பதாகும். இந்தச் சம்பவந்தான் இவ்வாண்டு ஐ.சி.சி. கிரிக்கெட்டிலும் வல்லரசு மேற்கொண்டது. குறிப்பாக அமெரிக்க அணியில் பங்கேற்கும் வீரர்களில் லியோன் ரொமேரோ வீரனைத் தவிர ஏனைய வீரர்கள் அனைவரும் ஜமைக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்த வீரர்களாவர். குறிப்பாக 14 பேரைக் கொண்ட அமெரிக்க அணியில் 07 பேர் மேற்கிந்திய தீவுகள் நாட்டையும், 06 பேர் பாகிஸ்தானையும் சேர்ந்தவர்கள். அணித்தலைவர் றிச்சட் ஸ்டாப்பிள் ஜமைக்காவையும், உப தலைவர் நஸீர் ஜாவிட் பாகிஸ்தானையும் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. யாரைக் கொண்டாவது வல்லரசைத் தக்க வைக்க வேண்டும் என்பது வல்லரசின் நோக்கம்.

| வீரர்கள் | வயது | பிறந்த இடம் | வீரர்கள் | வயது | பிறந்த இடம் |
|---|---|---|---|---|---|
| ரிச்சர்ட்-ஸ்டாப்பிள் | 35 | ஜமைக்கா | லியோன்-ரொமேறோ | 30 | அமெரிக்கா |
| நஸீர்-ஜாவிட் | 25 | பாகிஸ்தான் | நஸீர்-இஸ்லாம் | 31 | பாகிஸ்தான் |
| சாள்ஸ்-ரீட் | 42 | பார்படோஸ் | ரொஹான்-அலைக்சாண்பர் | 31 | ஜமைக்கா |
| ஸமின்-அமின் | 41 | பாகிஸ்தான் | ரஷிட்-ஷியா | 30 | பாகிஸ்தான் |
| ஹோவாட்-ஜோன்சன் | 40 | ஜமைக்கா | ஸ்ரீவ்-மஷியா | 25 | சயானா |
| இஸாஸ்-அலி | 34 | பாகிஸ்தான் | கிளேட்டன்-லம்பட் | 42 | பிரிட்டஸ் சயானா |
| மார்க்-ஜோன்சன் | 41 | ஜமைக்கா | இம்ரான்-அவான் | 25 | பாகிஸ்தான் |

# கிரிக்கெட் உலகை கலக்கிக்கொண்டிருக்கும் ஐ.சி.சி.யில் எதிர்பாராத அணிகள் வெற்றி இலக்கில்

கிரிக்கெட் உலகை இன்று ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் மினி உலகக்கிண்ணப் போட்டியான ஐ.சி.சி. சம்பியன் கிரிக்கெட் போட்டித் தொடர் தற்போது பெரும் பரப்பாக உள்ளது. எதிர்பாராத அணிகள் எதிர்பாராத வெற்றியையும், எதிர்பாராத தோல்வியையும் சந்தித்துக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க மற்றுமோர் விடயமாகும்.

ஐ.சி.சி.சம்பியன் போட்டியில் வெற்றியீட்டிய அணிகளை நோக்கினால் குழு Aயில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்க அணிகளும், குழு Bயில் தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள், பங்களதேஷ் அணி களும்,குழு Cயில் இந்தியா, பாகிஸ்தான், கென்யா அணி களும் குழு Dயில் இங்கிலாந்து, சிறிலங்கா, சிம்பாப்பே அணிகளும் இடம்பெற்று ஒவ்வொரு குழுவிலுமிருந்து ஒவ்வொரு அணி அரை இறுதக்குத் தெரிவாகின்றமையையிட்டு குழு Aயிலிருந்து அவுஸ்திரேலியாவும்,குழு B யிலிருந்து மேற்கிந்தியதீவுகள் அணியும் வெற் றி பெற்று, இறுதிப் போட்டிக் கு தெரிவாகியுள்ளது.

இந்நிலமையில் நோக்கத்தக்க மற்றுமோர் விடயம் அவுஸ்ரேலிய அணி, இந்தியா அணியின்





மேற்கிந்தியத்தீவுகள் அணியைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் சாதாரணமாக இருந்தாலும் அரை இறுதி ஆட்டத்தில் மிகவும் துலலியமாக தமது இலக்கை அடைவதற்கான நோக்கத்தில்மும் முரமாக விளையாடினர்.

அரையிறுதிப் போட் டியில் 28.3 ஓவரில் பாகிஸ்தான் அணியை மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி கொண்டது. ஐ.சி.சி. கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டி தொடங்கும் முன்னர் கிரிக்கெட் கருத்துக் கணிப்பாளர்களின் கருத்துப்படி அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகள் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொள்ளும் என்ற ஊகத்தினை முன்வைத்தனர். ஆனால் இன்று அந்த நிலமை மாறி எந்தவிதமான எதிர்பார்ப்புமே இன்றி இருந்த மேற்கிந்திய தீவுகள் அணி குறிப்பிடத்தக்க வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.



யும், குழு Cயிலிருந்து பாகிஸ்தான் அணியும், குழு Dயிலிருந்து இங்கிலாந்து அணியும் வெற்றிபெற்றது. இதற்கிசைவாக குழு Aயின் அவுஸ்திரேலிய அணிக்கும் குழு Dயின் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையில் இடம் பெற்ற அரை இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணியும் குழு Bயின் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் குழு Cயின் பாகிஸ்தான் அணிக்கும் இடையில் இடம் பெற்ற போட்டியில் மேற்கிந்தியதீவுகள் படுதோல்விகள் எதிர்பார்க்கப்படாதவை.

இப்போது இறுதிப் போட்டிக்காக தெரிவாகியிருக்கும் அணிகள் மிகுந்த திறமையுடனும், விவேகத்துடனும் தமது இலக்கை அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே இவ்வருடம் ஐ.சி.சி.கிண்ணம் மேற்கிந்தியதீவுகள் அணிக்கு கிடைக்கக்கூடும் என்பது இனறைய நம்பிக்கையாக உள்ளது.

இதேவேளை தனது சொந்த மண்ணிலே மாபெரும் அணிகளை வீழ்த்திக் கொண்டு வெற்றிப்பாதையை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றது இங்கிலாந்து அணியும் சும்மா விட்டு விடாது போராடத்தான் செய்யும்.

நேர் நோக்கு

# சமாதான முயற்சிகள் நகர

கடந்தவாரம் இலங்கைக்கு வருகைதந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்கெய்ம் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கையற்றவராக தனது இம்முறை, விஜயத்தாலும் பயனில்லை என்ற நிலையில் நோர்வே திரும்பியிருக்கிறார்.

அத்துடன் மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டவரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

அதேவேளை ஜே.வி.பியினரைச் சந்திக்க தான் எடுத்த முயற்சி தோல்வியடைந்து விட்டமையையும் அவர் குறிப்பிடத்தவறவில்லை.

ஆனால் அவர் இம்முறை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ள முன்னர் சமாதான நடவடிக்கைகளில் சில திருப்பங்கள் ஏற்படும் என எதிர்வு கூறியிருந்தார்.

அவ்வேளையில் சமாதானப்பேச்சு வார்த்தைகள் தொடர ஜே.வி.பி முட்டுக்கட்டையாக இருந்தால் அதனையும் மீறி பேச்சுக்களை நடத்துவது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் ஆட்சியைத் தொடர ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி மாளிகைச் செய்திகள் வெளிவந்திருந்தன.

அதுமட்டுமல்லாது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சந்தித்துள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதே ஒரே வழியாக இருந்தமையும் நோர்வே தூதுவரின் நம்பிக்கை பலிக்குமோ? என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் அவ்வாறெதுவும் நடந்துவிடவில்லை. தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு சில நாட்களுக்குள் மாற்றம் எதுவும் ஏற்பட்டுவிடும் என நம்பிக்கை கொள்பவர்கள் அல்ல. ஏனெனில் அவர்கள் இப்பிரச்சினையுடன் கடந்த 56 வருடங்களாக வாழ்ந்து பல அனுபவங்களைப் பெற்றவர்கள் என்பதுடன் சிங்கள ஆட்சியாளர்கள் எப்படியானவர்கள் என்பதை நன்கு புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அதனையும் மீறி குறிப்பிட்ட சில நாட்களில் அதிசயமாக மாற்றங்கள் ஏற்பட சந்தர்ப்பங்கள் இல்லை என முற்றுமுழுதாகக் கூறிவிடவும் முடியாதுதான்.

ஆனால் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் திருப்பம் ஏற்படும் எனக் கூறிய நாளிலிருந்து அவர் வருகை தரும்வரை நடந்தவேறு சம்பவங்களை அவதானித்தால் இதில் ஏமாற்றம் அடைய எதுவும் இல்லை.

ஏனெனில் இக்காலப் பகுதியில் சில நாடுகள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு நிதி உதவி வழங்கவும் சில படை உதவி வழங்கவும் உறுதியளித்தன. இதன்மூலம் அவை சமாதான முயற்சிகளுக்கு உதவுவதாகவும் கூறிக்கொண்டன. ஆனால் அவர்கள் தெரிந்தோ அல்லது தெரியாமலோ சமாதான முயற்சிகளில் ஏற்படலாம் என எதிர்பார்த்த திருப்பங்களை இல்லாதொழித்துவிட்டன என்பதே உண்மையாகும்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் தாம் பலமானநிலையில் இருப்பதாக கருதினால் பேச்சுக்களுக்கு வரமாட்டார்கள் என்பதைப் பலமுறை நிரூபித்திருக்கிறார்கள். 1994ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஐக்கிய தேசியக்கட்சி 12வருட காலம் யுத்தத்தை நடத்தி களைத்துப்போயிருந்த நிலையில் சந்திரிகா குமாரதுங்க சமாதானம் பற்றிக்கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்து சிலகாலம் பேச்சுக்களை நடத்தினார். பின்னர் நிதிரீதியான பலத்தைப் பெற்றதும் படையைத் தயார்படுத்தி யுத்தத்தை நடத்தினார்.

பாதுகாப்பிற்கு ஐ.தே.க ஒதுக்கிய நிதி போல இரண்டரை மடங்களவு அதிக நிதியை ஒதுக்கி விரைவிலே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரமுடியும் என நம்பினார். ஆனால் ஏழு வருடகாலத்தில் அதைவிடப் பெருமளவு நிதியை ஒதுக்கி பொருளாதார ரீதியில் பெரும் சீரழிவுக்கு சிறிலங்காவைக் கொண்டு சென்றார். இந்நிலையில் ஐ.தே.க. சமாதானம் என்ற கோஷத்துடன் ஆட்சிக்கு வந்தது.

அந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு இப்போது ஆட்சிப் பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டிருக்கின்றபோதிலும் பொருளாதார ரீதியாக பெரும் சகதியில் ஆட்சி மாட்டிக் கொண்டுள்ளமை. வெளிப்படையான விடயமாகும் இதிலிருந்து மீளவே சமாதானம் குறித்து அவர் பேசிவருகிறார் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என ஏற்றுக்கொள்ளும் சர்வதேசத்தால் பேச்சு வார்த்தை மேசைக்கு இப்போது கொண்டுவரப்பட வேண்டியவர்கள் சிறிலங்கா ஆட்சியாளர்களே. சமாதான நடவடிக்கைகள் நகரவேண்டுமானால் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியவர்களாக உள்ள சிறிலங்கா ஆட்சியாளர்களை பேச்சு வார்த்தை மேசைக்கு அழைத்துவர வேண்டும். இதற்கு சமாதான முயற்சிகளில் உண்மையிலேயே சிறிலங்கா ஆட்சியாளர்கள் விருப்பம் உள்ளவர்களாயின் சர்வதேசத்தின் நடவடிக்கைகள் எதுவும் தேவைப்படாது. ஆனால் அவர்கள் அவ்வாறில்லாதிருக்கின்ற நிலையில் எதனைச் செய்வது சரியென முடிவெடுக்க வேண்டிய தேவை உள்ளது.

*சமாதான முயற்சியில் ஈடுபட்டுவரும் நோர்வே தரப்பை முற்றுமுழுதாக நிராகரித்து வரும் ஒரு கட்சியை நம்பி அதன் பிடியிலே சிக்கி ஆட்சி நடத்தும் இன்றைய அரசாங்கம் ஒப்புக்குத்தானும் பேச்சுவார்த்தைக்கு தானா கவே முன்வரும் என எதிர்பார்ப்பது இயலாத காரியம். அத்துடன் அந்த ஆட்சியைப்பலப் படுத்தி சமாதான முயற்சிகளில் ஈடுபடச் செய்யலாம் என நினைப்பது அதைவிட இயலாத விடயம்.*

**வேலவன்**

## தமிழீழ விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தேசவிரோதியான ரெஜியின் தே.சி. அ.அட்டடை, கடவுச்சீட்டு விபரம்



## வேறு வழியில்லை..........

வழங்குங்கள் என நிதியமைச்சரைக் கோரியுள்ளன.

அப்படியாயின் டீசலுக்கு மானியம் விலக்கப்பட்டால், அதன் பின்னான விலையேற்றத்தின் பின் தொழிற்சங்கங்களின் கோரிக்கை எப்படி அமையும்? 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவைக் கோரப் போகின்றனவா அவை?

இதன் மறுபக்கமாக அரச தரப்பிலிருந்து- குறிப்பாக நிதியமைச்சிலிருந்து வந்திருக்கும் தகவலோ வயிற்றில் புளியைக் கரைப்பதாக அமைகிறது. நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக வரவு-செலவுத்திட்டத்தைப் பூரணப்படுத்த முடியாத நிலையில் நிதியமைச்சு உள்ளதாம்.

இதனால் நாடாளுமன்றில் வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு மேலும் 10 நாட்கள் தாமதமாகலாம் என்கின்றது தகவல். அதுமட்டுமல்ல, மக்களுக்கான நிவார ணங்களையோ சம்பள அதிகரிப்புக் களையோ வழங்கமுடியாத சூழல் நிலவுகிறதாம். எப்படியிருக்கிறது நிலைமை?

சிறிலங்காவுடன் அதிகளவிலான வர்த்தகத் தொடர்புகளைக் கொண்ட நாடுகளின் நாணயங்களுக்கெதிராக சிறிலங்கா ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருகிறது. இரண்டரை மாதங்களுக்கான செலவினைச் செய்வதற்கான வெளிநாட்டுச் சொத்துக்கள் மட்டுமே அரசின் கைவசம் உள்ளது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கான வெளிநாட்டுதவிகளும் சர்வதேச நிதிநிறுவனங்களின் உதவிகளும் எட்டாக் கனிகளாகவுள்ளன. அவற்றின் நிபந் தனைகளை நிறைவேற்றமுடியாத அகப் புறச்சிக்கல்களுக்குள் அரசு சிக்கிப் போயுள்ளது. நாடு இவ்வளவிலிருந்தும் மீளவேண்டுமாயின் அரசாங்கம் துணிவான, நேர்மையான தீர்மானங்களை எடுத்து அவற்றை விசுவாசமாகவும் விரைவாகவும் செயற்படுத்த வேண்டும். ஆனால் நடப்பது என்ன? சமாதான முயற்சிகளிலிருந்து நழுவிக்கொண்டும் எதிர்த் தரப்பினரின் நம்பிக்கையினைச் சிதைத்துக்கொண்டும் சீண்டிக்கொண்டும் இருக்கிறது அரசாங்கம். விளைவு என்ன தெரியுமா? அண்மையில் மஹியங் கணையில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு குறிப்பிட்டார். 'மக்கள் அரசிடமிருந்து உதவிகளைப் பெறுவதற்குக் கொஞ்சம் காத்திருக்க வேண்டும்.!'

நாம் மேலே பார்த்ததெல்லாம் மக்கள் பொறுத்திருக்கக்கூடிய சூழல் இருப்பதாகக் காட்டுகின்றனவா? அப்படியாயின் என்ன நிகழப்போகிறது? வீதிகள் மக்களால் நிரம்பவும், அரச அதிகார பீடங்கள் சுற்றிவளைக்கப்படவும் வேளை வருகிறதா? அரசு இதேபோக்கில் போனால் அது நிகழ்ந்துவிடக்கூடும். ஏனெனில் மக்களுக்கு வேறுவழியில்லை. அவர்களின் 'தாங்கும் சக்தி' காலியாகிவிட்டது.



# -தியாகி திலீபன்-


தமிழினத்தின் தலைவிதியை
மாற்ற தன்னுயிரை ஈந்த பெரும் தியாகி!
எமது தமிழ் ஈழத்தின் காந்தி
எங்களன்பு
திலீபனென்றும்
வாழ்வான்!



*தியாகி திலீபன் 17ம் ஆண்டு நினைவு நாள் அலங்கரிப்பு*




உலகின் மிக, மிக குட்டியான நாய் என்ற பெருமை ஸ்லோவோகியா நாட்டை சேர்ந்த டான்கா என்ற பெண் நாய்க்கு கிடைத்துள்ளது. இந்த நாய் மொத்தம் 7 இஞ்ச் நீளம் மட்டுமே வளர்ந்து உள்ளது.இதன் மொத்த உடல் எடை 27 அவுன்ஸ் மட்டுமே. இந்த சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்திருக்கின்றது. படத்தில் அந்த அதிசய நாயை காணலாம்.



உலக மக்களால் சிலந்தி மனிதன் என்று அழைக்கப்படுபவர் ராபர்ட் புதிய சாதனை படைத்துள்ளார். உலக மக்களால் சிலந்தி மனிதன் என்று அழைக்கப்படு பவர் ராபர்ட் (வயது 42). இவர் நேற்று தனது சொந்த நாடான பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உள்ள 59 மாடி கட்டிடத்தில் வெறும் கைகளால் ஏறி புதிய சாதனை படைத்தார். ஏற்கனவே இவர் ஈபிள் டவர், எம்பயர் ஸ்டேட், பெட்ரோனஸ் டவர் உட்பட 30-க்கும் மேற்பட்ட உயரமான கட்டிடங்களில் ஏறி சாதனை படைத்திருக்கின்றார். நேற்று அவர் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி திடீரென பரிஸ் நகர் கட்டிடத்தின் மீது ஏறத் தொடங்கி விட்டார். உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலிசார் அவர் கீழே விழுந்தால் அவரை காப்பாற்ற வலை விரித்திருந்தனர். ஆனால் ராபர்ட் வெற்றிகரமாக கட்டி டத்தின் உச்சிக்கு ஏறி சாதனை படைத்தார்.

பென்சகோலாப் பகுதியில் ஏற்பட்ட 18. செப்ரெம்பர் மாதம் 2004 ஜவன் எனப்படும் சூறா வளியினால் பிக்கப் வண்டி ஒன்று அடித்துச் செல்ல ப்பட்டு நீச்சல் தடாகத்தி னுள்கிடப்பதையும், பத்தி ற்கு மேற்பட்ட துண்டுக ளாக்கப்பட்ட பாலத்தையும் படத்தில் காணலாம்









கிழக்கிலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளர்களுள் ஒருவரும், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உபதலைவர்களுள் ஒருவருமான ஏ.எல்.எம்.சலீம் தமிழ் கிராமமான பாண்டிருப்புக் கிராமத்தில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். பாண்டிருப்பு நாவலர் அறநெறிப்பாடசாலையின் 14ஆவது ஆண்டு நிறைவு விழாவில் அன்னாருக்கு நடுநிலை பிறழாத ஊடகசேவையைப் பாராட்டி அளிக்கப்பட்ட இக்கௌரவத்தின் போது மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் பிரதித்தலைவர் சுவாமி அஜராத்மானந்தஜீ பொன்னாடை போர்த்துவதையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கனகசபை பத்மநாதன் வாழ்த்துப்பத்திரம் வழங்குவதையும் படங்களில் காண்க. அறநெறிப் பாடசாலை அதிபர் கவிஞர் அக்கரைமாணிக்கம், கல்முனைத் தமிழ்பிரிவு பிரதேச செயலாளர் வீ.அழகரெட்ணம், கல்முனை ரோட்டறிகழகத் தலைவர் டாக்டர் திருமதி.புஸ்பலதாலோகநாதன் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர் <u>(படம்,தகவலும்:- ஏ.புஹாது)</u>

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 26-09-2004 அன்று அச்சிட்ப்பட்டு வெளியிடப்பட்டது